

கேடில் கலந்த சோப் ரெக்ஸோனு ஒன்றே. அது உங்கள் சருமத்திற்கு புத்துயிரளிக்கும் பரிசுத்தத்தையும் புதுப்பொலிவையும் தரும்.

தினமும் தவறாமல் ரெக்ஸோனு சோப் உபயோகிக்க ஆரம்பியுங்கள். வெகு சீக்கிரத்திலேயே உங்கள் சருமம் ஆச்சரியமான மாறுதலடைவதை காண்பீர்கள். சருமத்தை சுத்தம் செய்து, மிருதுவாக்கி ஆரோக்கிய மூட்டும் சக்திவாய்ந்த தைலங்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்ட கலப்பு மருந்து கேடில். இது உங்கள் சருமத்தை அதிக ஆரோக்கியமுள்ளதாகவும், அப்பழுக்கற்றதாகவும், திடமாகவும் செய்ய உதவுவதுடன், நீடித்திருக்கும் புதியதொரு சோபையையும் பெறச்செய்யும்.

கேடில் சேர்ந்த ரெக்ஸோனுதான் இதைச்செய்கிறது!



ரெக்ஸோனு சோப்

RP. 30-173 TM


"இவளுக்கு எவ்வளவு அழகிய பற்கள்" என்று போற்றினார்கள்
ஆனால் பல் வைத்தியர்—
"நீ இப்பற்களை எல்லாம் இழக்க வேண்டியதுதான்" என்றார்!
இப்பொழுது உங்கள் பற்கள் எவ்வளவு உறுதியாகவும் அழகாகவும் இருந்தாலும், ஈறுகளில் நோய் ஏற்பட்டுவிட்டால் ஒருவருடைய பற்களை எளிதில் இழக்க நேரிடும். உங்கள் ஈறுகளை கவனித்துக் கொள்ளுங்கள். தவறாமல் எஸ். ஆர். டூத்பேஸ்ட் உபயோகியுங்கள். ஈறுகளை உறுதியாக்கி ஆரோக்கியமுறச்செய்ய பல் வைத்தியர்கள் உபயோகப்படுத்தும் ஸோடியம் ரிஸினோலியேட் இதில் அடங்கியுள்ளது. அன்றியும் பற்களை அழகாகவும், சுத்தமாகவும், வெண்மையாகவும் எஸ். ஆர். டூத்பேஸ்ட் வைத்துக்கொள்கிறது.
உங்கள் பற்களைக் காப்பாற்ற ஈறுகளை பாதுகாத்துக்கொள்ளுங்கள்
கிப்ஸ்
எஸ். ஆர். டூத்பேஸ்ட்
S.R.
FOR TEETH AND GUMS
GSR. 48-60-40 TM


No. 3.

இப்பொழுது தமிழ்நாடெங்கும் நடைபெறுகிறது



அபிமன்யு

ஜூபிடர் தயாரிப்பு


Glaxo
கிளாக்ஸோ குழந்தைகளை
புஷ்டியாக வளர்க்கிறது
என்னைப்போல!
இலவச சாம்பிள்!! பரிசோதனை செய்து பார்க்க இலவச சாம்பிளுக்கு இப்போதே எழுதுங்கள்.
Farex
தபால் பெட்டி 202, பம்பாய்

இதய நோயா?

....என்ன செய்யவேண்டு கூறுவேன்



இவ்வுபாதைகள் அதி
கோரமானவை என்று கண்டு
வேன். மிக அசாதாரணமாகவும்,
ஊணுக்குப் பின் வயிற்றில் அதிர
ணம், உப்புச உணர்வுகளைத் தரும்
அமிலத்தின் சேர்க்கையாலேயே
இவ்வுபாதைகள் ஏற்படுகின்றன.
விஷ அமிலங்களுக்கு மாற்று, எப்
போதும்போல ஜீரண சக்தி வளிப்
பது, என உபகரித்த பிஸ்மாகை
பொசிக செய்கிறேன். சீக்கிரத்தில்
வலி இடைஞ்சலின்றி ஜீரணமாக
உதவுகிறது. இன்றுபரீக்ஷி
யுங்கள்.

உங்களுக்கு வேண்டியது

எல்லா கெமிஸ்டு
களிடமும் ஸ்டோர்
களிலும் பவுடராக
வும் மாத்திரையாக
வும் கிடைக்கும்.

BISMAG

சோல் ஏஜண்டுகள் :

ஜீயாப்ரே மானர்ஸ் & கோ., லிட்.

பம்பாய்-கல்கத்தா-மதராஸ்-லாகூர்

சமயத்தில் வேண்டுவது பலசாலியான மனிதரே!



ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானங்கள்,
ஆந்திரா ஜில்லாக்கள் தமிழ் நாடு
களுக்கு ஏஜண்டுகள் :

ஸீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

பெரம்பூர், செகந்திராபாத்,
பெஜவாடா, மதுரை


எனது ஆல்பத்தில் ஒரு பக்கம்!
போட்டோ ஆல்பத்தின் ஒவ்வொரு பக்கமும் கவர்ச்சிகரமாக விளங்க என்ன வேண்டும்?
தேவைகள் மிகவும் சுலபமானவை. எளிதில் கிடைப்பவை.
முதலாவதாக ஒரு கேவார்ட்ன் ரோல் பிலிம் அல்லது பிளேட்.
இரண்டாவதாக ஒரு கேவார்ட்ன் பேப்பர் இவைகளே.
அலைய்ட் போட்டோகிராபிக்ஸ் லிமிடெட்
பம்பாய் - கல்கத்தா - மதராஸ்
இந்தியாவில் மொத்த விற்பனையாளர்கள்.


வந்தே மாதரம்
ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி
&
ஸ்ரீ திலீப் குமார் ராய்
N.14421
"வந்தே மாதரம்"
"தன தான்ய"
"HIS MASTER'S VOICE"
"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

கல்கி


பொருளடக்கம்

மலர் 7 இதழ் 43 | மே 23 | சர்வதாரி வைகாசி 10

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

நிகழ்ச்சிச் சித்திரம்

- சாஸ்திரி



கல்கி

மலர் 7 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார். | இதழ் 43

என்ன சேதி?

நமது மகிழ்ச்சி

இந்தியாவின் முதலாவது இந்திய கவர்னர் ஜெனரலாக ராஜாஜி நியமிக்கப்பட்டிருப்பது பற்றி நம்முடைய மகிழ்ச்சியை ஏன் வெளியிடவில்லையென்று பல நேயர்கள் எழுதிக் கேட்டிருக்கிறார்கள். "தக்க சமாதானம் சொல்ல வேண்டும்!" என்று சிலர் வற்புறுத்தியிருக்கிறார்கள். காரணம் வேறு ஒன்றும் இல்லை. நாம் அதிகமாக சந்தோஷத்தை வெளியிட்டால் அது காரணமாக யாரேனும் துக்கப்படப் போகிறார்களே என்றுதான் நம்முடைய மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்தி அடக்கி வைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் நமது மகிழ்ச்சியை அவ்விதம் அடக்கி வைத்திருப்பதினால் நம் நேயர்கள் பலர் வருத்தமடைந்திருப்பதாகத் தெரிகிறது. ஆகையால் இந்த அடக்குமுறையும் அவ்வளவு உசிதமான காரியமல்லவென்று ஏற்படுகிறது. எல்லாவற்றையும் முன்னிட்டு, வருகிற ஜூன் மீ 20உ வெளியாகும் "கல்கி" இதழில் நமது மகிழ்ச்சியை ஓரளவு வெளியிட்டு விடலாம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். ஜூன் 20உ "கல்கி" இதழ் ராஜாஜி இதழாகத் திகழும் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

கஷ்ட நஷ்டம் யாருக்கு?

தேசத்தின் புனருத்தாரண வேலைகளை நிறைவேற்ற அவகாசம் கொடுங்கள்; கொஞ்ச காலத்துக்கு வேலை நிறுத்தம் செய்ய வேண்டாம் என்று நமது மாபெரும் தலைவர்கள் கேட்டுக் கொண்ட வண்ணம் இருக்கிறார்கள். தொழிலாளிகளும் வேலை நிறுத்தம் செய்த வண்ணம் இருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் இந்தியாவில் எங்கேயாவது ஓரிடத்தில் வேலை நிறுத்தம் நடக்கத்தான் செய்கிறது. மேற்படி வேலை நிறுத்தங்களால் யாருக்குக் கஷ்டம்? யாருக்கு நஷ்டம்? இந்தக் கஷ்ட நஷ்டக் கணக்கை யாராவது பரிசீலனை செய்திருப்பார்களா? வேலை நிறுத்தம் செய்வதால் முதலாளிகளுக்குக் கிடைக்கும் லாபத்தில் கொஞ்சம் குறையும். வேலை நிறுத்தத்தைத் தூண்டியவர்கள் தங்களுடைய விபரீத முயற்சி வெற்றி பெற்றதைக் குறித்துச் சந்தோஷம் அடையலாம். எனவே கஷ்ட நஷ்டம் முதலாளிகளுக்கோ அல்லது வேலை நிறுத்த கர்த்தாக்களுக்கோ இல்லை. உண்மையில் வேலை நிறுத்தங்களால் நஷ்டம் அடைவோர் இந்திய ஜனங்கள். கஷ்டம் அடைவோர் ஏழைத் தொழிலாளிகள். அதாவது கஷ்ட நஷ்டம் தேசத்துக்குத்தான்.

இந்த உண்மையை, பம்பாயில் நடந்த இந்திய தேசியத் தொழிலாளர் சங்க காங்கிரஸில் பேசிய நமது தலைவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதிக வசதிகளைக் கோருவதற்கு முன் அதிக பொருள் உற்பத்தியைக் காட்டுங்கள் என்று காங்கிரஸ் அக்ராசனர் பாபு ராஜேந்திரப் பிரசாதர் சுருங்கக் கூறி விளங்க வைத்திருக்கிறார். மற்றும் தேசத்தின் க்ஷேமமும் தொழிலாளிகளின் க்ஷேமமும் பிரிக்க முடியாதவை என்பதையும் தலைவர்கள் ஒப்புக் கொண்டிருப்பதிலிருந்து, தொழிலாளிகளிடம் அவர்களுக்குள்ள அன்பும் பரிவும் தெரிகின்றன. தொழிலாளிகளுக்குப் பல விதத்திலும் பாதுகாப்புகள் அளிக்க வேண்டியது அத்தியாவசியம் என்பதையும் தேசியத் தொழிலாளர் சங்கக் காங்கிரஸ் தலைவர் வற்புறுத்தியிருக்கிறார்.

தொழிலாளிகள் தவறான பாதையில் இழுத்துச் செல்லப்படாமல் தடுக்கவும், அவர்களின் எதிர்காலம் சுபிட்சமாக

இருப்பதற்குற்ற உருவான முறைகளைக் கைக்கொள்ளவுமே ஒரு வருஷத்துக்கு முன் தேசியத் தொழிலாளர் காங்கிரஸ் அமைக்கப்பட்டது. அதன் முதலாவது வருஷ மகா நாட்டுக்கே ஆயிரக் கணக்கான பிரதிநிதிகள் வந்திருப்பதிலிருந்து, அது தொழிலாளிகளிடை செல்வாக்கு பெற்று வருவது தெரியவில்லையா?

உரிமைப் போர்

நாம் சுதந்திரம் பெற்றதுடன் நமது உரிமைப் போராட்டம் முடிந்து விட்டது என்று நினைப்பவர்கள், சமீப காலமாக வெளி நாடுகளிலிருந்து வரும் செய்திகளைக் கண்டு ஏமாற்றம் அடைவார்கள். இந்தியாவை ஆட்சி புரிந்து வந்த அன்னியர்களிடமிருந்து இந்தியர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றிச் சுதந்திரம் அடைந்துள்ளனர். எனினும் இந்தியா சமாளிக்க வேண்டிய பிரச்னை அத்துடன் முடியவில்லை. உள்நாட்டுப் பிரச்னைகள் ஒருபுறமிருக்க, கடல் கடந்துள்ள இந்தியர்களின் உரிமைகளுக்காகவும் இப்போது இந்தியா போராட வேண்டியிருக்கிறது. தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள் தங்களுடைய உரிமைகளுக்காகச் சத்தியாக்கிரகம் செய்து வருகிறார்கள். அங்குதான் நிலைமை அவ்விதம் இருக்கிறதென்றால், அடுத்துள்ள நாடுகளில் கூட இந்தியர்கள் துன்பத்திற்குள்ளாக நேர்ந்திருக்கிறது.

மலாயாவிலும் பர்மாவிலும் குறிப்பாக இந்தியர்களின் சொத்துக்களுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இலங்கையில் கூட இந்தியர்களின் உரிமைகளுக்குப் பாதுகாப்பு ஏற்படவில்லை. இந்தியர்களின் உரிமைகள் விஷயமாக இந்திய சர்க்காருக்கும் பர்மா, இலங்கை சர்க்கார்களுக்கும் பேச்சு வார்த்தைகள் நடந்துள்ளன வெனினும், அவற்றால் எவ்வளவு தூரம் பலன் ஏற்பட்டிருக்கிறது என்பது இன்னமும் தெரியவில்லை.

இலங்கை இந்தியர் கோரிக்கை

சென்ற வாரம் இலங்கையில் நடந்துள்ள இந்தியர் காங்கிரஸில் இந்தியர்களுக்குப் பிரஜா உரிமையும் வயது வந்தவர்களுக்கு வோட்டுரிமையும் கோரியிருக்கிறார்கள். இலங்கையில் நிரந்தரமாக இருக்கும், அதாவது இலங்கையைத் தாயகமாகக் கொண்டிருக்கும் இந்தியர்களுக்குத்தான் பிரஜா உரிமை கோருகின்றனர். ஏககாலத்தில் தாங்கள் இந்தியப் பிரஜையாகவும் இலங்கைப் பிரஜையாகவும் இருக்க விரும்புவதாய்ச் செய்யப்படும் துஷ்பிரசாரத்தை இலங்கை இந்தியர் காங்கிரஸ் கமிட்டி அறிக்கை பலமாகக் கண்டித்திருக்கிறது.

பாஷை, பண்பாடு, பழக்க வழக்கங்கள் முதலியன முற்றிலும் வேறாக உள்ள அன்னிய நாடுகள்கூட நியாயமான நிபந்தனைகளின் மீது பிறநாட்டினருக்குப் பிரஜா உரிமை அளிக்கின்றன. அப்படியிருக்கப் பண்பாடு, பழக்க வழக்கங்கள் முதலியன சம்பந்தப்பட்ட வரையில் நெருங்கிய தொடர்புள்ள பர்மா, இலங்கை முதலிய நாடுகள், — இந்தியாவுக்கும் இந்தியர்களுக்கும் கடமைப்பட்டுள்ள நாடுகள், தங்களுக்காகப் பல பல வருஷங்களாய் உழைத்துள்ள இந்தியர்களுக்கு உரிமை வழங்க மறுப்பதும், அவ் விஷயமாகப் பல்வேறு வியாக்கியானங்களில் ஈடுபடுவதும் வருந்தத்தக்க காரியங்கள் ஆகும். எனவே கடல்கடந்துள்ள இந்தியர்களின் சொத்துரிமை, பிரஜா உரிமை முதலியவைகளை யொட்டி இந்திய சர்க்காருக்கும் சம்பந்தப்பட்ட மற்ற சர்க்கார்களுக்கும் சந்தேகத்துக்கு இடமில்லாத நிர்ணயமான ஓர் உடன்பாடு ஏற்பட்டாலன்றி, வெளிநாடுகளிலுள்ள இந்தியர்கள் நிம்மதியாக வாழ வகையிராமற் போகும்.

சீக்கிரம் வெளியாகுமா?

பதினைந்து லட்சம் சதுர மைல்கள் விஸ்தீரணமுள்ள இந்தியாவை விட்டு விட்டுப் பிரிட்டிஷார் வெளியேறி விட்டார்கள். ஆனால் இந்தியாவில் இருநூறு சதுர மைல்கள் கூட விஸ்தீரணமில்லாத பிரதேசத்தை விட்டுவிட்டு வெளியேறப் பிரஞ்சுக்காரர்களுக்கு மனமில்லை. அவ்விஷயமாகச் சென்ற பல மாதங்களாய் இந்திய சர்க்கார் பிரதிநிதிகளுக்கும் பிரஞ்சு சர்க்கார் பிரதிநிதிகளுக்கும் சமரசப் பேச்சு நடந்து வந்தது. சிக்கல் எதுவும் இல்லாத தெளிவான இவ்விஷயத்தை யொட்டிப் பிரஞ்சு சர்க்கார் பேரம் பேச என்ன இருக்கிறது? இதின் மற்றொரு வேடிக்கை என்னவெனில் இந்தியாவில் பிரஞ்சுப் பிராந்தியத்தில் உள்ளவர்கள் சுதந்திரம் வேண்டுமென்று கேட்பதாகவும் அடிக்கடிக் காரியங்கள் ஜோடிக்கப் படுகின்றன! எனினும் அவ்விஷயமாக இந்திய - பிரஞ்சு சர்க்காருக்கு ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் கூடிய சீக்கிரம் வெளியாகலாம் என்று ஒரு செய்தி கூறுகிறது. அப்படியே அதிக தாமதமின்றி வெளியானால், இந்தியாவைப் பிடித்துள்ள தொல்லைகளில் ஒன்று ஒழிந்தது என்று மகிழ்ச்சி யடையலாம்.

காப்பாற்றுவாராக!

ஐக்கிய நாடுகள் சபையைத்தான் சொல்லுகிறோம். இதுவரை அது தொட்ட காரியங்களில் எது உருப் பட்டது? எத்தனையோ மாதங்களாக மலையைக் கெல்லி வரும் அந்தச் சபையால் ஓர் எலியைக்கூடப் பிடிக்க முடியவில்லை!

தென்னாப்பிரிக்காவில் இந்தியர் களுக்கு இழைக்கப்படும் அநீதியைக் கண்டித்து மேற்படி சபையில் நிறை வேறிய தீர்மானம் குப்பைக் கூடைக் குப் போய்விட்டது. எனவே, தன் கையே தனக்கு உதவி என்ற ரீதியில் அங்குள்ள இந்தியர்கள் நடந்து கொள்ள முற்பட்டிருக்கிறார்கள். அங்கு நிற வேற்றுமையை அடிப் படையாகக் கொண்ட அக்கிரமமான சட்டங்களை எதிர்த்துத் தங்களுடைய தர்ம நியாயமான உரிமைகளை ஸ்தா பித்துக் கொள்வதற்காகச் சத்தியாக் கிரகம் செய்து சிறை செல்லும்படி யான நிலைமை இந்தியர்களுக்கு ஏற் பட்டிருக்கிறது.

டச்சு ஏகாதிபத்தியத்தின் அட்டூழி யங்களைக் கண்டித்து அந்தச் சபை யில் முறையிட்டுக் கொண்ட இந்தோ னேஷ்யாவின் இன்றைய நிலைமை யென்ன? இந்தோனேஷ்யாவுக்கு 'நீதி' வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் சபையால் நியமிக்கப்பட்ட கமிஷன் அங்கு சென்றபின்தான் டச்சுக்காரர் களின் இரும்புப் பிடி அதிக பலம் பெற்றிருக்கிறது.

காஷ்மீர் பிரச்னையை யொட்டி நாலு மாத காலத்துக்கு மேலாக அச்சபை யில் நடந்த நாடகத்தைப் பொதுவாக உலகமும் குறிப்பாக இந்தியாவும் மறக்கவே முடியாது. எனினும் காஷ் மீர விஷயம் இன்னும் தீர்ந்தபாடில்லை.

● ● ●

பல வருஷங்களாகக் குமுறிக் கொண்டிருந்த பாலஸ்தீனப் பிரச்னை யைத் தீர்க்க ஐக்கிய நாடுகள் சபை முயற்சி எடுத்துக் கொண்டதன் பலனாக இன்று பாலஸ்தீனம் பற்றி எரிந்து வருகிறது!

பாலஸ்தீனம் சம்பந்தப்பட்ட வரை யில் வல்லரசுகளின் மனமாற்றமும் தடுமாற்றமும் உலக சரித்திரத்தி லேயே வெட்கக்கேடான ஒரு படல மாகும்.

பாலஸ்தீனப் பிரிவினைக்கு விதை விதைத்த பிரிட்டிஷார், இன்று அந்தத் தேசம் எக்கேடு கெட்டுப் போகட்டும் என்று கை கழுவிவிட்டுப் போய் விட்டார்கள்.

சென்ற முப்பது வருஷங்களாகப் பாலஸ்தீனத்தின் தர்மகர்த்தாக்களாக இருந்து வந்த பிரிட்டிஷார், பாலஸ் தீனத்தின் இன்றைய படுகளமான நிலைமைக்குத் தாங்கள் பொறுப் பாளிகள் அல்லவென்று கூறமுடியாது.

பாலஸ்தீனத்தில் யூதர்களுக்குச் சொந்தமாக ஒரு ராஜ்யத்தைச் சிருஷ் டிப்போம் என்று உலகம் அறியப் பிர கடனம் செய்தவர்கள் பிரிட்டிஷார் தான். அங்கு அராபியர்களின் உரிமை களுக்குப் பங்கம் விளைவிக்க மாட் டோம் என்று உறுதிமொழி கூறியவர் களும் பிரிட்டிஷார்தான்.

அப்படியிருக்க, இன்று பாலஸ் தீனத்தில் யூதர்களும் அராபியர்களும் தங்கள் தங்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஈடுபட் டுள்ள கோரமான யுத்தத்திற்குத் தாங்கள் ஜவாப்தாரியல்ல என்று பிரிட்டிஷார் எவ்வாறு கூறமுடியும்?

யூதர்களின் நல்லெண்ணத்தைப் பெற வேண்டும் என்பதற்காக முதலில் பிரிவினையை ஆதரித்த ட்ரூமன் சர்க் கார், பிரிவினைக் கொள்கையிலிருந்து திடீரென்று நழுவியதைக் கண்டு உல கமே திடுக்கிட்டது. அவ்வாறு நழுவி யது அரசியல் தற்கொலையாகும் என்று அமெரிக்க அரசியல் நிபுணர்கள் சுட்டிக் காட்டியது அமெரிக்க பிரசி டெண்ட் ட்ரூமனை மிகவும் தர்மசங்கட மான நிலையில் கொண்டு வந்து விட்ட தாக அமெரிக்கப் பத்திரிகைகள் கூறின.

அவை கூறியது உண்மை என்பது இப்போது நிரூபணமாகி விட்டது.

அதாவது பாலஸ்தீனத்தில் இப் போது ஏற்பட்டுள்ள யூதர்களின் அர சாங்கமான இஸ்ரேல் சர்க்காரை

உலகிலே அமெரிக்காதான் முதன் முதலாக அங்கீகரித்திருக்கிறது!

யூதர்கள் வரவேற்ற பிரிவினைக் கொள்கையிலிருந்து நழுவிய அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபையின் அபிலாஷைக்கு விரோதமாக ஏற்பட்டுள்ள இஸ்ரேல் சர்க்காரைச் சிறிதும் தாமதமின்றி விழுந்தடித்துக் கொண்டு ஆதரிக்குமென யார் நினைத்திருக்க முடியும்?

உண்மை என்னவெனில், அமெரிக்க அரசியல் நிபுணர்கள் கூறியது போல் ட்ருமன் அரசியல் தற்கொலை செய்து கொள்ள விரும்பவில்லை. பாலஸ்தினைப் பிரிவினையை முதலில் ஆதரித்து விட்டுப் பிறகு தனது போக்கை மாற்றிக் கொண்ட ட்ருமன், இப்போது யூதர் சர்க்காரை அங்கீகரித்ததன் மூலம் தமது தவறுக்குப் பிராயச்சித்தம் செய்து கொண்டிருக்கிறார்!

மேற்படி பிரிவினையை முதலில் ஆதரித்துப் பிறகு எதிர்த்த அமெரிக்கா, இஸ்ரேல் சர்க்காரை அங்கீகரித்ததன் மூலம் பிரிவினையை மறைமுகமாக ஒப்புக் கொள்கிறது என்றாகிறது. இந்நிலைமையில் அமெரிக்காவின் மனமாற்றம் அரபு நாடுகளுக்கு இடி இடித்தது போல் இருப்பதில் ஆச்சரியமில்லை.

யூதர் சர்க்காரை அமெரிக்கா ஆதரிக்கிறது ரொம்ப சரி என்று அமெரிக்க ஜனப்பிரதிநிதிகள் ஆமோதித்திருப்பதுடன், மேற்படி சர்க்காருக்கு யுத்த தளவாடங்கள் அனுப்புவதில் எவ்வித தடையும் இருக்கக் கூடாதென்றும் வற்புறுத்துகிறார்கள்.

யூதர்களுக்கு விரோதமாக எகிப்து படையெடுத்திருப்பதையும் அமெரிக்கர்கள் கண்டிக்க முற்பட்டிருக்கின்றனர்.

உலக ஜனங்களின் சுதந்திரத்துக்காக நேச தேசங்களுடன் சேர்ந்து யுத்தம் செய்ய மறுத்த எகிப்து, இப்போது அரபுகளின் சுதந்திரத்துக்காகப் படையெடுப்பதன் கருத்து விளங்கவில்லையென்றும் ஓர் அமெரிக்க செனேட்டர் கூறுகிறார்.

* * *

இஸ்ரேல் சர்க்காரை ருஷ்யாவும் அங்கீகரித்திருக்கிறது.

அது மாத்திரமன்று. அதற்குள் ருஷ்யா யூதர் சர்க்கார் தலைநகரான டெல் அவிவ் என்ற இடத்திலும் ஜெருசலத்திலும் தன் ஸ்தானீகர் காரியாலயங்களையும் அமைத்துக் கொண்டிருக்கிறது.

இதிலிருந்து யூதர்களைத் திருப்தி செய்வதில் அமெரிக்காவும் ருஷ்யாவும் போட்டி போடுகின்றன என்பது வெளியாகிறது.

பாலஸ்தினப் பிரிவினையை ருஷ்யா ஆதி முதல் ஆதரித்து வந்திருப்பதால் யூதர்கள் சர்க்காரை ருஷ்யா அங்கீகரித்திருப்பதைக் குறித்து எத்தகைய வியாக்கியானத்துக்கும் இடமில்லை.

பிரிட்டனோவெனில், இஸ்ரேல் சர்க்காரை இன்னும் அங்கீகரிக்கவில்லை. பாரசீக எண்ணெயினும், அதன் காரணமாக அரபு நாடுகளின் நட்பினும் நாட்டம் கொண்டுள்ள பிரிட்டன், பாலஸ்தினத்தில் மூண்டுள்ள யுத்தத்தின் போக்கை நிச்சயமாகத் தெரிந்து கொண்டபின் ஒரு முடிவுக்கு வரும் எனலாம். அதாவது யுத்தத்தில் இறுதியாக எந்தக் கை ஓங்குகிறதோ, அதற்கு ஆதரவளிக்க பிரிட்டன் தயங்காது!

பச்சோந்தி, இயற்கையின் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு அடிக்கடி தன்னுடைய நிறத்தை மாற்றிக் கொள்ளுமாம். ஆனால் வல்லரசுகள் அரசியல் சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் தங்களுடைய கொள்கையை மாற்றிக் கொள்ளும் வேகத்துடன் பச்சோந்தி போட்டி போட முடியுமா என்பது சந்தேகம்தான்!

* * *

சென்ற பல வருஷங்களாகவே பாலஸ்தினத்தில் போர் நடந்து வருகிறதெனினும், அங்கு அராபியர்களின் பலாத்காரமோ அல்லது யூதர்களின் பலாத்காரமோ மிதமிஞ்சி விடாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பிரிட்டிஷாருக்கு இருந்து வந்தது.

ஆனால் இந்த மாதம் பதினைந்தாம் தேதி இரவு பன்னிரண்டு மணியோடு பாலஸ்தினத்தில் பிரிட்டிஷாரின் மேற்பார்வை முடிந்து அந்த வினாடியிலிருந்து யூதர்கள் சர்க்காரும் ஏற்பட்டு விட்டது.

இனி எவ்வித தடையுமின்றி அராபியர்களும் யூதர்களும் தங்களுடைய பலத்தைச் சோதித்துக் கொள்ளலாம் அல்லவா? அவர்களும் தங்களுடைய பலத்தைச் சோதித்துக் கொள்ள ஆரம்பித்து விட்டார்கள்.

அரபு விமானங்களை யூதர்களின் தலைநகர் மீது வெடி குண்டுகளை வர்ஷித்து வருகின்றன.

ஐந்து அரபு நாடுகளின் துருப்புகளும் பாலஸ்தீனத்திலுள்ள யூதர் பிரதேசங்களின் மீது பாய முற்பட்டிருக்கின்றன. அவை யூதர்களுக்குச் சொந்தமான சில பிரதேசங்களைக் கைப்பற்றியிருப்பதாகவும் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

யூதர்களும் தங்கள் கட்சியில் மிகுந்த நம்பிக்கையுடன் உக்ரமாகப் போராடி வருகிறார்கள்.

அமெரிக்கா உள்பட பல ஐரோப்பிய நாடுகளின் அனுதாபமும் யூதர்களின் பக்கம்தான் இருக்கும் என்பதற்கு ஜோஸ்யம் பார்க்க வேண்டியதில்லை.

எனவே, அரபு — யூதர்களுக்குள் ஆரம்பமாகியுள்ள இந்த யுத்தம் உலக மகாயுத்தமாக மாறுவதற்கு அதிக காலமாகாது.

ஐக்கியநாடுகள் சபையை ஆட்டி வைக்கும் வல்லரசுகள் பாரபட்சமின்றிப் பாலஸ்தீனப் பிரச்னையைப் பரிசீலனை செய்து இரு சாராருக்கும் நீதி வழங்கும் வகையில் ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

அந்த முடிவை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரும் விஷயத்தில் அவை உறுதியுடன் நடக்க வேண்டும்.

சுயநல நோக்கம் கொண்டு அவைகள் கொள்கையை அடிக்கடி மாற்றிக் கொள்ளும் விபரீதத்தை ஒழிக்கவேண்டும்.

அவ்விதமாயின் ஐக்கிய நாடுகள் சபை எளிய நாடுகளின் நம்பிக்கையைப் பெற முடியும். பின்னர் அது பாலஸ்தீனப் பிரச்னையை மாத்திரமல்ல, உலக அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய எந்தப் பெரிய பிரச்னையையும் வெற்றிகரமாகச் சமாளிக்க முடியும்.

“ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக” இரண்டாவது மகா யுத்தத்தின் சமயம் வல்லரசுகள், யூதர்களுக்கு [illegible] போராடிக் கொண்டனர் [illegible] பார்த்துக் கொண்டு [illegible].

“[illegible] அமைதியும் பாதுகாப்பும்” என்று ஐக்கிய நாடுகள் சபையும் அமைதியைப் பார்த்துக் கொண்டு [illegible] ஆதரிக்க முடியும்.

இந்தப் பிரச்னையை மேற்படி சபை தீர்க்க முடியவில்லையெனில், பின்னர் அது கடைசி கடைசியாக ஒரு பிரச்னையைத் தீர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். அந்தச் சபை இனி இருப்பதா அல்லது ஒழிவதா என்பதே அந்தப் பிரச்னையாக இருக்கும்!

• • •

அன்பு உருவான ஏசுநாதர் அவதரித்த பாலஸ்தீனத்தில் சென்ற ஆயிர வருஷ காலமாக நடந்து வந்துள்ள மதப் போராட்டங்களைக் கவனிப்பவர்கள் மனம் பதறாமல் இருக்க முடியாது. மேற்படி போராட்டங்கள் அளவற்ற செல்வத்தையும் எண்ணிக்கையற்ற உயிர்களையும் பலி கொண்டிருக்கின்றன.

அந்த பாலஸ்தீனத்தில் இன்று மீண்டும் பயங்கரமான போர் ஆரம்பமாகியிருப்பது சகிக்க முடியாத விஷயமாகும்.

பாலஸ்தீனத்தில் அராபியர்கள் கோரும் சுதந்திர உரிமையை எவரும் மறுக்க முடியாது.

பொருளாதாரத் துறையில் பாலஸ்தீனத்தின் இன்றைய முன்னேற்றகரமான நிலைமைக்கும் பண்பாட்டுக்கும் யூதர்கள்தான் காரணஸ்தர்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை.

“இரண்டாயிரம் வருஷங்களாகத் தாயகமின்றித் தவித்து வரும் நாங்கள் பாலஸ்தீனத்தில் யூதர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் இடங்களைச் சேர்த்து யூதர் நாட்டை அமைத்தே தீருவோம்” என்று யூதர்கள் திடசங்கல்பம் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு உலகத்திலுள்ள யூதர்களின் பூரண ஆதரவும் இருக்கிறது.

எனவே, பரஸ்பரம் நேர் முரணான நோக்குள்ள அரபு — யூதர்களிடை துவேஷம் கொழுந்து விட்டெரிந்து வருகிறது. மேற்படி துவேஷத்தைத் தீர்த்து அரபு—யூதர்களிடை நட்பும் பாலஸ்தீனத்தில் அமைதியும் ஏற்படும்படி செய்ய வேண்டியது உலக வல்லரசுகளின் கடமையாகும்.

அந்தக் கடமையை நிறைவேற்ற உலக வல்லரசுகளுக்கு இன்றைய நிலைமையிலும் சந்தர்ப்பம் இருக்கிறது.

அவர்கள் அந்தக் கடமையை வல்லரசுகள் நிறைவேற்றத் தவறி [illegible], பின்னர் பாலஸ்தீனத்தை [illegible] உலகமனைத்தும் [illegible] காப்பாற்ற வேண்டும்!

மயிலை சங்கீத சபையில் குமாரி ஹேமாவின் நடனம்

ஆடும் பொற்சிற்பம் என்றும் – பாடும் சொற்சித்திரம் என்றும் புகழ் பெற்றுள்ள குமாரி ஹேமா மாலினி நடனம் ஆடினாள். வெகு நாகரிகமாகவே மயிலைப் பதியில் வந்து ஆனந்த நடனம் ஆடினாள். ஜகஜ்ஜோதியான தீபாலங்காரங்களினாலும் பல வர்ணத் தோரணங்களினாலும் ஜொலித்த மயிலை சங்கீத சபை மேடையில் தோன்றி, சகோதரி பத்மினி அழகாய்ப் பாட, ஆசிரியர் ராமய்யாப் பிள்ளை அற்புதமாய் ஜாலரா போட, 'தக் திட திடதாம் திக் திட திடதை' என்று அபாரமாய் ஆடினாள்!

சென்ற ஏப்ரல் 29ல் இரவு 9-30க்கு ஆரம்பமாகி 11-30க்குக் கச்சிதமாய் முடிந்த மேற்படி வைபவம் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. மயிலை சங்கீத சபையின் முன் வரிசைகளில் அன்று வீற்றிருந்தவர்கள் சிறந்த ரஸிகத் தன்மை வாய்ந்தவர்கள். புதுடில்லியிலிருந்து விஜயம் செய்திருந்த லேடி மவுண்ட் பேட்டன் என்ன, சென்னைக் கவர்னர் தம்பதிகள் என்ன, ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் என்ன, கனம் கோபால ரெட்டி, மேயர் யூ. கிருஷ்ண ராவ், கனம் சீதாராம ரெட்டி, ஸ்ரீமதி குட்டியம்மாளு அம்மாள் ஆகியவர்கள் என்ன, போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஸ்ரீ வி. கே. விஜயராகவன் என்ன, — இத்தகைய பிரமுகர்களில் ஒருவராவது நாட்டியம் முடிந்து திரை விழுந்து மங்களம் பாடப்படும் வரையில் இடத்தை விட்டு எழுந்திருக்கவில்லை. லேடி மவுண்ட் பாட்டன், கவர்னர் தம்பதிகள், கனம் மந்திரிகள், ரஸிகமணி டி. கே. சி. உள்ளிட்ட சபையோர் அடிக்கடி கரகோஷம் செய்து குமாரி ஹேமாவை உற்சாகப் படுத்தினார்கள். இப்படிப்பட்ட மகத்தான சபையில் ஒரு தடவை கூடச் 'சபாஷ்' போடாமலும், கரகோஷம் செய்யாமலும், 'சிவனே' என்று உட்கார்ந்திருந்த ஒரே ஒரு மனிதர் இருந்தார். அவர் தான் சென்னை மாகாணப் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஸ்ரீ வி. கே. விஜயராகவன் அவர்கள். குமாரி ஹேமா அற்புதமான ஜதி வரிசைகளைச் சாமர்த்தியமாக ஆடிக் காட்டிய போதும் சரி, அழகிய பதங்களுக்கு சுவையான அபிநய பாவங்களைப் பிடித்துக் காட்டிய போதும் சரி, ஸ்ரீ விஜயராகவன் ஐ. சி. எஸ். மட்டும் எதற்காக ஒரே சோக பாவத்துடன் உட்கார்ந்திருந்தாரோ, தெரியாது! கச்சேரி மங்களகரமாக முடிந்து லேடி மவுண்ட் பாட்டனும் கவர்னர் தம்பதிகளும் விடை பெற்று வெளியில் சென்று காரில் ஏறிய பிறகுதான் ஸ்ரீ விஜயராகவனுடைய முகத்தில் மலர்ச்சியைக் காண முடிந்தது! போலீஸ் அதிகாரியாகவும் அதே சமயத்தில் கலைவாணியின் தந்தையாகவும் இருப்பது கடினமான பொறுப்புத்தான் போலும்!

அன்று மேடையில் ஏறி லேடி மவுண்ட் பாட்டன் பேசிய பேச்சு சங்கீத சபைகளில் பேசுவோர் எப்படிப் பேச வேண்டும் என்பதற்கு உதாரணமாயிருந்தது.

"எனக்குப் பரத நாட்டியத்தைப் பற்றியும் கர்நாடக சங்கீதத்தைப் பற்றியும் ஒன்றும் தெரியாது" என்றாவது, "என்னை எதற்காகப் பேசச் சொன்னார்கள் என்று தெரியவில்லை" என்றாவது மூக்கால் அழுது கொண்டு லேடி மவுண்ட்பாட்டன் ஆரம்பிக்கவில்லை. அந்த விஷயங்களைப்பற்றி ரொம்பத் தெரிந்தவர் மாதிரி நடித்து அதிகப் பிரசங்கம் செய்யவும் இல்லை. "இந்த அழகான நாட்டியத்தைக் காணும் அதிர்ஷ்டம் எனக்குக் கிடைத்தது பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். மயிலை சங்கீத சபைக்கும் அதன் தலைவருக்கும் மிக்க வந்தனம். குமாரி ஹேமா மேலும் மேலும் இந்த அற்புதமான கலையை வளர்த்துப் புகழ் பெற வேணுமென்று வாழ்த்துகிறேன்" என்று கச்சிதமாக ஐந்தாறு வாக்கியங்களில் பேச்சை முடித்துவிட்டு, ஒரு சிறிதும் ஆர்ப்பாட்டமில்லாமல் மேடையிலிருந்து இறங்கிச் சென்றார். "பர்த்தாவுக்கேற்ற பத்தினி தான்!" என்று சபையோர் ஒரு முகமாகத் தீர்ப்பளித்தார்கள்.

குமாரி ஹேமா மாலினிக்கு லேடி மவுண்ட் பாட்டன் கூறிய ஆசி மொழிகளைக் "கல்கி" வாசகர்களோடு சேர்ந்து நாம் மனப் பூர்வமாக ஆமோதிக்கிறோம்.

பரீட்சை என்னும் பாதகம்



மூன்று வருஷங்களுக்கு முன்னால் நடந்த ஒரு சம்பவம். ஒரு ஊரில் ஒரு கலியாணம் நடந்தது. கலியாணத்துக்கு வந்திருந்த விருந்தாளிகள் ஒரு ஜாகையில் தங்கியிருந்தார்கள். சந்தனம் பூசிக்கொண்டு வெற்றிலைப் பாக்கு மென்று கொண்டு குஷாலாகப் பேசிக்கொண்டு இரவு வெகு நேரம் வரையில் காலம் கழித்தார்கள். பேச்சினிடையே "உங்கள் பையனுக்குப் பரீட்சை பாஸ் ஆகிவிட்டதா?" என்று ஒருவரை யொருவர் கேட்டுக் கொண்டார்கள். சிலர் "ஆகிவிட்டது" என்றார்கள். சிலர் "இன்னும் தெரியவில்லை!" என்றார்கள். பிறகு விளக்குகளை அணைத்துவிட்டுப் படுக்கச் சென்றார்கள். படுத்துச் சிறிது நேரத்துக்கெல்லாம் கதவு தடதட வென்று இடிக்கப்பட்டது. "யார்?" "என்ன?" என்று அரைத் தூக்கமா யிருந்தவர்கள் கேட்டார்கள். "தந்தி வந்திருக்கிறது!" "யாருக்கு?" "சிவராம சுந்தரம் பிள்ளைக்கு!" குறிப்பிட்ட நபர் தூக்கி வாரிப் போட்டுக்கொண்டு எழுந்தார். தந்தியை வாங்கிப் படித்தார். "பையன் குளத்தில் விழுந்து இறந்தான்! உடனே வரவும்!" என்று தந்தியில் எழுதியிருந்தது. "ஐயோ! ஐயோ!" என்று தகப்பனார் அலறி அடித்துக் கொண்டு ஓடினார். பிற்பாடு விசாரித்ததில், பையனுடைய தற்கொலைக்குக் காரணம் அவன் காலாவது பாரம் பரீட்சையில் தேறாதது தான் என்று தெரிய வந்தது!!

சென்ற வருஷத்தில் மூன்று பெண் குழந்தைகள் பரீட்சையில் தேறாததற்காகக் கோயமுத்தூரில் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போன விவரம் நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

ஆயிற்று; இந்த வருஷத்துக்கு இனம் பிள்ளைகளின் தற்கொலை சீசன் ஆரம்பமாகி விட்டது! ஒரு பையன் தற்கொலை செய்து கொண்டதாகச் செய்தி வந்து விட்டது! இன்னும் எவ்வளவு வரப்போகிறதோ?

இத்தகைய தற்கொலைப் பாதகத்துக்கு யார் ஜவாப்தாரி? நம் கல்வி முறைக்குக் காரண பூதரான மெக்காலே ஜவாப்தாரி; அந்தக் கல்வி முறையை நடத்தி வைக்கும் கல்வி இலாகா அதிகாரிகள் ஜவாப்தாரி; பாட திட்டம் வகுத்தவர்கள் ஜவாப்தாரி; உபாத்தியாயர்கள் எல்லாரும் ஜவாப்தாரி; எல்லாருக்கும் மேலாக அந்தந்தப் பரீட்சைக் கேள்விகள் தயாரிக்கிறார்களே, அந்தப் புண்ணிய புருஷர்களுக்கு அதிகமான பொறுப்பு இல்லாமல் போகுமா?

* * *

பரீட்சை தேறாததற்காகத் தற்கொலை செய்து உயிரைப் போக்கிக் கொள்ளுவது மகா மூடத்தனம் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அத்தகைய மனோ நிலையைப் பள்ளிக்கூடச் சூழ்நிலை உண்டாக்கி விடுகிறது. தற்கொலை செய்து கொள்ளுவது மட்டுமா? உடல் மரணத்தைக் காட்டிலும் கொடிய பரிதாபகரமான ஆத்மாவின் மரணம் எத்தனை பேருக்கு நேரிடுகிறது! எத்தனை பிள்ளைகள் மானம் போய் விட்டதாக எண்ணி உள்ளம் குன்றிச் சொல்லொணாத தாக வேதனையை அடைந்து தவிக்கிறார்கள்? அந்த மானம் போன உணர்ச்சியும் தாக வேதனையும் அவர்களைப் பிற்கால வாழ்வுக்கு எவ்வளவு தகுதியற்றவர்களாகச் செய்து விடுகிறது? அவர்களுடைய திறமையையும் சுயநம்பிக்கையையும் எவ்வளவு குறைத்து விடுகிறது?

சென்ற வருஷம் காலேஜ் முதல் வகுப்பில் படித்த ஒரு வாலிபன் ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து கடிதம் எழுதியிருக்கிறான். அவன் படித்த காலேஜில் முதல் வகுப்புப் பரீட்சையில் முப்பது மார்க் வாங்கினால் பாஸ் என்று நிர்ணயித்து அவ்விதமே 30 மார்க் வாங்கிய எல்லாருக்கும் பாஸ் கிடைத்திருக்கிறதாம். இந்த இளைஞனுக்கு 29 மார்க் வந்ததாம்! எனவே அவனுக்குப் 'பாஸ்' இல்லை! "ஒரு மார்க் குறைந்ததினால் என் வாழ்க்கை பாழாகிறதா?

மற்றப் பிள்ளைகளின் முகத்திலே நான் எப்படி விழிப்பேன்! எனக்கு உடம்பு சரியில்லாம லிருந்தும் பரீட்சை யன்று நிற்கக்கூடாது என்று போய் எழுதினேனே! அதன் விளைவு இப்படியாயிற்றே? பரீட்சைக்குப் போகாமல் மெடிகல் சர்டிபிகேட் தாக்கல் செய்த 30 பேருக்கு பாஸ் கிடைத்திருக்கிறதே? இன்னும் ஒரு வருஷம் என் பெற்றோர்களுக்கு தண்டச் செலவு வைக்க வேண்டியிருக்கிறதே! ஆறு மாதப் பரீட்சையில் நான் வாங்கிய மார்க்கைப் பார்த்துப் பாஸ் போடக் கூடாதா? இப்படி என்னைக் கெடுக்க வேண்டுமா? எங்கள் காலேஜ் பிரின்ஸிபாலுக்கு யாராவது சொல்ல மாட்டார்களா?" என்று கல்லும் கரையும் வண்ணம் மூன்று பக்கம் அந்த இளம் பிள்ளை எழுதியிருக்கிறான்.

இருபத்தொன்பது என்று மேற்படி பையனுக்கு மார்க் போட்ட புண்ணியவான், தங்கம் நிறுக்கும் தராசிலே நிறுத்துப் போட்டாரா? ஒரு மார்க் அதிகம் போட்டு ஒரு பையனைக் காப்பாற்றியிருந்தால் அவர் நரகத்துக்குப் போக நேர்ந்திருக்குமா? அல்லது அவர் கையில் தேள் கொட்டியிருக்குமா? அல்லது அவனுக்குப் பாஸ் போட்டிருந்தால் பிரின்ஸிபாலுக்குத் தான் மோட்சம் நஷ்டமாகி விடுமா? அப்படி யெல்லாமிருந்தாலும், இருபத்தொன்பது என்று மார்க்குப் போட்டு ஓர் இளம் பிள்ளையைச் சித்திரவதை செய்வதற்குப் பதிலாக, இருபது மார்க்கு என்று போட்டுத் தொலைப்பதுதானே! "ஒரு மார்க்குக் குறைவினால் தவறிவிட்டதே!" என்று அப்போது மனவேதனையாவது இல்லாமல் போகுமல்லவா?

• • •

சில மாணவர்கள் பரீட்சை தேறாததால் தற்கொலை செய்து கொண்டு சாகிறார்கள்; சிலர் உள்ளம் குன்றிச் சாகிறார்கள்; வேறு சிலரோ பரீட்சை தேறவில்லையென்பதைச் சாதித் துவேஷத்தை வளர்ப்பதற்காக உபயோகிக்கிறார்கள்.

பிராமணரல்லாத பிள்ளையாயிருந்தால், "ஆசிரியர் பார்ப்பனர்; அதனால் எனக்கு மார்க் கொடுக்காமல் கெடுத்து விட்டார்!" என்கிறான். பிராமணச் சிறுவனாயிருந்தால், "ஆசிரியர் ஆண்ட்டி பிராமின் (அதாவது பிராமணத் துவேஷி); அதனால் வேண்டுமென்று என்னை இப்படிக் கெடுத்து விட்டார்!" என்று சொல்கிறான்.

நமது அருமைச் சாம்ராட்டியல் இத்தகைய மூடத்தனமான வகுப்புத் துவேஷம் நம் இளம் பிள்ளைகளின் உள்ளத்தில் வளர வேண்டுமா? அவசியந்தானா?

• • •

பரீட்சைகள் முடியும் வரையில் பிள்ளைகளுக்கு வேலை; பரீட்சைகள் முடிந்ததும் தகப்பனார்களுக்கு வேலை! எந்தப் பரீட்சைப் பேப்பர் எந்த ஆசிரியர் திருத்துகிறார் என்று துப்புக் கண்டு பிடித்துக்கொண்டு வந்து பிள்ளைகள் சொல்கிறார்கள்! உடனே தகப்பன்மார்கள் சிபார்சுக் கடிதங்கள் வாங்கிக்கொண்டு பிரயாணம் கிளம்புகிறார்கள். பணக்காரப் பெற்றோர் சிலர் பண மூட்டையுடனும் கிளம்புகிறார்கள். எதற்கு? பரீட்சைப் பேப்பர் திருத்தும் ஆசிரியர்களைக் கண்டுபிடித்து, "நம்ம பையனுக்குப் பாஸ் மார்க் போட்டு விடுங்கள்!" என்று சொல்வதற்காகத்தான்!

அடடா! 'லஞ்சம்' 'லஞ்சம்' என்று சொல்லுகிறோமே? இந்தக் காரியத்தைப் பற்றி என்னவென்று சொல்ல? மரத்தின் வேரிலே பிடித்து அரிக்கும் கறையானைப் போல் இந்த நிலைமை பிள்ளைகள், தகப்பன் மார்கள், உபாத்தியாயர்கள் ஆகிய எல்லாருடைய ஒழுக்கத்தையும் அல்லவா கெடுத்து நாசமாக்கி விடுகிறது!

• • •

சில சமயம் பரீட்சைக் கேள்விகள் வெளியாகி விட்டதாகச் செய்திகள் வருகின்றன. எப்படி வெளியாகின்றன? பிள்ளைகளின் முயற்சியினாலும் சாமர்த்தியத்தினாலுந்தான்! பரீட்சைத் தாள்கள் அச்சாகிற அச்சாபீஸ்களைத் துப்பு வைத்துக் கண்டு பிடிக்கிறார்கள். அங்கே வேலை செய்கிறவர்கள் யாருக்காவது லஞ்சம் கொடுத்துத் திருடப் பண்ணுகிறார்கள். லஞ்சப் பணம் ஒருவரே கொடுக்க முடியுமா? பலரிடம் வசூல் செய்கிறார்கள். பரீட்சைக் கேள்விகள் பலருக்குத் தெரிந்தவுடனே, அவரவர்களுக்கு வேண்டியவர்களிடம் சொல்வதால் காடெங்கும் பரவி விடுகிறது. சென்ற வருஷத்தில் பரீட்சைக் கேள்விகளை அச்சிட்டு முன்னதாக விற்பனை செய்ததாகவே கேள்விப்பட்டோம்.

இப்படிப் பொறுப்பில்லாமல் பரீட்சைத் தாள்கள் விஷயத்தில் அலட்சியமாயிருந்து விடும் பெரிய கல்வி இலாகா உத்தியோகஸ்தர்களைப் பற்றிக் கேள்வி முறையில்லை. ஏழைக் கம்பாஸிட்டர்கள் சிலர் தண்டிக்கப் படுகின்றனர். அது மட்டுமா?

சில பிள்ளைகள் செய்த குற்றத்திற்காக மாகாண முழுவதிலும் அந்த வகுப்பிலே படித்த பிள்ளைக ளெல்லாரும் தண்டிக்கப் படுகிறார்கள். மறுபடியும் அவர்கள் படை படைக்கிற வெய்யிலில் மூன்று மணி நேரம் புழுங்கிக் கொண்டு உட்கார்ந்து பரீட்சை எழுதித் தொலைக்க வேண்டும்!

* * *

இந்த மார்ச்சு மாதத்தில் நடந்த எட்டாவது ஸ்டாண்டர்டு பரீட்சையைப்பற்றி முன் கட்டுரையில் எழுதியிருக்கேனல்லவா? அது போல் சில சமயம் பல பரீட்சைத் தாள்கள் மகா மோசமாக அமைக்கப்படுகின்றன. கேள்வி கேட்பவர்கள் மாணுக்கர்களைத் திணற அடிப்பதில் தங்களுடைய சாமர்த்தியத்தை யெல்லாம் காட்டி விடுகிறார்கள். இதன் காரணமாகப் பரீட்சை எழுதிய மாணுக்கர்களில் 100-க்கு 70 பேர், 80 பேர், சில சமயம் 90 பேர் கூடப் பாஸ் மார்க் பெறுவதில்லை. இந்த மாதிரி நிலைமையில் என்ன செய்கிறார்களாம் தெரியுமா? ஒரு பரீட்சையில் 100-க்கு 90 மாணுக்கர்கள் தேறவில்லை யென்றால் அது பெரிய வெட்கக் கேடாக இருக்கு மல்லவா? கல்வி இலாகாவுக்கே முட்டாள் பட்டம் கிடைக்கும் அல்லவா? இதற்காகப் "பரீட்சை எழுதிய எல்லாப் பிள்ளைகளுக்கும் + 20 மார்க்குப் போடு" என்கிறார்கள். அதாவது கிடைத்த மார்க்கோடு இருபது மார்க்கைக் கூட்டு என்கிறார்கள்! இவ்விதம் பரீட்சை தேறியவர்களின் தொகையைக் கணிசமாகப் பெருக்கிக் கல்வி இலாகாவின் மானத்தைக் காப்பாற்றிக் கொள்கிறார்கள்.

இந்தமாதிரி நடக்கிறதா இல்லையா என்று கல்வி இலாக்கா பதில் சொல்லட்டும். அப்படி நடந்திருப்பது உண்மையானால் இம்மாதிரி பரீட்சைகளுக்கு ஏதாவது பொருள் உண்டா? இளங் குழந்தைகளின் விஷயத்தில் பெருங் கேடுகள் செய்வது ஆகாதா? பரீட்சைத் தாள்களைப் பார்த்தவுடன் ஆயிரக் கணக்கான பிள்ளைகளும் பெண்களும் மன வேதனைப் பட்டதற்கெல்லாம் யார் ஜவாப்தாரி? அத்தகைய கேள்விப் பத்திரங்களைத் தயாரித்தவர்களுக்கு என்ன தான் தண்டனை? அவர்கள் கல்வி இலாகாவுக்குப் பொருத்தமற்றவர்கள் என்றுவது நிர்மாணித்து வேறு உத்தியோகம் பார்த்துக் கொள்ளும்படி சொல்ல வேண்டாமா?

* * *

ஒரு வருஷம் முழுவதும் படிப்பதில் ஒரு இளம் பையனுக்கு எவ்வளவு மூளைச் சோர்வும் உடல்நலக் கெடுதியும் ஏற்படுகிறதோ, அவ்வளவு சோர்வும் கெடுதியும் பரீட்சை வாரத்தில் மட்டும் ஏற்பட்டு விடுகிறது. எத்தனை பிள்ளைகள் இரவில் டீ போட்டுச் சாப்பிட்டு விட்டு இரவெல்லாம் கண்விழித்துப் படிக்கிறார்கள்! 'படிக்கிறார்கள்' என்பது தவறு; மூளை வறளும் படியாக 'நோட்ஸு'களை உருப்போட்டுத் தள்ளுகிறார்கள்! இதனால் இளம் குழந்தைகளின் உடல் நலத்துக்கு எவ்வளவு கெடுதல் ஏற்படுகிறது! யாராவது நல்ல வைத்தியர்களைக் கொண்டு ஆயிரம் மாணுக்கர்களை எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சைக்கு முன்னும் பின்னும் வைத்திய பரிசோதனை செய்து பார்க்கட்டும். பரீட்சைக் கெடுபிடியினாலும் பீதியினாலும் பாதிக்கு மேற்பட்ட மாணவர்களின் உடல் நலம் சீர்கேடு அடைந்திருக்குமென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

* * *

இந்தியாவிலேயே மிகச் சிறந்த அறிவாளி என்று எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பிரமுகர் தம்முடைய பரீட்சை

நகைத் திருடர்கள் ஜாக்கிரதை!



சென்னையில் ஸ்திரீ போலீஸ் படை ஏற்படுத்தச் சென்னை சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர்.

அனுபவத்தைப் பற்றிப் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்:— "கலாசாலைக்குத் தலைமுழுகி விட்டு நான் வெளியேறிய பிறகு பல வருஷ காலம் தூங்கும்போது பரீட்சைக் கனவு காண்பது உண்டு. பரீட்சைக்காக அவசர அவசரமாக ஓடுவதுபோலும் அப்படி ஓடியும் காலேஜ் வாசலில் என்னை நிறுத்தி விட்டது போலும் சில சமயம் காண்பேன். இன்னும் சில சமயம் பரீட்சை எழுத உட்கார்ந்தது போலும் பரீட்சைத் தாளைக் கையில் வாங்கிப் பார்த்ததும் ஒன்றும் புரியாமல் தலை கிறுகிறுத்ததுபோலும் கனவு காண்பேன். சட்டென்று கண்விழித்துக் கொள்வேன். உடம்பெல்லாம் வியர்த்து விறுவிறுத்திருக்கும். அப்புறம் வெகு நேரம் வரையில் தூக்கமே வராது! பரீட்சையானது அத்தகைய பீதியை என்னுடைய உள்ளத்தில் உண்டாக்கியிருந்தது!"

இவ்விதம் கூறியது யார் என்று நினைக்கிறீர்கள்? வேறு யாரும் இல்லை. இந்தியாவின் முதல்வராகிய இந்திய கவர்னர்-ஜெனரலான ஹிஸ் எக்ஸெலென்ஸி ஸ்ரீ சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களேயாகும். பரீட்சை விஷயமாக அவருடைய அனுபவமே இப்படியென்றால் மற்றவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?

* * *

"எல்லாம் சரிதான்; அதற்காகப் பரீட்சைகளையே ஒழித்துவிட முடியுமா? பின் எப்படித்தான் மாணாக்கர்களின் அபிவிருத்தியை மதிப்பிடுவது? இந்தியாவில் மட்டும்தானா பரீட்சை நடக்கிறது? இங்கிலாந்து முதலிய எல்லா நாடுகளிலும் பரீட்சை நடத்துகிறார்களே?" என்று சொல்லலாம்.

இங்கிலாந்து முதலிய நாடுகளில் பரீட்சை நடத்துகிறார்கள் என்பது சரி! ஆனால், இங்கிலாந்தில் பரீட்சை தேறாததற்காக எந்த மாணவனாவது தற்கொலை செய்து கொண்டான் என்று நாம் கேள்விப் பட்டதுண்டா? ஏன் கேள்விப்பட்டதில்லை?

* * *

எந்த விதமான கல்வி முறையிலும் ஏதோ ஒரு விதமான பரீட்சை அவசியமாயிருக்கலாம். ஆனால் அந்தப் பரீட்சை குழந்தைகளின் இளம் உள்ளத்தில் பீதியை உண்டாக்கக் கூடாது; அவர்களுடைய மூளையைப் பலவீனப் படுத்தக் கூடாது; அவர்களுடைய உடல் நலத்தைப் பாதிக்கக் கூடாது; பரீட்சையில் தேறாததற்காகத் தற்கொலை செய்து கொள்ளத் தூண்டும் நிலையும் கூடாது.

* * *

நமது கல்வி முறை மோசமானது; நமது பாட திட்டமும் பாட புத்தகங்களும் படுமோசமானவை; பரீட்சை முறையோ மிகக் கொடூரமானது. நம்முடைய கல்வி முறை, பாட திட்டம், பரீட்சை முறை ஆகிய மூன்றும் அடியோடு மாறுதல் அடைந்தால்தான் இந்தியாவின் வருங்கால சந்ததிகள் பிழைத்துக் கடைத்தேறுவார்கள்.

வட்ட மேஜை

கோயமுத்தூர்
10—5—48

★

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு.

உங்கள் சென்ற வாரத்திய தலையங்கத்தைப் படித்தோம். எங்கள் ராணுவ முகாமில் உள்ள தமிழ் தெரியாத வட இந்திய நண்பர்களுக்கு ஏதோ தெரிந்த ஹிந்தியில் புரியும்படி சொன்னோம். நீர் எழுதிய விதத்தைப்பற்றி மிகவும் பாராட்டினார்கள். மதுரையில் நடந்தது பற்றியும் அவர்கள் அறியாமையை நினைத்தும் வருத்தப் பட்டோம்.

ஸ்ரீ பிரகாசம் பிரதம மந்திரி பதவியிலிருந்த சமயம் தீர்க்க தரிசியான நம் தலைவர் ராஜாஜி சில அருமையான திட்டங்களை வெளி விட்டார். "வரக் கூடிய வருஷங்களில் நம் மாகாணத்தில் உணவு நெருக்கடி ஏற்படலாம். அதைச் சமாளிக்கச் சர்க்கார், தஞ்சை, பெஜவாடா; ராஜமகேந்திரவரம் முதலிய இடங்களிலுள்ள பெரிய நிலச்சுவான்தார்களிடமிருந்து ஏராளமான பூமிகளை நீண்ட காலக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு விவசாயம் செய்தால், சாதாரணமாக விவசாயிகளின் உற்பத்தியை விட உபரியாக எடுக்கலாம். அதே முறையை மற்ற விவசாயிகளும் பின்பற்றலாம்" என்று கூறினார். அப்போது நாங்கள் டெல்லியி லிருந்தோம். சில வடநாட்டுப் பத்திரிகைகள் கூட இதை வரவேற்று "ஸி. ஆர். பதவியில் இல்லாவிட்டாலும் பொது மக்களுக்குத் தேவையான யோசனைகளை வெளியிடுகிறார். இவற்றிலிருந்தே அவரின் தூய்மை புலனாகிறது. இந்த அருமையான மாணிக்கத்தைத் தமிழ் நாடு நழுவவிட்டது" என்று குறிப்பிட்டன. மேற்படி யோசனையைச் சர்க்கார் கைக் கொண்டதாகத் தெரியவில்லை.

இரண்டாவதாக, பிரசாரமோ போதுமான அளவில் இல்லை. விவசாய ஆபீசர்கள் கிராமந்தோறும் போய்க் குடியானவர்களின் கூட்டம் போட்டு உண்மையான நிலவரங்களைக் கவனித்து எந்த விதங்களில் விவசாயம் செய்தால் உபரி கிடைக்கும் என்று சொல்ல வேண்டும். உணவு தான்யங்களையே விவசாயம் செய்ய வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும். விவசாய முறையைப் பற்றியும், காய் கறி பயிர் செய்தல் முதலிய விஷயங்களைப் பற்றியும் சினிமாப் படம் எடுத்துக் கிராமங்களிலும் நகரங்களிலும் காண்பிக்க வேண்டும்.

மூன்றாவதாக, இந்தியா தேசத்தில் உணவு நெருக்கடியுள்ள பிரதேசம் நம் மாகாணம் தான். தென் நாட்டில் எல்லா இராணுவ முகாம்களிலும் அரிசியை மிதப் படுத்தலாம். நாங்கள் எல்லாரும் 'சப்பாத்தி' சாப்பிட்டுப் பழக்கமானவர்கள். பாதி அரிசியும் பாதி கோதுமையும் எங்களுக்குக் கொடுக்கலாம். மீதி அரிசியைப் பொது ஜனங்களுக்குச் சிறந்த முறையில் விநியோகிக்கலாம். சமாதான கால மானதால் எவ்வளவோ மிலிடரிக்காரர்கள் வேலை இல்லாமல் தூங்குகிறார்கள். அவர்களை யெல்லாம் ஏன் விவசாய அபிவிருத்திக்கு உபயோகிக்கக் கூடாது?

இந்த மாதிரி திட்டங்களைக் கைக் கொள்ளாமல் 'அரிசி இதோ வரப்போகிறது; அதோ வந்துவிடும்' என்று ரேடியோவில் பிரசங்கம் செய்தால் மட்டும் பயன்படாது. ரேடியோ கேட்பவர்கள் ஒரு சிலர். அவர்களுக்கு அநேகமாக உணவுப் பஞ்சம் இராது.

பசியால் வாடும் ஜனங்கள் மாகாணசர்க்கார் என்றும் மத்திய சர்க்கார் என்றும் என்ன கண்டார்கள்? 'நேரு சர்க்கார் ஒழிக!' என்று கூச்சல் போடுகிறார்கள்!

கே. வரதராஜன்.

புதுச்சென்னெல்குளம்
10—5—48

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு.

கிராமாந்தரங்களில் கல்வி விஷயமாய்ச் செய்யவேண்டிய முக்கிய சீர்திருத்தங்கள் சில உண்டு. அவையாவன:

(1) கிராமத்தில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு ஜாதி வித்தியாசம் பாராட்டாமல் வேலை கொடுத்தலும் குடியிருக்க வீடு கொடுத்தலும். (2) குடிக்கத் தண்ணீர் வசதி. (3) வண்ணான் சௌகரியம்.

உதாரணமாக நான் வேலை பார்க்கும் புதுச் சென்னெல் குளம் கிராமம், கம்மவர் நிறைந்த இடம். இங்கு காங்கிரஸ் வாதிகள் அதிகம். இப்படிப்பட்ட ஊரில் நாடார் ஆசிரியராகிய எனக்குக் குடியிருக்க வீடு கொடுக்க யாரும் முன்வரவில்லை. கிணற்றில் குடி தண்ணீர் எடுக்க அனுமதியில்லை. அவர்களுக்கு வெளுக்கும் வண்ணானை எங்களுக்குச் சலவை செய்து கொடுக்கச் சொல்லச் சம்மதிக்கவில்லை. எனக்கே இவ்வளவு கஷ்டங்கள் இருந்தால் ஒரு ஹரிஜன உபாத்தியாயர் இதுபோன்ற கிராமத்தில் வேலை பார்க்கும்படி நேர்ந்தால் அந்தக் கிராமத்து மக்கள் அதை எப்படிச் சகிப்பார்கள்?

சுதந்தர இந்தியாவிலுமா இக்கொடுமை? வாழ்க நம் தாய்நாடு! வாழ்க நம் தாய்நாட்டு ஏழை மக்கள்!

வி. அருமை நாயகம்.

திருச்சிராப்பள்ளி
10—5—48

ஆசிரியர் 'கல்கி' சென்னை,

சூறாவளிக் காற்று அற்புதமான குண்டுமணியைக் குப்பைக் குழிக்குள் கொண்டு தள்ள முயன்ற காலத்தில் தாங்கள் அக்கொடிய காற்றையும் பொருட் படுத்தாமல், "இது குண்டுமணி; மதிப்பிற்குரியது" என்று தைரியமாய்ச் சொல்ல முன் வந்தீர்கள். இப்பொழுது அந்தக் குண்டுமணிக்கு மெருகிட்டு அதற்கு உரித்தான மேலிடத்தில் வைத்திருக்கையில், பூரிப்பு மேலிட்டுத் தாங்கள் அதைப் போற்றி எழுதுவீர்க ளென்று எதிர் பார்த்துக் கொண்டிருந்த 'கல்கி' நேயர்கள் மிகுந்த ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

நா. ராமகிருஷ்ணன்.

அருப்புக்கோட்டை
9—5—48

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு.

இவ்வார "கல்கி" இதழில் வெளியான 'ஒழிகக் கூச்சல் ஒழிக' என்ற தலையங்கம் பொருத்தமாகவும் நியாயமாகவும் இருக்கிறது. உண்மையில் நாங்கள் மாறுவேடம் போட்டுக்கொண்டு வந்து, எங்கள் ஜில்லா

வினும், முக்கியமாக எங்கள் நகரிலும் உள்ள நிலைமையைத் தெரிந்துதான் இம்மாதிரி எழுதினீர்களோ என்று நினைக்கிறேன். மூன்று விஷயங்கள் மிக உண்மை. 1. சரியானபடி நியாய விலைக் கடையில் தானிய விநியோகம் கிடையாது. 2. ஜில்லா விட்டு ஜில்லாத் தடை அநாவசியம். 3. மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் உண்மையை அறியும் நோக்குடன் செய்வதில்லை.

உதாரணமாக எங்களூர் புளியம்பட்டி கூட்டுறவு ஸ்டோரிலிருந்துதான் இந்தத் தாலுகா பூராவுக்கும் நெல் சப்ளையாகிறது. தாசில்தார் உத்தரவுப்படி தாலுகா நியாய விலை டிப்போக்களுக்கு 10 முதல் 100 மூட்டை வரை ஒரு வாரத்துக்கு சப்ளை செய்கிறார்கள். பாதிக்கு மேற்பட்ட மேற்படி நியாய விலை டிப்போக்காரர்கள் நெல்லை இங்கு டவுனுக்குள்ளேயே அதிக விலைக்கு விற்றுவிட்டுப் பாக்கியைக் கிராமத்துக்குக் கொண்டுபோய், வாய்வீச்சுக்காரர்களுக்கும், பெரிய தனக்காரர்களுக்கும் கொடுத்து விட்டு ஏழைகள் வாயில் மண்ணைப் போட்டு விடுகிறார்கள். மந்திரிகள் வந்தால் காரில் வெந்நீர் போட்டுக் கொண்டே வருகிறார்கள். பொதுக் கூட்டத்தில் ஜனங்களைப் பார்த்து ''உங்களுக்கு ஏதாவது குறை இருந்தால் உடனே மந்திரிக்கு எழுதுவது கூடாது. கலெக்டர் இருக்கிறார். மிக நல்லவர். வேண்டியதைச் செய்வார்'' என்று சொல்லிவிட்டு, அரசியலைப் பற்றிப் பேசிவிட்டு, கடியாரத்தைப் பார்த்து நாழிகையாகிவிட்டது என்று போய்விடுகிறார்கள்.

ஆர். வி.

நாகர்கோவில்
10—5—48

ஆசிரியர் 'கல்கி' அவர்களுக்கு,

சென்ற கல்கியில் கடூர வார்த்தைகளைக் கொட்டிய தோழர் எஸ். ராம......அவர்கட்கு ஆசிரியர் தந்த பதில் தாமிரவர்ணியாற்று உதாரணமே. அது மட்டும் போதாது.

''தி. த. நா. காங்கிரஸார் பொறுப்பாட்சிப் போராட்டத்தில் பங்கு கொள்ளவில்லை; பலர் காங்கிரஸில் நேற்று வந்தவர்கள். சிறை வாசமறியாதவர்கள். பித்தலாட்டக்காரர்கள். ஜின்னாவின் மதவெறி போன்று பாஷை வெறியைக் கிளப்பி வெற்றி பெற்றவர்கள்'' என்றெல்லாம் தோழர் கூறுகிறார்.

தலைவர் நத்தானியல் அன்று சமஸ்தான காங்கிரஸ் வாதி; சமஸ்தான காங்கிரஸ் போராட்டத்தில் சிறை சென்றவர். எங்கள் பொதுச் செயலாளர் [illegible] அவர்கள் உப்பு சத்தியாக்கிரகத்தில் சிறை சென்றவர். உடன் செயலாளர் நாகலிங்கம் 1942 ஆகஸ்டில் சிறை சென்றவர். தொண்டர் படைத் தளபதி காந்திராமன் சுசீந்திரம் சத்தியாக்கிரகத்தில் சிறை சென்றவர். தேர்தல் நாளிலே போலீஸ் குண்டர்களால் அடிக்கப்பட்டுச் சிறை சென்றவர். தோழர் கும்பலிங்கம் திருச்சியிலே சிறை வாசமனுபவித்தவர். இவர்கள் தியாகிகள் அல்லவா?

மத வெறியைப் போன்றதே பாஷை வெறியும் என்கிறார். 1920 காங்கிரஸிலேயே பாஷாவாரித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதே. 1923-ல் சி. ஆர். தாஸும் பகவன்தாஸும், 1926-ல் எஸ். சீனிவாசய்யங்காரும், 1928-ல் நேருவும் தங்கள் திட்டங்களில் பாஷாவாரி மாகாணத்தை ஆதரித்திருக்கிறார்களே! 1945-ம் வருடத்திய தேர்தல் பிரகடனமும், பாஷாவாரி மாகாணத்தை வற்புறுத்துகிறதே! சரித்திரம் தெரியாத சமஸ்தான காங்கிரஸ் நண்பர் இனியாவது காங்கிரஸ் நிகழ்ச்சிகளைப் படிக்கட்டும்.

சி. கிருஷ்ணன்.

திருச்சி
9—5—48

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

ஜில்லாவுக்கு ஜில்லா தானியம் போகக் கூடாது என்று தடை விதித்திருப்பதில் அர்த்தமே யில்லை. தஞ்சை ஜில்லாவின் உள்ள அரிசியைக் கலெக்டர் வாங்கி வேறு ஜில்லா வாசிகளுக்குக் கொடுத்தால் தான் ஜீரணமாகுமா? நேரடியாக அது ஜனங்களுக்குப் போவதில் என்ன கெடுதல் இருக்கிறது?

ரூபாய்க்கு 2 படி அரிசி கிடைக்கிறதே யென்று திருச்சியிலிருந்து ஒருவன் தஞ்சைக்குப் போய் இரண்டு ரூபாய்க்கு அரிசி வாங்கி வந்தான். அதைப் போலீஸார் கைப்பற்றி அபராதமும் விதிப்பதென்றால், கண்ட்ரோல் விதிகளை யறியாத ஏழை. சர்க்காரைத் திட்டாமல் வேறு என்ன செய்வான்?

கடல் வழியாக இலங்கைக்கு மூட்டை மூட்டையாகக் கள்ள அரிசி போவதைச் சரியான முறையில் தடுப்பதை விட்டுவிட்டு, ஜில்லாவுக்கு ஜில்லா ஒரே இனத்தவர்கள் வாழும் இடங்களுக்கு அரிசி போகக் கூடாதென்று தடை விதிப்பதில் அர்த்தமில்லை.

தஞ்சையில் நெல் வாங்கவும் ஆள் இல்லை; வாங்கின நெல்லுக்கு, விவசாயிகளிடம் இன்னும் பணமும் போய்ச் சேரவில்லை.

பி. கோவிந்தசாமி.

கடவாசல்
9—5—1948

'கல்கி' ஆசிரியர் அவர்கட்கு,

''ஊணர் கலைத்திறன்'' என்று பாரதியார் இகழ்ந்து சென்ற ''மண்படு கல்வி''யை நமது இந்தியக் குழந்தைகள் நெட்டுருப் பண்ணி மூளையில் திணித்துக் கொள்வதைக் கண்டித்து ''பெற்றோன்'' எழுதிவரும் ''எத்தனை நாள் இக்கொடுமை?''யை இன்னும் எத்தனை நாள் தொடர்ந்து எழுதி வந்தாலும் அது அந்தக் கல்வியைச் சரியானபடி கண்டிப்பதாகாது. அவ்வளவு கொடுமையும் மடத்தனமும் நிறைந்த அடிமைக் கல்வியை வேறு எந்த தேசத்திலும் காண முடியாது.

எல்லாவற்றிலும் இந்தச் சரித்திர ஆசிரியர்கள் செய்திருக்கின்ற மகா பாவத்திற்குப் பிராயச் சித்தமே கிடையாது. 'இந்து தேச சரித்திரம்' என்று பெயர் கொடுக்கப் பட்டிருக்கும் புத்தகத்தில் முக்கால்வாசி ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வந்ததைப் பற்றியும் அவர்கள் பிரெஞ்சுக்காரர்களை விரட்டியடித்ததைப் பற்றியும் எழுதப் பட்டிருக்கும். மீதி கால் வாசியில் இந்தியர்களும் முஸ்லிம்களும் அடைந்த தோல்விகளைப் பற்றியும் சுதேச மன்னர்கள் ''ஏகாதிபத்தியக் கொள்கை''யை அப்படியே மனப்பூர்வமாக அங்கீகரித்ததைப் பற்றியும் இழுக்கப்பட்டிருக்கும்.

இவற்றை யெல்லாம் வருங்கால இந்தியச் சிறுவர்களான குழந்தைகள் படித்துப் பாஸ் செய்ய வேண்டும்! பாஸ் செய்யாவிடில் இன்னொரு முழு வருஷம் அதே பாடங்களைப் படித்துத் தொலைக்க வேண்டும். அவர்கள் மூளை என்னத்திற்கு ஆகும்?

இ. விசுவநாதன்.

பெங்களூர்
8—5—48

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

மே மாதம் 2-ம் தேதி கல்கியில் "வட்ட மேஜை" என்ற தலைப்பின் கீழ்ப் பிரசுரிக்கப்பட்ட முதல் இரண்டு கடிதங்களைப் படித்த போது இருந்த மகிழ்ச்சியின் மூன்றாம் கடிதத்தைப் படித்தபோது இழக்க நேர்ந்தது. அக் கடிதம் எழுதியவர் அபராதத்தை நீத்தாட்சண்யமாக ஏற்படுத்தும் பாதிரிமார்கள் என்று குறிப்பிட்டது எவர்களை? பொதுவாகக் கிறிஸ்தவப் பாதிரிமார்கள் அனைவரும் அபராதம் வாங்குவதைத் தமது லட்சியமாகக் கொண்டவர்கள் என்பது அவருடைய கருத்தா? இது தான் அவருடைய கருத்தென்றால் அவரை ஒரு கிணற்றுத் தவளைக்குத்தான் ஒப்பிட முடியும். பாதிரிமார்கள் எல்லாரும் அபராதம் வாங்குவதில்லை என்பதை நான் படிக்கும் செயின்ட் ஜோசப் கல்லூரிப் பாதிரிமார்களை உதாரணமாகக் கொண்டே விளக்குவேன். என்னுடைய கல்லூரியில் அபராதம் என்ற பேச்சே கிடையாது.

ஏ. டி. பிரான்ஸிஸ்.

வீரவநல்லூர்
10—5—48

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

அன்புள்ள ஐயா, வணக்கம். 25—4—48, 2—5—48, 9—5—48 கல்கி இதழ்களில் பிரசுரிக்கப்பட்டுள்ள "எத்தனை நாள் இக் கொடுமை" என்ற கட்டுரைகளில் அடங்கியுள்ள அபிப்பிராயங்களைப் பொதுவாக நான் வரவேற்கிறேன். ஆயினும் அக் கட்டுரைகளில் ஆங்காங்கு ஆசிரியர்கள் மேல் குற்றச் சாட்டுகள் காணப்படுகின்றன. அது நியாயமானவை அல்ல என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் சம்பள உயர்வுக்காகக் கிளர்ச்சி செய்தது உண்மையே. ஆயினும் அக் கிளர்ச்சியிலும் தற்காலக் கல்வி முறை மாற்றப்பட வேண்டும் என்பதை முதல் தீர்மானமாகக் கொண்டனர். கடந்த வருஷம் மார்ச்சு மாதம் 1, 2 தேதிகளில் சென்னையில் நடந்த தேசிய மகாநாடு ஆரம்ப ஆசிரியர் மகாநாட்டில் நிறைவேற்றிய முதல் தீர்மானம் "தற்சமயம் அமுலில் இருந்துவரும் சாரமற்ற அடிமைக் கல்வி முறை மாற்றப்பட்டு தேசிய அடிப்படையில் உடனடியாகக் கல்வித் திட்டம் வகுக்கப்பட வேண்டும்" என்பதே. இதையே பல மகாநாடுகளிலும் பொதுக் கூட்டங்களிலும் வற்புறுத்தி வந்திருக்கின்றோம். இதை யொட்டியே 26—11—47 அன்று கல்வி அமைச்சரிடம் ஒரு வாதாஸ்து சமர்ப்பித்தோம். கடந்த பிப்ரவரி 8-ம் தேதி திரூரில் நடந்த அகில மலபார் ஜில்லா ஆசிரியர் மகாநாட்டிலும் "உடனடியாகக் கல்வி முறை சீர்திருத்தி அமைக்க வேண்டும்" என்று வற்புறுத்தப் பட்டது. ஆசிரியர்களும் மனித உணர்ச்சி படைத்தவர்கள்தான். ஆனால் 'பழைய பிரிட்டிஷ் ஏகாதிபத்திய முறையிலே பழக்கப்படுத்தப்பட்டு அதிகாரம் செலுத்தும் கல்வி இலாகாவின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நின்றாடுகின்றனர்.

கல்வி புனர் நிர்மாண திட்டத்தில் ஆசிரியர்கள் தங்கள் கடமையைச் செய்ய என்றும் தயாராயிருக்கிறார்கள்.

ச. நடராஜன்.

சிலோன்
7—5—48

'கல்கி' ஆசிரியரவர்களுக்கு,

"சிவகாமியின் சபதம்" பரிசுப் பதிப்புக் கிடைத்து மிகவும் மகிழ்ச்சி யடைந்தேன். "குழந்தையை அடித்து அழச் செய்யலாம். ஆனால் பாடச் செய்ய முடியாது. குழந்தையை அடிமேல் அடியடித்து ஓடச் செய்யலாம். ஆனால் ஆடச் செய்ய முடியாது."—இந்த எண்ணத்தைத் தம் மனத்துட் கொண்டே மகேந்திரனும் மாமல்லனும் தங்கள் அன்பினாலும் ஆதரவினாலும் ஆர்வத்தினாலும் சிற்பக் கலையையும் நாட்டியக் கலையையும் நன்கு வளர்த்துத் தமிழ் நாட்டிற்கு என்றும் அழியாப் புகழைத் தந்தனர்.

தங்கள் முன்னுரையை வாசித்ததுமே புத்தகத்தில் அடங்கியுள்ள பூரா உயர் நோக்கங்களும் தெற்றெனப் புலனாகின்றன. "சிவகாமியின் சபதம்" தமிழர்களின் கலையார்வம், அரசியல் ஆற்றல், போர்த்திறன், சமயப் பண்பாடு முதலியவற்றை எடுத்துக் காட்டும் ஒரு கலைப் பொக்கிஷம்.


மு. பாலசுந்தரம்.

சிதம்பரம்
11—5—48

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

நம் இந்தியா பல நூற்றாண்டுகளாக வெள்ளையரிடம் அடிமைப்பட்டிருந்து சமீபத்தில் விடுதலையடைந்தது. இந்திய சர்க்காருக்கு எவ்வளவோ துன்பங்கள் நேர்ந்தும் சிறிது சிறிதாக முன்னேறி வருகிறது. நம் இந்தியாவைச் சேர்ந்த "சேட்" (சௌகார்) என்னும் வகுப்பார் தமிழ்

முன் யோசனை!



"இந்த சினிமா தியேட்டரில் ஓடும் படம் ரொம்ப நீளமானதென்று சொல்லுகிறார்கள். ஆகையால் படம் முடிந்து, கூட்டம் வெளியே வரும்போது நமக்கு இங்கே ஏதாவது வேலை நிச்சயமாய்க் கிடைக்கும்."

நாட்டில் புகுந்து வட்டிக்குப் பணம் கொடுத்து ரூபாய் ஒன்றுக்கு அரையணா விதம் வட்டி வாங்கினர். அதற்கும் பொது மக்களின் நன்மையைக் கருதிச் சென்னை சர்க்கார் தடையுத்தரவு விதித்தனர். இதனால் பெரும்பாலான ஏழை மக்களுக்குச் சொல்லொணாக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதாவது நூறு ரூபாய் பெறுமான நகையை அவர்கள் தெருவிலிருக்கும் பெரிய மிராசுதாரர்களிடம் கொண்டுபோய் "இந்த நகையை வைத்துக் கொண்டு ஐம்பது ரூபாய் கொடுங்கள்" என்று கேட்டால் "அதெல்லாம் முடியாது; இந்த நகைக்கு இருபது ரூபாய்தான் தர முடியும்; அதுவும் ரூபாய் ஒன்றுக்கு ஒரு அணா வட்டி தர முடியுமென்றால்தான் கொடுப்பேன்; இல்லையேல் போய்விடு!" என்று பணத் திமிருடன் கூறுகின்றனர். அப்பொழுதிருந்த அரையணா வட்டி இப்பொழுது ஒரு அணாவாகத் திரைமறைவில் நடக்கிறது.

ஏழை மக்கள் தங்களிடம் பணமில்லாத கஷ்டத்தினால் அந்தப் பணப் பெருச்சாளிகளிடம் மண்டியிட்டு இருபது ரூபாய் வாங்குகின்றனர். சில மாதங்கள் கழிந்தபின் தாங்கள் கடன் வாங்கிய பணத்திற்கு மேல் வட்டித் தொகை அதிகரித்து விடுவதால் அதனைப் பெறுவதற்கு வழி இல்லாமல் அந்த நகைகளை இழந்து விடுகின்றனர்.

ஏனோ இந்த ஒரு அணா வட்டி வாங்கும் பணப் பெருச்சாளிகள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை?

சி. அ. குப்புசாமி.

சென்னை
9—5—48

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு.

எங்கள் விதியைக் கேளுங்கள். இறந்து போனவர் கதைகளை யெல்லாம் எழுதி அதை ஒரு பாடமாக வைத்துச் சரித்திரம் என்று பெயர் கொடுத்து அதை கட்டாயமாகப் படிக்கச் சொல்லிக் கேள்விகளையும் கேட்டு இருக்கிற மூளையையும் பாழாக்குகிறீர்கள். அதுவும் முதல் பானிப்பட்டுச் சண்டை. இரண்டாவது மைசூர் யுத்தம், சோமநாதபுரம் படையெழுச்சி என்றெல்லாம் சண்டையைப் பற்றியே எழுதி எழுதி வைத்திருக்கிற பாடமெல்லாம் படித்துப் படித்து எங்களுக்கு இருக்கிற சமாதான புத்தியும் போய் விடுகிறது. இச்சண்டைகளெல்லாம் எங்கள் பிற்கால வாழ்வை வளர்க்கப் போகிறதா? மத வெறியும், ஜாதிச் சண்டையும் நிறைந்த இக்காலத்தில் சிறு வயதிலிருந்தே சண்டையிலேயே புத்தியைச் செலுத்திக் கொண்டு சமாதான புத்தியையும் போக்கிக் கொண்டு, மூளையையும் குழப்பிக் கொண்டு மறு வருஷமும் அந்த நாசமாய்ப் போன சரித்திரத்தைப் படிக்க வேண்டுமென்பது எங்களில் முக்கால்வாசிப் பேரின் தலையெழுத்து.

"தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்" என்பதுபோல் சிறு வயதிலேயே எங்களைக் காந்தி மகான், ஏசுநாதர் போன்றவர்களின் சரித்திரத்தைப் படிக்கச் செய்தால் தானே சமாதான புத்தியுடன் வளரலாம்?

கே. வி. நாகராஜன்.

கோவை
10—5—48

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு.

இடத்திற்குத் திண்டாடும் 'இன்ஜினீரிங்' கல்லூரியில் மாணவரைத் தேர்ந்தெடுக்க, ஏனைய கல்லூரிகளை விட அதிக காலம் எடுத்துக் கொள்கின்றனர். தற்காலம் மாணவரைத் தேர்ந்தெடுக்கும் முறையைப் பார்த்தால் எந்த மாணவனும் இன்ஜினீரிங் கல்லூரி ஒன்றையே முழுவதும் நம்பியிருக்க இயலாது. ஏனைய கல்லூரிகட்கும் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் இக்கல்லூரிகள் திறக்கும் சமயத்தில் தான் இன்ஜினீரிங் கல்லூரியில் மாணவரைத் தேர்ந்தெடுக்கும் முடிவுகளைத் தெரியப்படுத்துகிறார்கள். இன்ஜினீரிங் கல்லூரியில் இடம் கிடைப்பதை எல்லோரும் விரும்புவார்கள். அது நிச்சயமில்லை யாதலால் இதற்குள்ளாக மற்றக் கல்லூரிகளில் ஏதேனுமொன்றில் இடம் கிடைத்திருப்பின் பணத்தைக் கட்டிச் சேரவேண்டியிருக்கிறது. இன்ஜினீரிங் கல்லூரியை நம்பியிருந்து அதிலும் இடம் கிடைக்காவிடில், பின் எந்தக் கல்லூரியிலும் சேர முடியாமல் ஒரு வருடம் வீணாகக் கழிகிறது. இடமளித்த கல்லூரியிலாவது பணத்தைக் கட்டி விட்டு 'இன்ஜினீரிங்' கல்லூரி முடிவு வரைக்கும் காத்திருக்கலாமென்றால் அதற்குள் வகுப்புக்கு வரவில்லை என்று இடமளித்த கல்லூரியிலும் இடம் போய் விடுகிறது. எத்தனை மாணவர்கள் 'இன்ஜினீரிங்' கல்லூரியையே நம்பியிருந்து இறுதியில் ஏமாறுகின்றனர் தெரியுமா? தொழில் சம்பந்தப்பட்ட கல்லூரிகள் விரைவில் தம் முடிவுகளைத் தெரியப்படுத்த வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்

ந. ஷண்முகசுந்தரம்.

சென்னை
10—5—48

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு.

வணக்கம். சென்ற வாரக் 'கல்கி' இதழில் டாக்டர் விபுலானந்த அடிகளைப் பற்றிக் குறிப்பிட்ட கட்டுரையில், "ஈழ நாட்டில் தமிழர்கள் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே குடியேறினார்கள்; தமிழகத்தோடு எப்போதும் தொடர்பு கொண்டிருந்தார்கள்; தமிழையும் தமிழர் நாகரிகத்தையும், சமயத்தையும் வளர்த்தார்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். தமிழர் இலங்கையிற் சென்று குடியேறினவர்கள் என்ற கொள்கையே பலர் மனதில் பலமாக இருந்து வந்தது; ஆனால் இப்போது அறிஞர்கள் சிலர் இலங்கையின் பழங்குடிகள் தமிழர்களே என்பதை வலியுறுத்துகின்றனர்.

(1) இலங்கு என்ற அடிப்படை வேரைக் (Root) கொண்ட இலங்கை என்பது தூய தமிழ்ச் சொல்லாய் இருத்தல்; (2) ஈழம், யாழ்ப்பாணம், கண்டி, கதிர்காமம், திருகோணமலை — போன்ற அங்குள்ள ஊர்ப் பெயர்கள் நல்ல தமிழாய் இருத்தல்; (3) குமரிக்கண்டம் (Lemuria) அழிந்த பிறகு மீந்தது இலங்கைதான் என்பது வரலாற்றால் அறியப்படுதல்; (4) சிங்கள மொழிக்கும் தமிழுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும் என்ற எண்ணம் மொழி நூல் அறிஞர் மனத்தில் எழுந்திருத்தல்; (5) சங்க இலக்கியத்திலும், தமிழ் நாட்டைப் பற்றி எழுதிச் சென்ற மேல்நாட்டு ஆசிரியர்களது குறிப்புகளிலும் யாண்டும் தொடர்பான செய்திகளில் ஈழத்தைப் பற்றிப் பேசப்படுதல் :— ஆகிய இது போன்ற காரணங்களால் இலங்கை பழந் தமிழ் நாடாகவே இருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. இதையே முற்ற முடிந்த கொள்கையாகக் கொள்ளவில்லை. அறிவியல் முறைப்படி ஆராய்ந்து பார்த்தால் உண்மை வெளிப்படும்.

வை. செயராமன்

★ இந்த இதழில் வெளியாகி யிருக்கும் வட்ட மேஜைக் கடிதங்களில் கோயமுத்தூர் ஸ்ரீ கே. வி. நாகராஜன் எழுதி யிருக்கும் கடிதத்துக்கு ரூ. 30 பரிசளிக்கப்பட்டது.

அலை ஓசை



கல்கி

பதினாறாம் அத்தியாயம்
தேவி பராசக்தி

கதையோ கற்பனையோ என்று கிட்டா வய்யர் சந்தேகப்படும்படி ராஜம்மாள் கூறிய வரலாறு அத்துடன் முடியவில்லை. ராஜத்தையும் சீதாவையும் அதிசயக் கடலில் மூழ்க அடித்துவிட்டு அந்த ஸ்திரீ கீழே இறங்கிப்போன சில நிமிஷத்துக்கெல்லாம் துரைசாமி வந்து சேர்ந்தார். ராஜத்தைப் பார்த்து "இங்கு யாராவது வந்திருந்தார்களா, என்ன? நான் மச்சுப்படி ஏறி வந்தபோது ஒரு 'ஜெனனா' ஸ்திரீ, முகத்தை முக்காடு போட்டு மறைத்துக் கொண்டு, தட தட வென்று இறங்கி ஓடினாளே!" என்றார்.

ராஜம் சீதாவைக் குறிப்பாக ஒரு பார்வை பார்த்து விட்டு, "இங்கு ஒருவரும் வர வில்லையே!" என்றாள். "போகட்டும்; சாயங்கால வேளையில் நீ ஏன் படுத்திருக்கிறாய்? உனக்கு ஏதாவது உடம்பா, என்ன?" என்று கேட்டார் துரைசாமி. "அதெல்லாம் எனக்கு உடம்பு, கிடம்பு ஒன்றுமில்லை. ஏதோ பட பட வென்று வந்தது; படுத்துக் கொண்டேன்" என்றாள் ராஜம். துரைசாமி அருகில் வந்து ராஜத்தின் கன்னத்தைத் தொட்டுப் பார்த்தார். அவருடைய கை ஏன் இவ்வளவு ஜில்லிட்டிருக்கிறது என்று ராஜம் எண்ணினாள். "அசடே! உடம்பு ஒன்றுமில்லை என்கிறாயே! 103 டிக்ரி சுரம் இருக்கும்போலிருக்கிறதே! இதோ தெர்மாமீடர் எடுத்துக் கொண்டு வருகிறேன்!" என்று துரைசாமி தம்முடைய அறைக்குச் சென்றார். அவர் அப்பால் போனதும் சீதா அம்மாவைத் தொட்டுப் பார்த்துவிட்டு, "ஆம். அம்மா! அப்பா சொன்னது சரிதான்! உடம்பு கொதிக்கிறதே!" என்றாள். ராஜத்துக்கும் தனக்குச் சுரந்தான் என்று தெரிந்து விட்டது. உடனே ஒரு சந்தேகம் உதித்தது. சற்று முன் நடந்ததெல்லாம் சுரத்தின் வேகத்திலே தனக்குத் தோன்றிய பிரமையோ என்று எண்ணினாள். அந்த எண்ணம் அவளுக்கு மிக்க வேதனை அளித்தது. அவளுடைய முப்பத்தைந்து பிராயத்தில் இன்று ஒரு நாள் அவளுடைய வாழ்க்கை ஒரு கதை

போல் ஆகியிருந்தது. கதைகளில் நடப்பது போன்ற அதிசய சம்பவம் அன்று நடந்திருந்தது. அது பொய்யாய், கானல் நீராய், வெறும் பிரமையாய்ப் போவதாயிருந்தால், அவளுக்கு ஏமாற்றமாயிராதா?

சந்தேகம் தோன்றிய ஒரு நிமிஷ நேரத்துக்கெல்லாம் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள வழி தோன்றியது. தலையணையடியில் கையை விட்டுத் துளாவிப் பார்த்தாள். ரூபாய் நோட்டுக் கத்தையும் ரத்தின ஹாரமும் கையில் தட்டுப்பட்டன. பிரமையல்ல, உண்மைதான் என்று நிச்சயம் செய்து கொண்டாள். சீதாவை அருகில் அழைத்து அணைத்துக் கொண்டு "சீதா! அப்பாவிடம் ஒன்றும் சொல்லாதே! காரணம் பிற்பாடு சொல்கிறேன்" என்று காதோடு சொன்னாள். சீதாவும் குறிப்பை அறிந்துகொண்டு "சரி, அம்மா!" என்றாள். துரைசாமி தெர்மாமீடர் கொண்டு வந்து வைத்துப் பார்த்தார். சுரம் 104 டிக்ரி இருந்தது. "ஏதோ இந்த வருஷத்துக்கு இன்னும் நீ படுத்துக்கொள்ளவில்லையே என்று பார்த்தேன். படுத்துக் கொண்டாயல்லவா?" என்றார் துரைசாமி. பிறகு அவசரமாக டாக்டரை அழைத்து வரச் சென்றார்.

அன்று படுத்த ராஜம் இருபது நாளைக்கு மேல் ஆகியும் எழுந்திருக்கவில்லை. முதலில் 'இன்புளுயன்ஸா' என்றார் டாக்டர். ஐந்து நாள் ஆன பிறகு "டைபாய்டு என்று சந்தேகமாயிருக்கிறது; பார்க்கலாம்" என்றார். பத்து நாள் ஆன பிறகு "டைபாய்டு இல்லை; 'காலா ஹஸார்' என்று ஒரு புது சுரம் இப்போதெல்லாம் வருகிறது. ஒரு வேளை அதுவாயிருக்கலாம்" என்றார். கடைசியில், "இது உடம்பைப் பற்றிய வியாதியேயில்லை; மனோ வியாதிதான்" என்று முடிவு கூறினார். ஆயினும் தினம் தினம் மருந்து எழுதிக் கொடுப்பதை மட்டும் அவர் நிறுத்தவில்லை.

* * *

இவ்வளவையும் ஓரளவு அவநம்பிக்கையுடன் கேட்டுக் கொண்டிருந்த கிட்டா வய்யர், "போதும் ராஜம்! நிறுத்து! பாக்கியை நாளைக்குச் சொல்லலாம்!" என்றார். இதற்குள் டாக்டருடன் மருந்துக் கடைக்குச் சென்ற துரைசாமியும் மருந்து வாங்கிக் கொண்டு வந்து சேர்ந்தார். முன்னதாக அவருடைய வரவைத் தெரிவித்துக் கொண்டே சீதா அந்த அறைக்குள்ளே பிரவேசித்தாள்.

தமது மனைவியும் மைத்துனரும் இருந்த நிலையைப் பார்த்து விட்டுத் துரைசாமி, "அண்ணா அருமையாக வந்திருக்கிறீர்களே என்று மொச்சு, மொச்சு என்று பேசிக் கொட்டினாளாக்கும். அதிகமாகப் பேசக்கூடாது என்று டாக்டர் சொல்லியிருக்கிறார். அவள் பேசாதபடி நீங்கள்தான் பார்த்துக்கொள்ள வேண்டும்! நான் சொன்னால் கேட்பதில்லை" என்றார்!

கிட்டா வய்யர் தம் மனதிற்குள் "நல்ல வேலை நமக்கு இடுகிறார்! அகண்ட காவேரியில் வரும் வெள்ளத்தை அணை போட்டு நிறுத்து என்று சொல்வது போலிருக்கிறது!" என்று எண்ணிக் கொண்டார்.

* * *

வழக்கம்போல அடுத்த நாளும் டாக்டர் வந்தார். தமக்குத் தொந்தரவு கொடுப்பதற்காகவே ராஜம் வியாதியாய்ப் படுத்துக் கொண்டாள் என்ற பாவத்துடனே வழக்கமான சோதனைகளைச் செய்தார். "நான் சொன்னது சரிதான்; அண்ணா வந்ததில் தங்கைக்குக் கொஞ்சம் உடம்பு சௌகரியமாய்த்தான் இருக்கிறது!" என்றார். ஆனாலும் காகிதமும் பேனாவும் எடுத்துப் பத்துவிதமான மருந்துகளை வரிசையாக எழுதிக் கையெழுத்தும் போட்டுக் கொடுத்தார்.

அன்றைக்கும் டாக்டர் காரில் துரைசாமி மருந்து வாங்கப் போன பிறகு, கிட்டா வய்யர், தங்கையின் சமீபத்தில் போய் உட்கார்ந்தார். "ராஜம்! நீ அதிகமாய்ப் பேசவேண்டாம். ஆனால் ஒரு விஷயம் கேட்கிறேன். அதற்கு மட்டும் யோசித்துப் பதில் சொல்! நீ கொடுத்த பணத்தையும் நகையையும் சீதாவுக்காக உபயோகப்படுத்த வேண்டியதுதானா? அவை கிடைத்த விதத்தைப் பற்றி நீ சொன்ன விவரம் அவ்வளவு திருப்திகரமாயில்லையே! ஏதாவது

கோயில் குளம் அல்லது தர்ம காரியத்துக்குக் கொடுத்து விடுகிறேனே. சீதாவுக்கு நான் கலியாணம் பண்ணிவைக்கிறேன். நீ அதைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். யாரோ வழியிலே போகிற ஸ்திரீ கொடுத்தது நமக்கு என்னத்திற்கு? அவள் யாரோ, என்னமோ, எப்படி இந்தப் பணமும் நகையும் அவளுக்குக் கிடைத்ததோ? அவள் கத்தியை வைத்து விட்டுத் திரும்பி வந்து எடுத்துப் போனதாக நீ சொன்னதெல்லாம் அவளைப் பற்றி என்ன வெல்லாமோ சந்தேகத்தை உண்டாக்குகிறது. நன்றாய் யோசித்துச் சொல்லு!'' என்றார்.

"நன்றாய் யோசித்து விட்டேன், அண்ணா! ஒரு தடவைக்குப் பத்து தடவையாக யோசித்து விட்டேன். உன்னைப் போலவே நானும் ஏதாவது தான தர்மத்துக்குக் கொடுத்து விடலாமா வென்று யோசித்தேன். பீஹார் பூகம்ப நிதிக்குக் கொடுத்து விடலாமா என்றுகூட எண்ணினேன். உனக்குத் தெரியும் அல்லவா, அண்ணா! நீதான் பத்திரிகை படிக்கிறவன் ஆயிற்றே? எத்தனையோ பெரிய பட்டணங்கள் எல்லாம் ஒரே நிமிஷத்தில் மண்ணோடு மண்ணாகி விட்டதாம். அங்கே ஜனங்களின் கஷ்டத்தைக் கேட்கச் சகிக்கவில்லை. அந்த நிதிக்குக் கொடுத்து விடலாமா இந்தப் பணத்தை என்று நினைத்தேன்; ஆனால் அப்படிச் செய்ய மனது வரவில்லை. அது சீதாவின் சீதனம், — வேறு விதமாய்ச் செலவழிக்க எனக்குப் பாத்தியதை இல்லை என்று தோன்றியது. ஏதோ என் கையில் இருந்த சொந்தப் பணம் இருபது ரூபாயைக் கொடுத்து அனுப்பினேன். பூகம்ப நிதிக்கு நீ ஏதாவது கொடுத்தாயா, அண்ணா?'' என்று கேட்டாள்.

"அதெல்லாம் பெரிய விஷயம், அம்மா! நீயும் நானும் கொடுத்துத்தானா ஆகப்போகிறது?''

"அப்படியில்லை, ஏதோ நாமும் மனுஷ ஜன்மந்தான் என்று காட்டிக் கொள்ள வேண்டாமா? நம்மாலானதை நாம் செய்கிறது.''

"ஆகட்டும்; அப்படியே செய்யலாம். சீதாவின் விஷயத்தை இப்போது பேசி முடிக்கலாம். அந்தப் பணத்தையும் நகையையும்......''

"சீதாவுக்குக் கிடைத்த அந்தச் சீதனம் சாதாரண சீதனமல்ல. அத்துடன் தெய்வத்தின் ஆசீர்வாதமும் சேர்ந்திருக்கிறது, அண்ணா!''

"அது எப்படிச் சொல்கிறாய்? அந்த ஸ்திரீ யார், எப்படிப்பட்டவள் என்று எதுவும் தெரியவில்லையே?''

ராஜம் சற்று நேரம் கண்ணை மூடிக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். பிறகு, கண்களைத் திறந்து கிட்டா வய்யரை ஏறிட்டுப் பார்த்து, "அந்த ஸ்திரீ யார் என்று எனக்குத் தெரியும், அண்ணா!'' என்றாள்.

"தெரியுமா? பின்னே ஏன் யாரோ என்று சொன்னாய்? அவள் யார்?''

"இத்தனை நாளாக அவள் யார் என்று தெரியவில்லை. அதனால் 'யாரோ' என்றேன். நேற்று இரவு நான் கண்ட கனவிலே அந்த ஸ்திரீ இன்னார் என்று தெரிந்தது.''

"அப்படியா, அம்மா! யார் என்று தெரிந்தது?''

"அவள் தேவி பராசக்தி, அண்ணா! என்னுடைய இருபது வருஷப் பிரார்த்தனை வீண் போகவில்லை!'' என்றாள் ராஜம். அவளுடைய கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருகியது.

இதனால் கிட்டா வய்யருடைய மனம் இன்னும் அதிகமாகக் குழம்பியது. "டாக்டர் சொன்னது உண்மைதான்போலிருக்கிறது. இவளுக்கு மனநிலைதான் ஏதோ கோளாறு ஏற்பட்டிருக்க வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டார். உடம்பாயிருந்தாலும் மனதாயிருந்தாலும் சீக்கிரத்தில் ராஜத்தைக் குணப்படுத்தி அருளும்படி அவருடைய குல தெய்வத்தை வேண்டிக் கொண்டார்.

* * *

அதற்கு மறு நாளும் டாக்டர் வந்தார். வழக்கம்போல் சோதனை செய்து பார்த்தார். "இன்றைக்கு இன்னும் கொஞ்சம் பரவாயில்லை!'' என்றார். பிறகு 'பிரிஸ்கிருப்ஷன்' எழுதுவதற்குக் கையில் காகிதமும் பேனாவும் எடுத்தார். ஆனால் ஒன்றும் எழுதவில்லை. திடீரென்று ஏதோ

தோன்றியவரைப்போல் காகிதத்தை யும் பேனாவையும் மேஜை வைத்தார்.

"மிஸ்டர் துரைசாமி! ஒரு விஷயம் சொல்லட்டுமா!" என்றார்.

"பேஷாகச் சொல்லுங்கள்! கேட்பானேன்?" என்றார் துரைசாமி.

"உங்கள் சம்சாரத்துக்கு இனிமேல் இந்த மருந்துகளினாலெல்லாம் உபயோகமில்லை!"

"பின்னே என்ன மருந்து உபயோகம்? ஆயுர்வேதம் பார்க்கலாம் என்கிறீர்களா?"

"ஆயுர்வேதத்துக்குப் போனால் அவ்வளவுதான். இந்த அம்மாளை யமனிடம் ஒப்புவிக்கிற மாதிரிதான்!"

"பின்னே என்ன சொல்கிறீர்கள்?"

"உங்கள் மனைவிக்கு இப்போது கொடுக்க வேண்டிய மருந்து இடமாறுதல்தான். இந்தப் பம்பாய் நகரத்தில் இருபது வருஷமாக இருந்திருக்கிறார்கள் அல்லவா? வேறு ஊருக்குப் போய்ச் சில காள் இருந்து விட்டு வரட்டும். உங்கள் மைத்துனர் கிட்டா வய்யர் கிராமவாசிதானே? அவரோடு கூட்டி அனுப்புங்களேன்!"

"எனக்குக் கொஞ்சங்கூட ஆட்சேபமில்லை. கிட்டா வய்யர் அழைத்துப் போவதாயிருந்தால்......"

"அழைத்துப் போவதாயிருந்தால் என்ன? இவ்வருஷமாக அழைத்துப் போகிறேன். போன வருஷமே அழைத்துப் போகிறேன் என்று சொன்னேன். இவர்தான் அனுப்பவில்லை......"

"நானா அனுப்பவில்லை? உங்கள் தங்கைதான் 'போகமாட்டேன்' என்று பிடிவாதம் பிடித்தாள்."

"இந்த வருஷமும் அதையேதான் சொல்கிறேன்!" என்றாள் ராஜம்மாள்.

"இந்தப் பிடிவாதம் உனக்கு ஆகாது, அம்மா! ஊர் மாறுவிட்டால் உனக்கு உடம்பு குணமாகாது."

"டாக்டர்! இருபது வருஷமாக இந்த இடத்தில் இருந்து விட்டேன். பாக்கி இருக்கும் சில நாளும் இங்கேயே இருந்து விடுகிறேன்."

"அப்புறம் உங்கள் இஷ்டம்; நான் என்ன சொல்லட்டும்?" என்று டாக்டர் கூறி மறுபடியும் காகிதத்தையும் பேனாவையும் எடுத்து வரிசையாக மருந்துகளை எழுதினார்.

பதினேழாம் அத்தியாயம்

துரைசாமியின் இல்லறம்

டாக்டருடைய யோசனை ராஜத்தைத் தவிர மற்ற எல்லாருக்கும் பிடித்தமாயிருந்தது. கிட்டா வய்யர் ராஜத்தைத் தம்முடன் ஊருக்கு வரும்படி அடிக்கடி வற்புறுத்தினார். அவருடன் சேர்ந்து துரைசாமியும் சொன்னார். இந்த இருவரையும் விட அதிகமாகச் சீதா தன் தாயாரிடம் மன்றாடினாள். "ஊருக்குப் போய் வரலாம், அம்மா! எனக்கு லலிதாவைப் பார்க்க வேண்டும்போலிருக்கு!" என்பதாக நிமிஷத்துக்கொரு தடவை சொல்லிக் கொண்டிருந்தாள். ஆனால் ராஜம்மாள் இதற்கெல்லாம் இணங்குவதாக இல்லை.

இரண்டு மூன்று நாளைக்குப் பிறகு துரைசாமியின் சுபாவத்தில் ஒரு மாறுதல் காணப்பட்டது. கிட்டா வய்யர் வந்த புதிதில் சாந்தமாகவும் எல்லாரிடமும் பிரியமாகவும் இருந்தவர் திடீரென்று வெறி கொண்டவர் போல் காணப்பட்டார். வீட்டில் அதிகமாகத் தங்குவதில்லை. யாருடனும் பேசுவதில்லை. ராஜத்தின் உடம்பைப் பற்றிக் கவனிப்பதில்லை. சீதாவின் பேரிலும் எரிந்து விழுந்தார். பாத்திரங்களையும் சாமான்களையும் தடார் படார் என்று வீசி எறிந்தார்.

ஒரு நாள் இரவு ராஜம் படுத்திருந்த அறைக்குள்ளே பெரிய ரகளை நடந்தது. துரைசாமியும் ராஜமும் முதலில் சாவதானமாகப் பேசத் தொடங்கினார்கள். கிட்டா வய்யரும் சீதாவும் இன்னொரு அறையில் படுத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் தூங்கவில்லை. துரைசாமிக்கும் ராஜத்

துக்கும் நடந்த சம்பாஷணை அரை குறையாக அவர்களுடைய காதில் விழுந்து கொண்டிருந்தது.

சற்று நேரத்துக்குள் சம்பாஷணையின் ஸ்வரம் ஏறியது. வார்த்தைகள் வர வரக் கடுமையாயின.

"நான் செத்துப் போனால் உங்களுக்குச் சந்தோஷமாயிருக்கும்!"

"ஒரு வழியாகச் செத்துத்தொலைந்து போய்விடேன்! உயிரோடிருந்து ஏன் என் பிராணனை வாங்குகிறாய்?"—

இப்படிப்பட்ட கொடூரமான பேச்சுக்கள் எல்லாம் கேட்டன.

கிட்டாவய்யருக்குத் தம் மனைவியின் சுபாவத்தில் சில நாளாக ஏற்பட்டிருந்த மாறுதல் ஞாபகம் வந்தது. அதைப் பற்றி அவர் மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார். இப்போது அவர் இந்தத் தம்பதிகளின் இல் வாழ்க்கையைக் காட்டிலும் தம்முடைய இல்வாழ்க்கை எவ்வளவோ மேலானதல்லவா என்று எண்ணித் திருப்தி அடைந்தார்.

திடீரென்று ராஜத்தின் அறையில் 'பட், பட், பட்' என்று சத்தம் கேட்டது. "ஐயோ! வேண்டாமே! ஐயோ, வேண்டாமே!" என்று ராஜம் அலறினாள். ராஜத்தைத் துரைசாமி அடித்துக் கொல்லுகின்றார் என்று நினைத்துக்கொண்டார் கிட்டாவய்யர். நிலைமை மிஞ்சி விட்டது.—இனித் தாம் சும்மாப் படுத்துக் கொண்டிருக்கக் கூடாதென்று ஒரு நொடியில் தீர்மானித்து விழுந்தடித்துக் கொண்டு ஓடினார். அறைக் கதவு வெறுமனே சாத்தியிருந்தபடியால் திறந்து கொண்டு உள்ளே பிரவேசித்தார்.

அறைக்குள் அவர் கண்டது அவர் நினைத்ததற்கு மாறாக இருந்தது. துரைசாமி ராஜத்தை அடிக்கவில்லை; தம்முடைய தலையிலேதான் அப்படிப் 'பட், பட், பட்' என்று போட்டுக் கொண்டிருந்தார். அதை நிறுத்துவதற்குத்தான் ராஜம் "வேண்டாமே! வேண்டாமே!" என்று கத்தினாள்.

அந்த ஒரு கண நேரத்தில் கிட்டாவய்யருக்கு ஒரு பெரிய உண்மை புலனாயிற்று. வீட்டின் ஒரு சிறிய பலகணியின் வழியாக வெளியே பார்த்தால் விஸ்தாரமான மைதானமும் தொலை தூரத்திலுள்ள மரங்களும் மலைத் தொடர்களும் மலைச் சிகரத்துக்கு மேலே வானில் உலாவும் மேகங்களும் தெரிவது போலக் கிட்டாவய்யருக்கு இந்த ஒரு சம்பவத்திலிருந்து அந்தத் தம்பதிகளின் இருபது வருஷத்து இல்வாழ்க்கையின் இயல்பு தெரிய வந்தது. இதுவரையில் மாப்பிள்ளை துரைசாமி தம் சகோதரியைக் கொடுமைப் படுத்துவதாக அவர் நினைத்து ராஜத்தினிடம் இரக்கப் பட்டுக் கொண்டிருந்தார். இப்போது கொடுங்கோன்மை செலுத்துவது உண்மையில் ராஜந்தான் என்பதை அறிந்து துரைசாமியிடம் அவர் இரக்கம் கொண்டார்.

கிட்டாவய்யரைக் கண்டதும் துரைசாமி தம் தலையில் அடித்துக் கொள்வதைச் சட்டென்று நிறுத்தினார்; ராஜமும் அலறுவதை நிறுத்தினாள்.

துரைசாமியின் அருகில் சென்று கிட்டாவய்யர் உட்கார்ந்து, "மாப்பிள்ளை! இப்படிச் செய்யலாமா?" என்று சாந்தமான குரலில் கூறினார். இதற்குப் பதிலாகத் துரைசாமி சத்தம் போட்டுக் கத்தினார்:—

"ஆமாம், ஸார்! 'இப்படிச் செய்யலாமா?' 'அப்படிச் செய்யலாமா?' என்று என்னிடந்தான் சொல்வீர்கள். இவளுடைய மூடப் பிடிவாதத்தை மாற்ற உங்களால் முடியவில்லையல்லவா! 'ஊர் மாறினால்தான் இவள் பிழைப்பாள்' என்று டாக்டர் கண்டிப்பாகச் சொல்கிறார். இவள் என்ன சொல்கிறாள், தெரியுமா? என் காலடியிலேயே கிடந்து செத்துப் போக வேண்டுமாம்! அப்போதுதான் இவளுக்கு நல்ல கதி கிடைக்குமாம்! இவளுடைய எண்ணம் எப்படியிருக்கிறது, பாருங்கள்! குழந்தை சீதாவுக்குக் கலியாணம் செய்து பார்க்க வேண்டுமே என்ற அபிலாஷை கூட இவளுக்குக் கிடையாது! 'செத்துப் போகிறேன்' 'செத்துப் போகிறேன்'-இருபத்து நாலுமணி நேரமும் இதுவே ஜபம்! — உண்மையாகவே இவள் செத்துத் தொலைந்து போய் விட்டால் தாயில்லாப் பெண்ணை வைத்துக் கொண்டு நான் என்ன செய்கிறது? சீதாவுக்குக் கலியாணம் செய்து

வைத்து விட்டு இவன் போய்த் தொலைந்தாலும் பாதகமில்லை!"

இந்தச் சண்ட மாருதப் பேச்சுக்கு முன்னால் என்ன பதிலைச் சொல்வது என்று கிட்டா வய்யர் திகைத்து நிற்கையில் ராஜம்மாள் அவருடைய உதவிக்கு வந்தாள். மூச்சு வாங்கிக் கொண்டே அவள் பேசினாள்:—

"நான் உன்னுடன் ஊருக்கு வருகிறேன், அண்ணா! நாளைக்கே புறப்படத் தயார். நான் இந்த வீட்டில் இருந்து இவர் காலடியில் நிம்மதியாகச் சாவது இவருக்குப் பிடிக்கவில்லை. அங்கே மன்னியிடம் இடிபட்டுப் பேச்சுக் கேட்டுத்தான் சாகவேண்டுமாம். அகண்ட காவேரிக் கரையிலேதான் என்னை வைத்துக் கொளுத்த வேண்டுமாம்!......"

"ராஜம்! என்ன இப்படி உளறுகிறாய்? உனக்கு மூளை அடியோடு பிசகி விட்டதா? ராஜம்பேட்டையில் இருக்க உனக்கு இஷ்டமில்லா விட்டால் உன் தமக்கை வீடு பக்கத்து ஊரில் இருக்கிறதே, அங்கே இருக்கலாமே? உன் பேரில் எங்களுக்கெல்லாம் என்ன விரோதமா? டாக்டர் சொன்னபடியினால் தானே எல்லாரும் வற்புறுத்துகிறோம்? கொஞ்சம் மனதைச் சாந்தப்படுத்திக் கொண்டு யோசித்துப் பேசு அம்மா!" என்றார் கிட்டா வய்யர்.



"சாந்தமாக யோசித்துத் தான் சொல்கிறேன், அண்ணா! ஏதாவது தப்பாகச் சொல்லியிருந்தால் மன்னித்துக்கொள்! நான் உன்னோடு புறப்பட்டு வருகிறேன்! நிச்சயமாகத்தான் சொல்கிறேன்!" என்றாள் ராஜம்.

"இவனுடைய பிடிவாதத்துக்கு என்ன காரணம் தெரியுமா, ஸார்! இவன் இங்கே இருந்துதான் என்னைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறானாம்! இல்லாவிட்டால் நான் குடித்துக் கெட்டுக் குட்டிச் சுவராய்ப் போய் விடுவேனாம்! அப்படி இவன் மனதிற்குள்ளே எண்ணமாம்! அவ்விதமெல்லாம் நான் கெட்டுப் போகிறவனாயிருந்தால் இவனால் என்னைத் தடுக்க முடியுமா?..."

"நான் தான் ஊருக்குப் புறப்படுகிறேன் என்று சொல்லி விட்டேனே! இன்னும் என்னத்துக்காக இந்தப்



பேச்செல்லாம்? அண்ணா! நீ போய்ப் படுத்துக் கொள்!... சீதா! சீதா!" என்று ராஜம் கூவினான்.

"ஏன், அம்மா!" என்று வெளியிலிருந்தே சீதா கேட்டாள்.

"இன்னும் விழித்துக் கொண்டு தான் இருக்கிறாயா? இங்கே வா, அம்மா!" என்றாள் ராஜம்.

சீதா குதித்துக் கொண்டு உள்ளே வந்தாள். அவள் முகம் மலர்ந்திருந்தது. அப்பாவும் அம்மாவும் இந்த மாதிரி சண்டை போடுவது வெகு சகஜமாகையால் அதைப்பற்றி அவள் கவலைப்படவில்லை. சண்டையின் முடிவாக ஊருக்குப் போகிற விஷயம் முடிவானது அவளுக்கு அளவில்லாத குதூகலத்தை அளித்திருந்தது!

"சீதா! உன்னுடைய பிரார்த்தனை நிறைவேறி விட்டது. ஊருக்குப் போக வேண்டும். லலிதாவைப் பார்க்க வேண்டும் என்று வாய் ஓயாமல் சொல்லிக்கொண்டிருக்

தாயே? கடைசியாக நாம் ஊருக்குப் போகிற தென்றே தீர்மானமாகி விட்டது. உனக்குச் சந்தோஷந் தானே?" என்றாள் ராஜம்.

"ரொம்ப சந்தோஷம், அம்மா!" என்றாள் லலிதா.

அன்று இரவிலிருந்து ராஜத்தின் உடம்பு விரைவாகத் தேறி வந்தது. கிட்டா வய்யர் பம்பாய்க்கு வந்த எட்டாவது நாள் அவரும் ராஜம் மாளும், சீதாவும் விக்டோரியா டெர்மினஸ் ஸ்டேஷனில் மதராஸ் மெயிலில் ஏறினார்கள். துரைசாமி ஸ்டேஷனுக்கு வந்திருந்து டிக்கட் வாங்கிக் கொடுத்து அவர்களை ரயில் ஏற்றி விட்டார்.

விக்டோரியா டெர்மினஸ் ஸ்டேஷன் அமளி துமளிப் பட்டுக்கொண்டிருந்தது. பன்னிரண்டு பிளாட்பாரங்களில் ஏக காலத்தில் ரயில் வண்டிகள் வரும் சத்தமும், புறப்படும் சத்தமும், வண்டிகள் கோக்கப்படும் சத்தமும், என்ஜின்கள் ஊதும் சத்தமும், குப் குப் என்று புகை விடும் சத்தமும், ஆயிரக் கணக்கான பிரயாணிகள் பல பாஷைகளில் சம்பாஷிக்கும் சத்தமும், 'சா வாலா'க்களின் கூவலும், 'பாணி வாலா'க்களின் கூக்குரலும், போர்ட்டர்களின் ஆர்ப்பாட்டமும், பத்திரிகைச் சிறுவர்களின் ஆரவாரமும் சேர்ந்து காது செவிடு படும்படியான பெருங் கோஷமாக எழுந்து கொண்டிருந்தது. வெள்ளைக்காரர்களும் வெள்ளைக்காரிச்சிகளும் குஜராத்திகளும் மராட்டியர்களும் பார்ஸிகளும் மதராஸிகளும் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் கிழவர்களும் ஒருவரோடொருவர் மோதி இடித்துக்கொண்டு அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தார்கள்.

ஆனால் இந்தக் காட்சிகள் ஒன்றிலும் ராஜத்தின் கவனம் செல்லவில்லை. அவ்வளவு சத்தத்தில் எதுவும் அவள் காதில் விழவும் இல்லை.

அவளுடைய இரு கண்களும் துரைசாமியின் மீது ஏகாக்கிர பாவத்துடன் படிந்திருந்தன. துரைசாமி சொன்ன வார்த்தைகளையே அவளுடைய காதுகள் கேட்டுக் கொண்டிருந்தன.

ரயில் புறப்படும் சமயத்தில் கிட்டா வய்யர் ரயில் வண்டியின் 'கேட்' அருகில் நின்று துரைசாமியுடன் பேசிக் கொண்டிருந்தார். ஆனால் பேசிக் கொண்டிருந்த போதே அவருடைய கவனம் வேறு பல விஷயங்களின் மீதும் சென்று கொண்டிருந்தது. முக்கியமாக பத்திரிகை விற்ற பையன்கள் கூக்குரல் போட்டுக் கத்திய ஒரு விஷயம் அவர் காதில் விழுந்து மனதிலும் பதிந்தது. "ரஜனிபூர் மகா ராஜாவைக் கொல்ல முயற்சி" "ஒரு பெண் பிள்ளையின் சாகசம்" "கையில் கத்தியுடன் கைது செய்யப்பட்டாள்" என்று அந்தப் பத்திரிகை விற்ற பிள்ளைகள் ஆங்கிலத்திலும் ஹிந்துஸ்தானியிலும் கூச்சலிட்டார்கள். கிட்டா வய்யர் தமக்குத் தெரிந்த இங்கிலீஷ் ஞானத்தைக் கொண்டு விஷயத்தை ஒருவாறு அறிந்துகொண்டார். துரைசாமியுடன் பேசிக்கொண்டிருந்தபோதே "இது என்ன மகாராஜா கொலை விஷயம்?" என்று கேட்டார். "பம்பாயில் இந்தமாதிரி எவ்வளவோ நடக்கும்! நமக்கென்ன அதைப் பற்றி?" என்று துரைசாமி கூறிய போது அவருடைய முகம் கறுத்துச் சுருங்குவதைக் கிட்டா வய்யர் கவனிக்கும்படி நேர்ந்தது.

இதற்குள்ளே வண்டி புறப்படும் நேரம் வந்து விட்டது. ரயில் நகரத் தொடங்கிய பிறகு துரைசாமி உணர்ச்சி மிகுந்த குரலில் உரத்த சத்தம் போட்டுக் கூறியதாவது:— "ராஜம்! கூடிய சீக்கிரம் நான் அங்கே வந்து உங்களைத் திருப்பி அழைத்துக் கொண்டு வருகிறேன். வீண் கவலைப் படாதே! நான் சரியாக இருப்பேன்! சீதா! அம்மாவைச் சரியாகப் பார்த்துக் கொள்! நான் சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கட்டும். கிட்டா வய்யர்! போய் வருகிறீர்களா? ஜாக்கிரதை! இரவில் வண்டியின் உட்புறம் தாழ்ப்பாள் போட்டுக்கொள்ளுங்கள்! ராஜம்! உடம்பு ஜாக்கிரதை!"

துரைசாமி உண்மையாகவே தான் அவ்விதமெல்லாம் சொன்னார். 'சீக்கிரத்தில் ஊருக்கு வந்து, உங்களை அழைத்து வருகிறேன்' என்று அவர் கூறியதும் மனப்பூர்வமாகத் தான். ஆனால் மனிதன் ஒரு திட்டம் போட, விதி வேறு விதமாகத் திட்டம் போடுகிறதை உலகில் பார்க்கிறோமல்லவா!

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

ரா.கி.

29. கரையில் ஆபத்து

கரையிலிருந்து வந்த இறுதிச் செய்திக்குக் காந்திஜி மற்றப் பிரயாணிகளையும் கலந்து கொண்டு பதில் அனுப்பினார். "திரும்பிப் போக முடியாது. நேட்டால் துறைமுகத்தில் இறங்குவதற்கு எங்களுக்கு உரிமை உண்டு. என்ன நேர்ந்தாலும் சரி, அந்த உரிமையை நிலைநாட்ட உறுதி கொண்டிருக்கிறோம்" என்பதுதான் பதில்.

இனியும் கப்பல்களைக் கடலிலேயே நிறுத்திவைக்க முடியாது என்று அதிகாரிகள் கண்டார்கள். சொல்லக்கூடிய காரணம் ஒன்றும் இல்லை. எனவே ஹார்பருக்குள் கப்பல்கள் வருவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.


இரண்டு கப்பல்களும் கரையோரமாகக் கொண்டுவந்து நிறுத்தப்பட்டன. இத்தனை நாளும் காத்திருந்த பிரயாணிகள் இப்போது பரபரப்புடன் இறங்கினார்கள். நேட்டால் அரசாங்க அட்டர்னியும் ஏற்கெனவே காந்திஜிக்குத் தெரிந்தவருமான மிஸ்டர் எஸ்கோம்ப் இச்சமயத்தில் காந்திஜிக்கு ஒரு செய்தி அனுப்பினார். "இங்குள்ள ஐரோப்பியர்கள் உங்கள் பேரில் தனிப்பட மிகவும் கோபங் கொண்டிருக்கிறார்கள். இது உங்களுக்குத் தெரிந்ததே. ஆகையால் நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் பகலில் கப்பலிலிருந்து இறங்க வேண்டாம். நன்றாக இருட்டிய பிறகு இறங்குங்கள். துறைமுகத்தின் தலைமை அதிகாரி மிஸ்டர் டாட்டம் உங்களைப் பத்திரமாக அழைத்துப் போய் வீட்டில் விட்டு விடுவார்."—இந்தச் செய்தியைக் கப்பல் தலைவர் காந்திமகானிடம் தெரிவித்தார். காந்திஜியும் அதன்படி செய்ய உத்தேசித்தார். ஆனால் அரை மணி நேரத்துக் கெல்லாம் டர்பன் இந்தியர்களின் வக்கீலான மிஸ்டர் லாப்டன் என்பவர் கப்பலுக்கு வந்து சேர்ந்தார். அவர் காந்திஜியிடம் சொன்னதாவது :—

"நீங்கள் இருட்டிய பிற்பாடு நகரில் பிரவேசிக்கும் யோசனை எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. எதற்காக அப்படிப் பயப்பட வேண்டும்? உங்கள் மனைவியையும் குழந்தைகளையும் முதலில் வண்டியில் ஏற்றி ரஸ்டம்ஜியின் வீட்டுக்கு அனுப்பிவிடுவோம். நாம் இருவரும் நடந்து போவோம். யாரும் உங்களுக்குத் தீங்கு செய்வார்கள் என்று நான் கருதவில்லை. நகரம் இப்போது அமைதியாயிருக்கிறது. கிளர்ச்சி அடங்கிவிட்டது. அப்படி ஏதாவது அபாயம் வருவதாயிருந்தாலும் அதற்குப் பயப்பட்டுக் கொண்டு திருடனைப் போல் இருட்டிலே போவதா? கூடவே கூடாது! உங்கள் விருப்பம் என்ன?"—இவ்விதம் மிஸ்டர் லாப்டன் கூறியது காந்திஜிக்கு நியாயமாகத் தோன்றியது. அவருடைய யோசனைப்படியே செய்வதாக ஒப்புக் கொண்டார். காந்திஜியின் மனைவியும் குழந்தைகளும் முன்னதாக வண்டியில் ஏறி ரஸ்டம்ஜியின் வீட்டுக்குப் பத்திரமாய்ப் போய்ச் சேர்ந்தார்கள்.

கப்பல் தலைவரிடம் அநுமதி பெற்றுக் கொண்டு காந்திஜி மிஸ்டர் லாப்டனுடன் கப்பலிலிருந்து இறங்கினார். துறைமுகத்திலிருந்து இரண்டு மைல் தூரத்திலிருந்த ரஸ்டம்ஜியின் வீட்டுக்கு இருவரும் நடந்து செல்லத் தொடங்கினார்கள்.

கப்பலிலிருந்து இறங்கிச் சிறிது தூரம் செல்வதற்குள்ளே வெள்ளைக்காரச் சிறுவர்கள் சிலர் அவரைப் பார்த்து இன்னார் என்று தெரிந்து கொண்டார்கள். உடனே

அவர்கள் "காந்தி! காந்தி!" என்று கூச்சல் போட்டார்கள். அதைக் கேட்டு ஐந்தாறு பெரிய ஆட்கள் வந்து அந்தப் பிள்ளைகளுடனே சேர்ந்து கூச்சல் போட்டார்கள். அந்தக் கூச்சலைக் கேட்டு விட்டு நாலாபுறத்திலிருந்தும் சிறுவர்களும் பெரியவர்களும் ஓடி வரத் தொடங்கினார்கள்.



இதைப் பார்த்ததும் மிஸ்டர் லாப்டனுக்குப் பயமாய்ப் போய்விட்டது. கூட்டம் பெரிதாகி விட்டால் தொந்தரவாய்ப் போய் விடலாமென்றும், காந்திஜி மேலே நடந்து செல்ல முடியாமற் போய்விடலாம் என்றும் எண்ணினார். ஆகையால் பக்கத்தில் நின்ற ஒரு ரிக்ஷாவைக் கூவி அழைத்தார். மனிதன் இழுக்கும் வண்டியாகிய ரிக்ஷாவில் காந்திஜி ஏறுவதே கிடையாது. அச்சமயம் மிஸ்டர் லாப்டனுடைய வற்புறுத்தலுக்காக ஏற உத்தேசித்தார். ஆனால் அந்த உத்தேசம் பயனளிக்கவில்லை. கூட்டத்தினர் சிலர் ரிக்ஷா வண்டியைச் சுற்றி நின்று கொண்டு ரிக்ஷாக்காரனைப் பயமுறுத்தினார்கள். அவன் ஓடியே போய் விட்டான்!

காந்தியும் மிஸ்டர் லாப்டனும் மேலே நடந்தார்கள். போகப் போகக் கூட்டம் பெருகியது; கூச்சலும் அதிகமாயிற்று. மேலே ஒரு அடி வைக்கவும் முடியாத நிலைமை ஏற்பட்டது. அப்போது கூட்டத்தில் சிலர் மிஸ்டர் லாப்டனைப் பிடித்து இழுத்து அப்புறம் கொண்டு போனார்கள். மற்றவர்கள் தன்னந் தனியாக நின்ற காந்திஜியைச் சூழ்ந்து கொண்டார்கள். அந்த ஏழை பக்காளன் மீது கல்லை விட்டெறிந்தார்கள். ஒரு மூடன் அவருடைய தலைப்பாகையைப் பிடுங்கிக் கொண்டான். பிறகு ஜனங்கள் அம்மகானைக் கையாலேயே அடிக்கவும் குத்தவும் தொடங்கினார்கள். காந்திஜியின் உடல் தளர்ந்தது; தலை சுற்றத் தொடங்கியது. ஆயினும் மன உறுதி மட்டும் குன்றவில்லை. கீழே விழுந்து விடாதிருக்கும் பொருட்டுப் பக்கத்திலிருந்த வீட்டின் முன்புற வேலிக் கம்பிகளைப் பிடித்துக் கொண்டார். அவரைச் சூழ்ந்திருந்த கூட்டம் மேலும் அதிகமாகி நாலாபுறத்திலும் அவரை நெருக்கியது. அவர் மூச்சு விடவும் முடியாத நிலைமை ஏற்பட்டது.

அச்சமயத்தில் கடவுள் அருளால் டர்பன் போலீஸ் சூபரின்டெண்டு மிஸ்டர் அலெக்ஸாண்டரின் மனைவி அந்த வழியாகச் சென்றார். அவருக்கு ஏற்கனவே காந்திஜியைத் தெரியும். கூட்டத்தையும் கூக்குரலையும் பார்த்ததும் என்ன விஷயம் என்று விசாரித்தார். கூட்டத்தின் நடுவில் காந்திஜி அகப்பட்டுக் கொண்டிருக்கிறார் என்று தெரிந்ததும், தீரமுள்ள அந்தப் பெண்மணி கூட்டத்திற்குள் துணிந்து புகுந்தார். ஜனங்களை விலக்கிக் கொண்டு காந்திஜியின் அருகில் வந்து சேர்ந்தார். அப்போது வெய்யில் இல்லா விட்டாலும் தம்முடைய கையிலிருந்த குடையை விரித்துப் பிடித்துக் கொண்டார். காந்திஜிக்கும் ஜனக் கூட்டத்துக்கும் மத்தியில் நின்றார். இதனால் ஜனங்கள் காந்திஜியை நெருங்கவோ அடிக்கவோ முடியாமற் போயிற்று. ஸ்ரீமதி அலெக்ஸாண்டர் மீது அடி படாமல் காந்திஜியை அடிக்க முடியவில்லை.

இதற்குள்ளே அங்கு நடந்ததை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த இந்திய இளைஞன் ஒருவன் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடினான். அங்கே போலீஸ் சூப்பிரண்டெண்டு மிஸ்டர் அலெக்ஸாண்டர் இருந்தார். அவரிடம் தகவலைச் சொன்னான். மிஸ்டர் அலெக்ஸாண்டர் உடனே சில போலீஸ் ஜவான்களை அனுப்பினார். காந்திஜியை அவருடைய வீட்டில் பத்திரமாய்க் கொண்டு போய்ச் சேர்த்து விட்டு வரும்படி அவர்களுக்கு உத்தரவிட்டு அனுப்பினார். போலீஸ் ஜவான்கள் அவ்விதமே சென்று காந்திஜியைச் சுற்றி வளையம்போல் நின்று கொண்டு ரஸ்டம்ஜியின் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள்.

அவர்கள் போகும் வழியிலேயே போலீஸ் ஸ்டேஷன் இருந்தது. ஸ்டேஷன் வாசலில் மிஸ்டர் அலெக்ஸாண்டர் காந்திஜியைச் சந்தித்து "நீங்கள் இன்றைக்கு இங்கேயே இருந்து விடுவது நலம். போலீஸ் ஸ்டேஷனிலேயே இருந்து விட்டால் உங்களைப் பாதுகாப்பதற்கு எளிது ஆயிற்று!" என்றார்.

காந்திஜி அவருக்கு நன்றி செலுத்தினார். ஆயினும் உயிருக்குப் பயந்து கொண்டு போலீஸ் ஸ்டேஷனில் தஞ்சம் புகுவதற்குக் காந்திஜி விரும்பவில்லை.

“இனிமேல் ஒன்றும் அபாயமிராது. ஜனங்கள் சீக்கிரத்தில் சாந்தமடைந்து விடுவார்கள். அவர்களுடைய குற்றம் அவர்களுக்கே புலப்பட்டு விடும்!” என்றார்.

பிறகு போலீஸ் துணையுடன் வழியில் வேறு அபாயம் எதுவுமின்றி ரஸ்டம்ஜியின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்.

காந்திஜியின் உடம்பெல்லாம் அடிபட்டதினால் தழும்பேறியிருந்தது. ஓரிடத்தில் பலமான காயம் ஏற்பட்டிருந்தது. காயத்துக்குச் சிகிச்சை செய்தார்கள். அடிபட்ட தழும்புகளுக்கு ஒத்தடம் கொடுத்தார்கள். நல்ல வேளையாக இந்த மட்டோடு போயிற்றே என்று வீட்டில் இருந்தவர்கள் அனைவரும் ஆறுதல் அடைந்தார்கள்.

ஆனால் அந்த மட்டோடு போய்விடவில்லை! வீட்டைச் சுற்றி வெள்ளைக்காரர்களின் கூட்டம் சேர்ந்து கொண்டிருந்தது. சீக்கிரத்தில் கூட்டம் பெரிதாகி விட்டது. “காந்தியை வெளியே அனுப்பு!” என்று ஒரு குரல் எழுந்தது. ஒரு குரல் பத்துக் குரலாயிற்று. பத்துக் குரல் நூறு குரலாயிற்று. “காந்தியை வெளியே அனுப்பு!” என்ற கோஷம் வானை அளாவியது. அந்தக் கோஷம் வீட்டுக்குள்ளே இருந்தவர்களின் காதிலும் விழுந்தது. தூரத்தில் போலீஸ் ஸ்டேஷனில் இருந்த மிஸ்டர் அலெக்ஸாண்டர் காதிற்கும் எட்டியது.


மிகத் திறமைசாலியான அலெக்ஸாண்டர் ஓடோடியும் வந்தார். ஜனக் கூட்டத்தை அச்சமயம் பயமுறுத்துவதில் பயனில்லையென்று கண்டார். அவர்களுடன் தமாஷாகப் பேசிக் குஷிப்படுத்தத் தொடங்கினார். இதன்மூலமாக அவர்கள் அத்துமீறி வீட்டுக்குள் புகாமலும் வேறு தீய செயல்களில் இறங்காமலும் பார்த்துக் கொண்டார்.

ஆனால் இம்மாதிரி எத்தனை நேரம் சமாளிக்க முடியும்? ஜனங்கள் கலைந்து போகிற வழியாகக் காணவில்லை. மிஸ்டர் அலெக்ஸாண்டர் யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தார். வீட்டின் பின்புற வழியாக ஒரு ஆளை அனுப்பிக் காந்திஜியிடம் ஒரு செய்தி சொல்லும்படி செய்தார். அந்தச் செய்தி இதுதான்:—“உங்கள் நண்பரின் வீட்டையும் வீட்டிலுள்ள உடைமைகளையும் உங்கள் குடும்பத்தாரையும் நண்பரின் குடும்பத்தாரையும் காப்பாற்ற விரும்புகிறீர்களா? அப்படியானால் நீங்கள் உடனே மாறுவேடம் பூண்டு இந்த வீட்டை விட்டுத் தப்பிச் செல்வது அவசியம். வேறு வழியே இல்லை!”

இந்தச் செய்தியைக் கேட்டதும் காந்திஜியின் மனதில் ஒரு போராட்டம் எழுந்தது. வெளியே போவதா இல்லையா என்பது பற்றித்தான். கடைசியில் அலெக்ஸாண்டரின் யோசனைப்படி நடக்க முடிவு செய்தார். அதைக் குறித்துக் காந்திஜி தம் சுயசரிதத்தில் எழுதியிருப்பதாவது:—

“உயிருக்கு அபாயம் நேரிடலாமென்பது வெறும் உத்தேசமாக மட்டுமிருந்தபோது மிஸ்டர் லாப்டன் என்னைப் பகிரங்கமாக வெளிக் கிளம்பும்படி சொன்னார். அவருடைய யோசனையை நான் ஏற்றுக்கொண்டு நடந்தேன். அபாயம் நிச்சயம் என்னும் நிலைமை ஏற்பட்டபோது மற்றொரு நண்பர் நேர்மாறான யோசனை கூறினார். அதையும் நான் ஏற்று நடந்தேன். என் உயிருக்கு அபாயம் வரலாம் என்பதை முன்னிட்டே அப்படிச் செய்தேனா, அல்லது என் நண்பரின் சொத்தையும் சொந்தக்காரர்களையும் காப்பாற்றுவதின் பொருட்டா, அல்லது என் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் அபாயம் நேரிடாதிருக்கும் பொருட்டா என்று யார் கூற முடியும்? முதலிலே ஜனக் கூட்டத்தை நான் ‘தைரியமாக’ எதிர்த்ததும், பின்னர் மாறுவேடம் பூண்டு அக் கூட்டத்தினின்று தப்பியோடியதும் இரண்டும் சரியானவையென்று யார் நிச்சயமாகச் சொல்ல முடியும்?”

காந்திஜி தப்பித்துச் செல்வது என்று முடிவுசெய்ததும் அது சம்பந்தமான ஏற்பாடுகளில் கவனம் செலுத்தினார். உடம்பின் காயம், வலியெல்லாம் அந்தப் பிரயத்தனத்தில் மறந்து போய்விட்டன. இந்தியப் போலீஸ் சேவகனைப் போல் உடை தரித்துக் கொண்டார். நமது சென்னை மாகாணத்தில் வழங்கும் அங்கவஸ்திரம் ஒன்றை ஒரு தட்டின்



மீது சுற்றி அதைத் தலைக்குக் கவசமாக அணிந்து கொண்டார். (மதராஸ் அங்கவஸ்திரத்தின் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! அது மகாத்மா காந்தியின் தலையின் மேல் அவருக்குப் பாதுகாப்பாக விளங்கியதல்லவா?) அலெக்ஸாண்டரின் திட்டப்படி இரகசியப் போலீஸைச் சேர்ந்த இருவர் காந்திஜியை வெளியில் பத்திரமாக அழைத்துப் போவதற்காக வீட்டுக்குள் வந்தார்கள். அவர்கள் முகத்துக்கு வர்ணம் பூசிக் கொண்டு இந்திய வியாபாரிகளைப்போல் வேஷம் தரித்திருந்தார்கள்.

வீட்டுக்குப் பக்கத்திலிருந்த குறுக்குச் சந்தில் வெளியேறி ஒரு சாமான் கிடங்கில் புகுந்து சாக்கு மூட்டைகளின் வழியாக இருட்டில் தட்டுத் தடுமாறிக் கடைசியில் வீதிக்கு வந்து சேர்ந்தார்கள். அந்தக் கிடங்கின் வாசலிலேயும் ஜனக் கூட்டம் நிறைந்திருந்தது. ஆனால் கிடங்கிலிருந்து வெளி வந்தவர்களில் காந்திஜி இருப்பார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. அனைவருடைய கவனமும் ரஸ்டம்ஜியின் வீட்டு வாசலிலேயே இருந்தது. அங்கே மிஸ்டர் அலெக்ஸாண்டர் உயரமான ஒரு படிக்கட்டில் நின்று கொண்டு ஜனக் கூட்டத்தோடு தமாஷாகப் பேசிக் கொண்டிருந்தார். சமய சந்தர்ப்பத்துக்கேற்ப அவர் ஒரு பாடல் இட்டுக் கட்டி அதைப் பாடியும் காட்டினார்.

"புளிப்பு இலந்தை மரத்தின்மீது
பொல்லாத காந்தியைத் தூக்குப்போடு!"

என்பது அந்தப் பாட்டின் பல்லவி. இதை மிஸ்டர் அலெக்ஸாண்டர் முறை வைத்துப் பாட, ஜனக் கூட்டமும் சேர்ந்து பாடியது!

ஜனங்களின் கவனத்தை இவ்விதம் மிஸ்டர் அலெக்ஸாண்டர் கவர்ந்திருக்கையில், காந்திஜியும் இரகசியப் போலீஸ் துணைவர்களும் அக் கூட்டத்தின் வழியாகப் புகுந்து சென்று தெருக் கோடியில் தயாராய் நின்ற வண்டியில் ஏறிப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

காந்திஜி பத்திரமாய்ப் போலீஸ் ஸ்டேஷனை அடைந்தார் என்ற செய்தி வந்ததும் மிஸ்டர் அலெக்ஸாண்டரின் குரல் மாறியது. "நல்லது; பறவை கூட்டிலிருந்து தப்பி ஓடிவிட்டது! நீங்கள் யாருக்காக இங்கே வந்து காத்திருக்கிறீர்களோ அவர் இந்த வீட்டில் இல்லை. இனிமேல் உங்களுடைய வீட்டுக்குத் திரும்பிப் போகலாம்!" என்று அங்கே கூடியிருந்தவர்களைப் பார்த்து உரத்த குரலில் கூறினார்.

கூட்டத்தில் சிலர் அவர் மேல் கோபங் கொண்டார்கள். சிலர் அவருடைய வார்த்தையை நம்பாமல் சிரித்தார்கள்.

"நல்லது; உங்களுக்கு என் பேச்சில் நம்பிக்கை இல்லாவிட்டால் உங்களுடைய பிரதிநிதிகளாக இரண்டு பேரை நியமனம் செய்யுங்கள். அவர்களை நானே வீட்டுக்குள் அழைத்துப் போகிறேன். காந்தியை அவர்கள் கண்டு பிடித்து விட்டால் உங்களிடம் அவரை ஒப்படைத்து விடுகிறேன். காந்தி இந்த வீட்டில் இல்லையென்று நிச்சயமானால் நீங்கள் எல்லாரும் திரும்பிப் போய்விடவேண்டும். ரஸ்டம்ஜியின் வீட்டுக்கோ காந்தியின் குடும்பத்தாருக்கோ நீங்கள் தீங்கு செய்ய விரும்பவில்லையல்லவா? அவர்கள்மீது நீங்கள் கோபம் கொள்ளக் காரணம் ஒன்றும் இல்லையே!" என்று சொன்னார் மிஸ்டர் அலெக்ஸாண்டர்.

ஜனங்கள் அலெக்ஸாண்டர் கூறிய யோசனைக்கு இணங்கினார்கள். ரஸ்டம்ஜியின் வீட்டைச் சோதனை போடப் பிரதிநிதிகள் பொறுக்கப் பட்டார்கள். மிஸ்டர் அலெக்ஸாண்டர் அவர்களை அழைத்துக்கொண்டு போனார். வீட்டின் மூலை முடுக்கெல்லாம் அவர்கள் சோதனை போட்டு விட்டு வந்து "காந்தி இல்லை!" என்று தெரிவித்தார்கள். கூட்டத்தில் பெரும்பாலோர் மிஸ்டர் அலெக்ஸாண்டரின் சாமர்த்தியத்தைப் பாராட்டிப் பேசிக்கொண்டு வீடு திரும்பினார்கள். ஒரு சிலர் கோபத்தினால் குமுறிக் கொண்டும் திரும்பிச் சென்றார்கள்.

தம்பி! உலகத்தையும் மனிதரின் வாழ்க்கையையும் இயக்கி வரும் சக்தி ஒன்று இருப்பதாகப் பெரியோர் கூறுகிறார்கள். அதைத் தெய்வ சித்தம் என்றும் கடவுளின் கருணை என்றும் பெயர் கொடுத்து அழைக்கிறார்கள். அத்தகைய தெய்வ சித்தத்தின் சக்தியினாலேதான் முதலில் மிஸஸ் அலெக்ஸாண்டரும் பின்னர் மிஸ்டர் அலெக்ஸாண்டரும் காந்திஜியைக் காப்பாற்றும் விஷயத்தில் அவ்வளவு சிரத்தை கொண்டிருக்க வேண்டும். அவர்கள் "நமக்கென்ன வந்தது?" என்று அலட்சியமாக விட்டிருந்தால், — அன்றைய தினம் காந்தியின் உயிருக்கு அபாயம் நேர்ந்திருந்தால், — ஆகா! இந்த மானிலமும் மன்னுயிரும் இந்தியாவும் இந்தியர்களும் எவ்வளவு மகத்தான நஷ்டத்தை அடைந்திருப்பார்கள்? (தொடரும்)



சிக்கனந்தான்!

"சமையற்காரன் இல்லாமல் நீயே சமைப்பதில் ரொம்ப சிக்கனமாயிருக்க முடிகிறது, இல்லையா?"

"ஆகா! சந்தேகம் என்ன? நான் சமைக்கிறதினாலே செலவு ரொம்பக் குறைந்திருக்கிறது! சமையற்காரன் சமைத்தபோது சாப்பிட்டதில் என் கணவர் இப்பொழுது பாதிதான் சாப்பிடுகிறார்!"

* * *

எழுச்சியா?

மேடைப் பிரசங்கி:—தோழர்களே, தொழிலாளர்களின் எழுச்சிக்காக ரொம்பப் பாடு பட்டவர் யார் தெரியுமா?

கூட்டத்தில் ஒருவர்:—அலாரம் கடிகாரம் கண்டு பிடித்தவர்!

* * *

யார் அது?

பெண்:—கடைக்கார ஐயா, அம்மா உங்களுக்கு ஓரணு தரவேண்டுமா, என்ன?

கடைக்காரன்:—ஆமாம்.

பெண்:—அப்படியானால் இந்தாங்க!

கடைக்காரன் (காசைக் கையில் வாங்கிக் கொண்டு):—உங்க அம்மா யாருங்க?

இருக்கிறார்கள்!

டெலிபோனில் ஒருவர்:—ஹலோ! மிஸ்டர் ராமன் இருக்கிறாரா?

குழந்தை:—எங்கப்பாவைத்தானே கேட்கிறீர்கள்? அவர் இல்லை!

டெலிபோனில்:—அம்மா இருக்கிறாளா?

குழந்தை:—இல்லை.

டெலிபோனில்:—அண்ணா, அக்கா யாருமே இல்லையா?

குழந்தை:—எல்லாரும் பள்ளிக்கூடம் போயிருக்கிறார்கள். என் தங்கை சலோ தொட்டிலில் இருக்கிறாள்; அவளுக்குப் பேசத் தெரியாது. என் நாய்க்குட்டி ஜிம்மி இருக்கிறது!

* * *

பதில் எப்படி?

ஒருவர் ஒரு சரித்திரப் பிரசித்தி பெற்ற பட்டணத்துக்குச் சென்றார். அங்குள்ள கல்வெட்டுகளையும் பண்டைக்காலக் கோவில்களையும் பார்வையிட்டுக் கொண்டே போனார். பண்டைய விஷயங்களை அறிந்த அவ்வூர்க்காரர் எல்லாவற்றையும் பற்றி விவரமாகச் சொன்னார்.

ஊர்க்காரர் (ஒரு மண்டபத்தைச் சுட்டிக் காட்டி):—இந்தப் பெரிய மண்டபம் கட்டப்பட்டு எத்தனையோ நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் இது வரையில் ஒரு முறைகூடப் பழுது பார்க்கப்படவேயில்லை!

பார்க்க வந்தவர்:—சரிதான்; இதில் ஒன்றும் அதிசயம் இல்லை. சென்னையில் நான் குடியிருக்கும் வீட்டுக்காரர் கூட, கட்டி எத்தனையோ வருஷங்கள் ஆன தம் வீட்டைப் பழுது பார்ப்பதேயில்லை!

லண்டன் செல்கிறார்

ஜூலை மாதத்தில் லண்டன் மாநகரில் "அகில உலக ஒலிம்பிக் போட்டி விளையாட்டு" நடத்தப் போகிறார்கள். அதற்கு உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் பயில்வான்களும், சாம்பியன்களும், சண்டோக்களும் செல்கிறார்கள். மேற்படி நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக இந்தியாவிலிருந்து பல ஒலிம்பிக் விளையாட்டுகளில் வெற்றி பெற்ற 'கனம் தூக்கும் பயில்வான்' ஸ்ரீ டி.பி. மணி அவர்களை "இந்தியன் வெயிட் லிப்டிங் பெடரேஷன்" தேர்ந்தெடுத்து அனுப்புகிறது. ஸ்ரீ டி. பி. மணி அகில உலக ஒலிம்பிக்கில் இந்தியாவின் புகழை நிலை நாட்டுவார் என்று எதிர்பார்க்கிறோம்.




காகிநாடாவிலிருந்து கொழும்பு வரை
தென்னிந்தியா முழுவதும் 50 தியேட்டர்களில்
பிரதி தினமும் ஒரு லக்ஷத்திற்கு மேற்பட்ட
ரசிகர்கள் கண்டு களிக்கின்றனர்...
சந்திரலேகா
சென்னை
மைசூர்
கொழும்பு



சென்னை பிரபாத், கிரௌன், வெல்லிங்டன், ஸ்டார்
ஆகிய 4 தியேட்டர்களிலும் மற்றும்
பெங்களூர் ... பிரபாத் - ஸைப்பர் - ஸ்ரீ
மதுரை ... சென்ட்ரல் சினிமா
கோயமுத்தூர் ... தியேட்டர் ராயல்
திருச்சி ... ராஜா டாக்கீஸ்
சேலம் ... நியூ சினிமா - பிரபாத்
திருநெல்வேலி ... பாலஸ் டி வேல்ஸ்
காரைக்குடி ... சரஸ்வதி டாக்கீஸ்
மைசூர் ... சாமுண்டேஸ்வரி - கணேஷ்
தஞ்சாவூர் ... டவர் டாக்கீஸ்
கும்பகோணம் ... டைமண்ட் சினிமா
வேலூர் ... தாஜ் - சாயிபாபா
காஞ்சீபுரம் ... கண்ணன் டாக்கீஸ்
புதுச்சேரி ... கமர்ஷியல் சினிடோன்
ராயபட்ணம்பேட்டை ... கிருஷ்ணா டாக்கீஸ்
விருதுநகர் ... ராதா டாக்கீஸ்
புதுக்கோட்டை ... வெஸ்ட் டாக்கீஸ்
திருவனந்தபுரம் ... நியூ தியேட்டர்ஸ்
நாகர்கோவில் ... பயோனியர் பிக்சர் பாலஸ்
திருச்சூர் ... ராமவர்மா தியேட்டர்
பாலக்காடு ... நியூ தியேட்டர்
ஆலப்புழை ... சேமாட்டு டாக்கீஸ்
எர்ணாகுளம் ... லக்ஷ்மணன் டாக்கீஸ்
பெஜவாடா ... மாருதி சினிமா
ராஜமகேந்திரம் ... மினர்வா டாக்கீஸ்
காகிநாடா ... மினர்வா டாக்கீஸ்
குண்டூர் ... ராதாகிருஷ்ணா டாக்கீஸ்
விசாகப்பட்டணம் ... மினர்வா டாக்கீஸ்
மசூலிப்பட்டணம் ... மினர்வா டாக்கீஸ்
தெனாலி ... ரத்னா டாக்கீஸ்
எல்லூர் ... கேசரி டாக்கீஸ்
பெல்லாரி ... ராயல் பிக்சர் பாலஸ்
கர்நூல் ... சந்த் டாக்கீஸ்
நெல்லூர் ... விநாயக் சினிமா
அனகப்பல்லி ... ராமகிருஷ்ணா டாக்கீஸ்
சீராலா ... வேணுகோபால் டாக்கீஸ்
ஒங்கோல் ... வெங்கடேஸ்வரா டாக்கீஸ்
குடிவாடா ... கௌரிசங்கர் டாக்கீஸ்
விஜயநகரம் ... மினர்வா டாக்கீஸ்
பாலக்கோல் ... பாலாஜி டாக்கீஸ்
நந்தியால் ... நேரு டாக்கீஸ்
அமலாபுரம் ... கோபாலகிருஷ்ணா டாக்கீஸ்
ராமனாதபுரம் ... ராமனாதன் டாக்கீஸ்
ஜெமினியின்
அற்புத சிருஷ்டி..



புது வாழ்க்கை

வை. சுப்பிரமணியன்

வாழ்க்கைச் சமுத்திரத்தை வெகு தூரம் கடந்து விட்டவன் நான். சுகங்களையும் துக்கங்களையும் மாறி மாறி அனுபவித்துக் கொண்டே வந்த என் வாழ்வில் வெகு நாட்களுக்குப் பிறகு துக்கமே நிலைத்து நிற்க ஆரம்பித்து விட்டது.

என் மனைவிக்கு ஏதோ தீராத வியாதி. மூன்று வருஷங்களுக்கு முன்னால் பிடித்த அந்த வியாதியினின்றும் அவளை மீட்பதற்காக எத்தனையோ முயற்சிகள் செய்தேன். ஒன்றும் பலனில்லை. உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வெறும் கட்டையாக மட்டும் என்னுடன் அவள் இருந்தாளே தவிர வியாதி நீங்கவில்லை.

இந்த வியாதியின் ஆரம்ப காலத்திலே தான் என் வாழ்வில் துக்கம் அதிகமாக இருந்தது. ஆனால் வியாதி தீராதென்று ஏற்பட்டு விட்டபிறகு என் துக்கம் விரக்தியாக மாறியது. அதற்கேற்றாற் போல் அவள் வியாதியும் அதிகரித்து விடவே, அவளை ஆஸ்பத்திரியில் கொண்டு போய் விட்டுவிட வேண்டுமென்று எல்லோரும் முடிவாகச் சொல்லி விட்டார்கள். நானும் அதன்படியே செய்யத் தீர்மானித்தேன்.

ஒரு நாள் என் மனைவியை ஆஸ்பத்திரியில் கொண்டு விட்டுவிட்டுத் திரும்பும் போது, என் மனதில் பலவிதமான உணர்ச்சிகள் தோன்றின. மறைந்து கிடந்த துக்கம் பெரிய உருவெடுத்து விட்டது.

எனக்கு உறவினர் என்று வேறு மனிதர்கள் கிடையாது. என் மனைவியும் ஒரு சின்னக் குழந்தையும் மட்டுமே.

வீட்டில் கவலையற்று விளையாடிக் கொண்டிருந்த குழந்தையின் வாழ்வை எண்ணிப் பார்த்தேன். ஒவ்வொரு சமயம் 'அம்மா'வை நினைத்துக் கொண்டு அழத் தெரிந்ததே தவிர, அந்தக் குழந்தைக்கு நிலைமை என்னவென்று அறியச் சக்தியில்லை!

உலகத்தில் ஒரு தனி இனத்தைச் சேர்ந்தவனாய்ப் போய்விட்டேன் நான். என்னை அநாதை என்றும் சொல்ல முடியாது: ஆதரவு உள்ளவன் என்றும் சொல்ல முடியாது. இரண்டும் கெட்டானாக இருந்தேன்.

எனக்குப் பழைய நினைவுகள் தோன்றின. என் மனைவியுடன் இன்பம் நிறைந்த வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த போது ஏற்பட்ட அநுபவங்கள் எல்லாம் வரிசையாக நினைவுக்கு வந்தன. தொடர்ந்து ஏற்பட்ட இன்ப நினைவுகளுக்குப் பிறகு மனம் வேறு எதிலும் செல்லவில்லை. அந்த எண்ணங்களிலேயே லயித்துக் கிடந்தது. இதை எத்தனை நேரத்திற்குப் பிறகு உணர்ந்தேன் என்பது எனக்கே தெரியாது.

வெகு நேரத்திற்குப் பிறகு திடீரென்று மனதில் வேறொரு நினைவு! குழந்தையின் உடம்பைக் கூர்ந்து நோக்கினேன். 'எலும்பும் தோலுமாய்' என்பார்களே, அது போல்தானிருந்தது. கண்கொண்டு பார்க்க முடியவில்லை. எனக்குத் துக்கம் தாளவில்லை. அந்தக் குழந்தை சமீப காலத்தில் எப்படியிருந்தது? விக்கிரகத்தை உதாரணமாகச் சொல்ல வேண்டும் அதன் உடம்பிற்கு. அதன் வாழ்வில் கூட இன்பம் மறைந்து விட்டதா?

எது எப்படியானாலும் என்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் குழந்தையைக் கண்காணித்தேன். இடையில் தினம் தினம் ஆஸ்பத்திரிக்குச் சென்று அவளைக் கவனித்துக் கொண்டு வந்தேன். ஆஸ்பத்திரியில் சரியான உபசரணை நடந்துகொண்டிருந்த தெனி னும் என்னுடைய திருப்திக்காக நான் ஏதாவது செய்ய வேண்டுமென்று நினைத்தேன். ஆனால், அது பிரயோசனப்படாமல் போய் விட்டது. என்னை எதற்கும் அனுமதிக்கவில்லை ஆஸ்பத்திரியில் இருந்தவர்கள்.


ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிற்குச் சென்றால் குழந்தைக்குச் சிசுருஷை செய்வதற்குச் சரியாக இருக்கும். அம்மா சீக்கிரம் வந்து விடுவாள் என்று ஒரு மாத காலமாகக் குழந்தைக்குத் தேறுதல் சொல்லிக் கொண்டு வந்தேன். "என்னை ஏமாத்தறே, நீ! அம்மா வரவே மாட்டாள்!" என்று ஒரு நாள் சொல்லி விட்டது குழந்தை. என் உளளம் கண்ணாடி விழுந்து உடைவது போலச் சுக்குச் சுக்காக உடைந்து விட்டது. குழந்தையின் வாய்மொழி உண்மையாகி விட்டால்......?

என் துக்கம் நாளா வட்டத்தில் மறைந்து போகும். அந்தக் குழந்தை அநாதைதானே!

2

சில நாட்களாக என் மனம் ஒரு நிலைப்படாமல் தவிக்கிறது. காரணம் தெரியவில்லை. குழந்தையின் வாய்மொழி காதில் ஒலித்துக் கொண்டே யிருக்கிறது. ஒரு வேளை அப்படியாகி விட்டால் குழந்தையைப் பார்த்துக் கொள்ள யாராவது வேண்டுமே! என்னை நிச்சயம் விரும்பாது அது; அம்மா உருவத்தில் யாராவது வரவேண்டும். இல்லாவிடில் நான் சமாளிக்க முடியாது என்றே நினைத்தேன்.

அப்படியானால் நான் கலியாணம் செய்து கொள்ளும்படியாகநேரிடுகிறது. என்னுடைய லட்சியம் ஒன்றும் அப்படியில்லை. ஆனாலும், குழந்தையை உத்தேசித்துச் செய்யவேண்டும். இந்த விஷயத்தில் என்னை ஒருவரும் நிர்ப்பந்தம் செய்யவில்லை. எனினும் நானே ஒருவாறு முடிவு செய்யத் தீர்மானித்துவிட்டேன்.



சொல்லி வைத்தாற்போல என்னிடம் ஒரு மனிதர் வந்தார். அவரை எனக்கு முன்பே சிறிது தெரியும்; அதிகப் பழக்கம் இடையாது. என்னுடைய மனைவியின் தேக நிலைமையைப் பற்றிக் கேட்டார் அவர். குழந்தையைப் பார்த்துக்கொள்ள யாராவது வேண்டுமே என்று சொன்னார். என் மனதில் இருந்த விஷயங்களை 'பளிச், பளிச்' சென்று எடுத்துக் கூறினார். இரண்டாம் கல்யாணம் செய்து கொள்ள வேண்டிய அவசியத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறாரோ என்று நினைத்தேன். அதற்குள் அவர் போய்விட்டார்.

மறுநாள் ஆஸ்பத்திரியில் எனக்குத் தூக்கிவாரிப் போடும் செய்தி காத்திருந்தது. மனைவிக்கு உடம்பு நிலை மோசமாகி விட்டது. அவளுடைய வாழ்க்கை முடிந்து விடும் என்று எதிர்பார்க்கப் படுவதாகக் குறிப்பிட்டார்கள்.

என் உணர்வு எப்படியிருந்த தென்றே தெரியாது எனக்கு. அவள் வாயைத் திறந்து பேசக்கூட வில்லை. வீட்டிற்குச் சென்று குழந்தையைக் கொண்டு வந்து காண்பிப்போம் என்று போனேன்.

வீட்டில் முதல் நாள் வந்து போன மனிதர் காத்திருந்தார். அவரிடம் சிறிது நேரம் பேசினேன். இன்று என் மறு விவாகத்தைப் பற்றிக் குறிப்பிட்டார் அவர். மேலும் ஒரு அதிசய விஷயம்!



மனைவி:—எழுந்திருங்கோ! எழுந்திருங்கோ! இரவு பாராக்காரன் 'திருடன், திருடன்! பிடி, பிடி!' என்று கத்துகிறான்.

கணவன்:—சும்மா இரு! அவன் தூக்கத்தில் ஏதேனும் உளறிக் கொட்டுவான், அதைக் கேட்டுண்டு நீயும் என்னத்துக்குக் கத்தறே!

அவருடைய பெண்ணை எனக்குக் கொடுக்க விரும்பினார் அவர்.

அந்தச் சந்தர்ப்பத்திலும் நான் அதைப் பற்றி ஒரு கண நேரம் சிந்திக்கக் கூடச் செய்தேன். பிறகு என் காரியத்தில் இறங்கினேன். அவரிடம் விஷயத்தை வெளியிட்டதும் பேசாமல் போய் விட்டார்.

குழந்தையைக் கொண்டுபோய்க் காண்பித்தபோது அவன் முதலில் வெகு நேரம் வரை உணர்ச்சியே யில்லாதவனாகத் தான் காணப்பட்டான். ஆனால் ஒரு தடவை கண்ணை விழித்துப் பார்த்து ஒரு புன்னகை செய்தான். அந்தப் புன்னகை என் உள்ளத்தில் ஒரு நம்பிக்கையை மூட்டியது. அவன் நம்பகமான வார்த்தைகளை அள்ளிக் கொட்டிப் பேசியதுபோல ஒரு பிரமை எனக்கு.

அன்று மாலை நான் என்னிடம் வந்து போனவரின் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அங்கே அவருடைய பெண்ணைப் பார்க்கும் சந்தர்ப்பம் வாய்த்தது. முதலில் பார்த்தவுடன் எனக்குப் பிரமை தட்டி விட்டது. என் மனைவியின் கூடப் பிறந்தவளோ இவள் என்று நினைத்து விட்டேன். அத்தனை ஒற்றுமை!

அவளோ ரொம்பவும் அழகான பெண். நானோ வயதாகிவிட்டவன். இது நானே அடிக்கடி உணரும் விஷயம். என் குழந்தையின் பராமரிப்புக்கு யாராவது உதவி செய்ய வேண்டியிருந்தது. அந்த நிலையில்......அதற்குப் பிறகு...என் உணர்ச்சி என்னைத் தூண்டியது என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அவள் ஆஸ்பத்திரியில் கிடக்கும்போது எந்த முயற்சிக்கும் நான் தயாராக இல்லை.

இதற்கிடையில் என் மனைவியின் ஞாபகம் வந்தது. அவளுடைய நிலைமையில் என் விசித்திரமான எண்ணங்களைப் பற்றி நினைத்த போது முதலில் எனக்கே வெட்கமாகத்தான் இருந்தது. ஆயினும் மூன்று வருஷ காலமாகத்தான் அவளுக்காக நான் துக்ககரமான வாழ்க்கையை நடத்துகிறேனே!

இந்த எண்ணங்கள் என் ஞாபகத்தை மெல்ல அந்த விஷயத்துக்கே இழுத்துச் சென்றன. எனவே நான் ஒருவாறு முடிவு செய்து விட்டேன். அந்தப் பெண்ணை என் வாழ்க்கைத் துணைவியாகப் பெறத் தீர்மானித்தேன்.

அந்தப் பெண்ணின் மனோபாவம் எப்படியென்று அறியவும் நினைத்தது என் மனம். என்ன இருந்தாலும் சீர்திருத்த மனப்பான்மையே இல்லாதவன் நான் என்பதில்லை. அவர்கள் வீட்டிற்குச் சென்றேன். அந்தப் பெண்ணை நானே சந்தித்துப் பேசினேன். என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்வதில் அந்தப் பெண்ணுக்குப் பூரண சம்மதம்தானாம்!

அங்கிருந்து ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். அன்றைக் கென்று என்னைத் தூக்கி வாரிப் போடும் சேதி கிடைத்தது எனக்கு.

என் மனைவியின் உடல் நிலை சிறிது தேறியிருக்கிறது என்றனர். அத்துடன் அவள் தன்னுடன் நான் சிறிது நேரம் பேசவேண்டும் என்றும் சொன்னாளாம்.

நான் அவளைப் பார்த்தபோது என் கண்களை நம்பமுடியவில்லை. அவள் வியாதி வெகுவாகக் குணமடைந்திருந்தது. முகத்தில் ஒரு புதிய களையும் நம்பிக்கையின் அறிகுறியும் தோன்றியது. அதற்குமேல் வழக்கத்திற்கு மாறான அவளுடைய கலகலவென்ற பேச்சு எனக்கு முழுநம்பிக்கையையும் ஊட்டியது.

அவள் வெகு சீக்கிரம் குண மடைந்து வீட்டிற்கு அனுப்பப்படுவாள் என்று டாக்டர் தெரிவித்தார். எனக்கு வாழ்க்கையில் ஒரு புது சகாப்தம் அப்போதே ஆரம்பமாகி விட்டதென்று நினைத்தேன்.

3

வீட்டிற்கு வந்தபோது 'அந்தப் பெண்'ணின் தகப்பனார் அங்கே உட்கார்ந்திருந்தார். என்னுடைய பிரச்னை பலமானதாகப் போய் விட்டது. என்

ளுடைய நிலைமை எனக்கே பரிதாப கரமானதாகப் பட்டது.

எனக்கோ வயதாகி விட்டது. அந்தப் பெண்ணுக்கோ வாழ்க்கையே இப்போது தான் ஆரம்பமாகிறது. நான் அவளைக் கல்யாணம் செய்து கொள்வது எந்த விதத்தில் பொருத்தமாகும்? வெளி உலகத்துக்காக இந்தக் கேள்வியை நானே கேட்டுப் பார்த்துக் கொண்டேனே தவிர, என் உணர்ச்சி என்னைத் தூண்டியது. இத்தனை வயதாகி விட்ட பிறகும் எனக்கு வாழ்க்கை கசக்க வில்லை தான்!

ஆனால் மனைவியின் உடல் நிலை தேறி விட்டது அநேகமாக. அவள் இன்னும் சில தினங்களில் வீட்டுக்கு வந்து விடுவாள். எனக்கு எதற்காகக் கல்யாணம் என்றே தெரியவில்லை. கல்யாணம் வேண்டாம் என்று நினைக்கும்போதே அந்த அழகியின் உருவம் என் முன் தோன்றி அந்த நினைவைப் புறம் காட்டச் செய்து விடுகிறது! அவளை மறக்க முடியவில்லை என்னால். இந்தத் தர்ம சங்கடமான நிலைமை ஏற்பட்டு விட்டது எனக்கு.

நான் மேலே சொன்ன காரணத்தை அவரிடம் கூறி என் கல்யாணப் பேச்சை மறந்துவிடப் போவதாகவும் சொன்னேன். அவர் முகம் சுண்டி விட்டது. அதற்கு மேல், 'அவ'ளுடைய முகமும் என் அகக் கண்களுக்குத் தோன்றி என் உள்ளத்தில் இரக்க உணர்வைத் தூண்டியது.

அதற்குள் என் மனைவி பூரண சௌக்கியமடைந்து வீட்டிற்கு வந்து விட்டாள். அவளுடைய வியாதி இருந்த சோடே தெரியவில்லை. பழைய உடம்பு வந்து விட்டது அவளுக்கு. இன்னும் நாளா வட்டத்தில் துரிதமான அபிவிருத்தியும் காணப்பட்டது. தவிர, குழந்தையின் நிலைமையும் முற்றிலும் மாறி விட்டது. இந்தச் சம்பவங்கள் என் வாழ்விலும் மாறுதலை உண்டாக்கின என்று சொல்ல வேண்டியதில்லை.

புனர் ஜன்மம் எடுத்த மனைவியுடன் புது வாழ்க்கையே நடத்தச் சாத்தியமாயிருக்கும். ஆனாலும் என் மனம் மட்டில் 'அவ'ளை நினைக்காமல் இருப்பதில்லை.


ஒரு நாள் என் மனைவியிடம் இந்த வேடிக்கையைப் பற்றிச் சொன்னேன். அதைக் கேட்டு அவள் இடி இடியென்று சிரித்தாள். சிரித்து விட்டு, "சரி; அப்படியானால் கல்யாணம் செய்து கொள்ளுங்களேன். நான் வேண்டுமானால் மறுபடியும் ஆஸ்பத்திரிக்குப் போய் விடுகிறேன் — நான் உங்கள் வாழ்க்கைக்குப் பயன்பட மாட்டேன் என்று நீங்கள் நினைக்கும் பட்சத்தில்......!" என்றாள்.

எனக்கு ஞானோதயம் ஆயிற்றென்றே சொல்லலாம். அவள் வார்த்தைகளில் எத்தனை லாகவம் இருந்தது!

அந்த நிமிஷமே அந்தப் பெண்ணின் தகப்பனாரிடம் போனேன். அந்தப் பெண்ணுக்கு வேறு நல்ல வரன் பார்த்து நானே கல்யாணம் செய்து வைப்பதாகச் சொல்லி விட்டு வந்தேன். இல்லாத குறையினால் என் கையில் அந்தப் பெண்ணைப் பிடித்துக் கொடுக்க முன் வந்தவர் அவர். என் பொறுப்பில் நானே அந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் செய்து வைக்கிறேன் என்றதும் அவருக்குப் பரம திருப்தி. என் வாழ்க்கையில் தோன்றியதுபோல் அந்தப் பெண்ணின் வாழ்க்கையிலும் புதுமைதான் தோன்றியது உண்மையில்!

என் வாழ்க்கையில் நான் வழுக்கி விழாததோடு அந்தப் பெண்ணின் வாழ்க்கையிலும் சீர்திருத்தத்தை ஏற்படுத்தியதில் என் உள்ளம் பூரித்தது.

விகடத் துணுக்குப் பரிசு ரூ. 25



இந்தப் படத்தை விளக்கும் ஒரு விகடத் துணுக்கு காணமற் போய் விட்டது. அதைக் கண்டு பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ரூபாய் 25 பரிசு கொடுக்கப்படும்.

இந்தப் பரிசுக்கு விகடத் துணுக்கு அனுப்புவோர் கவரின் மேல் விகடத் துணுக்குப் பரிசு என்று எழுதவும்.

ஆசிரியர், கல்கி



பானுவின் பிரிவு

⊙ மணி ⊙

"கண்ணன் முகம் மறந்துபோனால்—இந்தக்
கண்கள் இருந்து பயனுண்டோ!"

இந்த அற்புதமான பாட்டை, எட்டு வயது நிரம்பாத ஏழைச் சிறுமி வீணையின் நாதத்தைப் பழிக்கும் குரலில் பாடிக் கொண்டு, அந்த அகன்ற வீதி வழியே நடந்து கொண்டிருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் தாடியுடனும், தலைப்பாகையுடனும் வந்துகொண்டிருந்த கிழவன், கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த ஆர்மோனியத்தை வாசித்து, அக் கருத்து மிகுந்த பாடலை அழகு படுத்திக் கொண்டிருந்தான். அந்தப் பாடகனின் கவர்ச்சியான இசைதான் அப்பொழுது அந்தத் தெருவெல்லாம் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

அவ்வழியாகச் சென்ற பாதசாரிகள் இசையின் இனிமையில் மயங்கிச் சிலைகளைப் போல் நின்று கொண்டிருந்தார்கள். ஏழைப் பாடகன் துளசிராமும் சிறுமி பானுவும் உருக்கமாகப் பாடிக்கொண்டே அத் தெருவின் கோடியை அடைவதற்கும் மேற்கு மலை வாயிலில் சூரியன் அஸ்தமனமாகி உலகை இருள் சூழ்வதற்கும் சரியாக இருந்தது.

அத் தெருவின் கோடியில் ஓர் அழகிய தென்னந்தோப்பு; அத் தோப்பின் நிழலடியில் ஓர் அழகிய குளம்; அக் குளத்துக்குச் சற்றுத் தூரத்தில்தான், ஏழை ஜீவன்களின் குடிசைகள் இருந்தன. பாடகன் தன் குடிசையை அடைந்தவுடன், தன்னுடைய கழுத்தை இறுக்கி இழுத்த வண்ணம் தொங்கிக் கொண்டிருந்த ஆர்மோனியத்தைக் கழற்றிக் கீழே வைத்தான். சோர்வினால் அவன் முகம் வாடியிருந்தது. நெற்றியில் வியர்வைத் துளிகள் முத்து முத்தாய்த் துளித்திருந்தன. அவனுடைய குழி விழுந்த கண்கள் வாடி வதங்கியிருந்தன. ஆயினும் வாஞ்சை மிகுந்த தன் கண்களினால் அவன் பானுவைப் பார்த்து, "ரொம்பப் பசிக்கிறதா, கண்ணே! இதோ கொஞ்ச நேரத்தில் சாதம் சமைத்துப் போடுகிறேன்" என்று கூறினான்.

அந்த வார்த்தைகளில் ஆசையும் அன்பும் ததும்பின. அதைக் கேட்ட சிறுமி பானு குறு நகை புரிந்தாள். அடுத்த நிமிஷம் அவள் ஓடி வந்து கிழவனின் தோளைக் கட்டிக்கொண்டு, "அப்பா! எனக்கொன்றும் ரொம்பப் பசிக்கலை! நீ வீணா எனக்காகக் கஷ்டப்பட்டு உடம்பைக் கெடுத்துக் கொள்ளாமல் இருந்தால் போதும்!" என்றாள்.

இந்தக் கனிவு நிறைந்த வார்த்தைகள் கிழவனுடைய சோர்வைப் போக்கின. மகிழ்ச்சியுடன் எழுந்து அவன் சமையல் வேலையில் ஈடுபட்டான்.

• • •

துளசிராம் ஏழையாகவே பிறந்தான், ஏழையாகவே வளர்ந்தான். எதிர்பாராத பல இன்னல்கள் வாழ்க்கைப் பாதையில் அவனை எதிர்த்து நின்றன. திடீரென்று ஒரு நாள் பாறையின் மீது மோதிய படகைப்போல் அவனுடைய வாழ்க்கை சிதறி விட்டது. அவன் தன்னுடைய மனைவியை இழந்து உலகத்தில் தன்னந் தனியாகத் தவித்தான். வாழ்க்கையில் விரக்தி அடைந்து பட்டுப்போன மரத்தைப்போல்



அவன் நின்றபோதுதான் கடவுளின் கருணை அவன் மீது விழுந்தது. தெருவில் அனாதையாக நின்று அழுது கொண்டிருந்த சிறுமி பானுவின் பரிதாபமான நிலை அவனுடைய மனதை உருக்கியது. அவளுடைய கால்களைப் பற்றித் தேறுதல் சொன்னான். அன்று முதல் அவன் வாழ்க்கையில் புதிய ஜோதி பிரகாசிக்க ஆரம்பித்தது.

பானு, துளசிராமை 'அப்பா' என்று அழைத்து வந்தாள். அந்த அழைப்பில் ஒரு தெய்வீகமான இன்பத்தைக் கண்டான் கிழவன். உலகத்தில் வேறு எதையும் பானுவைவிட உயர்ந்ததாக அவன் கருதவில்லை. 'தானே பானு; பானுவே தான்' என்ற எண்ணத்தோடு இருந்தான்.

2

வருஷங்கள் பல ஓடி மறைந்தன. ஏழ்மை வாழ்விலும் ஒரு தனிப்பட்ட இன்பத்தைக் கண்டான் துளசிராம். பானுவின் உடல் அமைப்பிலும் பெருத்த மாறுதல் ஏற்பட்டது. அவள் ஓர் அழகுப் பிம்பமாகவே திகழ்ந்தாள். கன்னம் குழிய அவள் சிரிக்கும்போதெல்லாம் துளசிராமின் உள்ளம் பூரிக்கும். பானு தினந்தோறும் தன் தந்தையுடன் பிச்சை எடுக்கச் செல்வாள். அவர்கள் இருவரும் அடிக்கடி சென்று பிச்சை எடுத்து வந்த தெருவில், ஓர் ஏழை வாலிபன் அடிக்கடி தோன்றி பானுவின் இசையில் மயங்கி நிற்பான். பானுவும் அவனைப் பார்ப்பாள். ஆனால் தன்னைப் பார்க்கும்போதெல்லாம் அந்த ஏழைச் சிறுவன் விடும் பெருமூச்சை அவள் கவனிக்கவில்லை!

துளசிராமுக்கு அவ்வாலிபனைப் பார்க்கும்போதெல்லாம் கோபம் பீறிட்டு வரும். பாட்டை நிறுத்தி விட்டுச் சட்டென்று பானுவை இழுத்துக் கொண்டு போய் விடுவான். ஆனால் நாளடைவில் பானுவின் நடத்தையிலும் ஒருவித மாறுதல் ஏற்பட்டது. அதைக் கவனித்த துளசிராமின் மனம் துடித்தது. இருந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் பானுவின் செய்கையைக் கவனித்து வந்தான்.

தள்ளாமையினால் துளசிராமின் உடல் நாளுக்கு நாள் தளர்ந்தது. திடீரென்று ஒரு நாள் அவனுக்குக் காய்ச்சல் வந்து விட்டது. அன்று மாலை பானு மட்டும் தனியாகப் புறப்பட்டாள். வானத்தில் கரு மேகங்கள் உருண்டு மோதின; பேரிடி இடித்தது; காற்றும் ஆரம்பமாயிற்று. ஆயினும் அவள் அஞ்சவில்லை; தனியாகப் பாடிக் கொண்டே தெருவில் சென்றாள். ஏதாவது காசு கிடைத்தால், கிழவனுக்கு மருந்து வாங்கிக் கொடுக்கலாம் என்ற எண்ணத்தோடு அவள் காற்றுக்கும் மழைக்கும் மத்தியில் பிச்சை எடுத்தாள். சிறிது நேரத்துக்கெல்லாம் அவளுடைய உடல் முழுதும் மழையினால் நனைந்து விட்டது. பசி ஒரு புறம் — மன வேதனை ஒரு புறம் — மழை ஒரு புறம்— இவை மூன்றினிடையே அவள் தவித்தாள்.

அப்போது அவளுக்கு எதிரே ஒரு மோட்டார் வந்துகொண்டிருந்த சத்தத்தை அவளால் அறிந்து கொள்ள முடியவில்லை. கார் அவளை நெருங்கும் சமயம், சட்டென்று ஓடி வந்து அவளைப் பிடித்து வேறு புறமாக இழுத்து விட்டான் ஒரு வாலிபன். அவ்வளவுதான்; பானுவின் கண்கள் சுழன்றன. அதிர்ச்சியினால் அவள் மூர்ச்சையானாள். அந்த வாலிபன் தன் கைகளில் அவளைச் சுமந்து கொண்டு மேலே நடந்தான்.

மழையினால் பாதை முழுதும் ஒரே சேறும் சகதியுமாக இருந்தது. எதிர்க் காற்று அடித்து மழையின் சாரல் முகத்தில் வீசி, அவனை நிலை குலையச் செய்தது. அவ்வளவையும் பொருட்படுத்தாமல் அவன் பானுவைத் தூக்கிக் கொண்டு சென்றான்.

குடிசையிலிருந்த துளசிராமின் மனம் பானுவைக் காணாமல் வேதனைப் பட்டுக் கொண்டிருந்தது. 'பானு என்ன கஷ்டப்படுகிறாளோ? இந்த மழையில் எப்படித் தவிக்கிறாளோ?' என்றெல்லாம் அவன் எண்ணிக் கொண்டிருந்தான். திடீரென்று ஒரு பேரிடி; அவன் உள்ளத்தில் பயம் அதிகரித்தது. தன் உடல் நிலையையும் பாராது எழுந்து வந்து கதவைத் திறந்தான். அப்போது கையில் பானுவுடன் எதிரே ஒரு வாலிபன் நின்று கொண்டிருந்தான். துளசிராமின் மனம் பேதலித்து விட்டது. "பானு, பானு!" என்று கத்தினான். அதற்குள் அந்த வாலிபன் உள்ளே

நுழைந்து அவளை அங்கிருந்த கயிற்றுக் கட்டிலில் கிடத்தினான். துளசிராம் அவள் முகத்தைத் துணியினால் துடைத்துக் கொண்டே, 'பானு, பானு!' என்றான். அவள் கண் விழித்தாள். தன்னுடைய நிலைமை அவளுக்குப் புரிந்து விட்டது. எதிரில் நின்று கொண்டிருந்த வாலிபனைக் கண்டாள். அவளுடைய உள்ளத்தில் உணர்ச்சியின் நிழல் தோன்றியது. அந்த வாலிபனிடம் தன்னுடைய நன்றியைத் தெரிவிக்க முயன்றாள். ஆனால் அதற்கு வேண்டிய தைரியம் அவளுக்கு வரவில்லை. ஆயினும் இருவரும் ஒருவரை யொருவர் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பானுவின் தலையை வருடிக் கொண்டிருந்த துளசிராம் அவர்களுடைய பார்வையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு விட்டான். உடனே அந்த வாலிபன் மீது அவனுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. "அவளைப் பார்க்காதே! போ, வெளியே!" என்று கத்திக் கொண்டே, அவன் கரத்தைப் பிடித்துக் கரகர வென்று இழுத்துக் கொண்டு போய் வெளியே விட்டு விட்டுக் கதவைப் 'பட'ரென்று சாத்திக்கொண்டு உள்ளே வந்தான்.

3

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு துளசிராம் பானுவைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு போவதில்லை. அவன் மட்டும் தன்னந் தனியாக வீதியில் பாடிக் கொண்டே செல்வான். ஆர்மோனியத்தின் ஒலியைக் கேட்டதும், தெருக் கோடியில் நின்று ஏங்கிக் கொண்டிருக்கும் அந்த வாலிபன் சந்துவின் முகத்தில் சந்தோஷம் தோன்றும். ஆனால் அந்த ஒலி அருகில் நெருங்கியதும், அவன் முகத்தில் துயரம் தோன்றும். கிழவனுக்குப் பக்கத்தில் பானு இல்லாததைக் கண்டு அவன் ஏமாற்ற மடைவான். ஆயினும் அன்பிற்கு அணை போட யாரால் முடியும்?

அன்று இரவு வானத்தில் பூரண நிலவு ஜகஜ்ஜோதியாக ஜொலித்துக் கொண்டிருந்தது. பானு குடிசையில் படுத்த வண்ணம் ஏங்கிக் கொண்டிருந்தாள். சிறிது நேரத்திற்குப் பிறகு அவள் தன் படுக்கையை விட்டு எழுந்து தந்தையின் அருகில் சென்று பார்த்தாள். துளசிராம் நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டிருந்தான். அது தான் சமயமென்று பானு குடிசையை விட்டு வெளியே சென்றாள். ஆனால், உண்மையில் துளசிராம் தூங்கவில்லை. அவள் சென்றவுடன் அவனும் சட்டென்று எழுந்து குடிசைக்கு வெளியே வந்து நின்றான். அப்போது சற்றுத் தூரத்திலிருந்த தென்னந் தோப்பிற்குள் பானு நடந்து கொண்டிருந்தாள். தோப்பின் மத்தியிலிருந்த குளக்கரையில் ஏழை சந்து அமர்ந்திருந்தான். பானு அவனை நெருங்கினாள்.

இந்தக் காட்சியைக் கண்ட துளசிராமுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. பானு தன்னையே நேசிக்கிறாள் என்று அவன் இதுவரை எண்ணி இருந்தான். இப்போது அவளுடைய நடத்தை அதற்கு நேர் விரோதமாக அல்லவா இருக்கிறது!

ஆத்திரத்துடன் சென்று அவர்களுக்குச் சற்றுத் தூரத்தில் நின்றான் துளசிராம். அதற்குமேல் அவனுடைய கால்கள் நடக்க மறுத்தன. அவன் மனச் சாட்சி அவனைக் கேலி செய்தது. சட்டென்று வந்த வழியே திரும்பினான். மறுபடியும் அவன் மனதில் ஆத்திரம் மூண்டது. மீண்டும் அவர்களை நோக்கி வேகமாக நடந்தான். ஆனால் பாதி தூரம்கூட அவனால் போக முடியவில்லை. மனம் மாறிவிட்டது; மறுபடியும் குடிசைக்கே வந்தான். 'அவள் இன்பம் பெறுவதைத் தடுக்க உனக்கு என்ன உரிமை? உன்னுடைய பாசம் பெரிதா, அவளுடைய நேசம் பெரிதா?' என்று அவனுடைய மனச்சாட்சி அவனைத் தடுத்து நிறுத்தியது. சரேலென்று குடிசைக்குள் சென்று தன் படுக்கையில் படுத்தான். தூக்கம் வரவில்லை.

மறு நாள் பொழுது புலர்ந்ததும் படுக்கையை விட்டெழுந்த துளசிராமிடம் யாதொரு பரபரப்பையும் காணவில்லை. பானுவும் வழக்கம்போல ஆர்மோனியத்தை எடுத்து வந்து அவனுக்கு எதிரில் வைத்து விட்டு, "அப்பா, நேரமாகி விட்டதே, புறப்படவில்லையா?" என்று கேட்டாள்.



இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் சட்டென்று எழுந்து வெளியே சென்று நின்றான் துளசிராம். ஒன்றும் புரியாது திகைத்து நின்றாள் பானு.

இந்தச் சமயத்தில் திடீரென்று துளசிராமுக்குப் பின்னால் வந்து நின்றான் நந்து. அவனைப் பார்த்ததும் பானுவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவள், "அப்பா!" என்று அழைக்க வாயெடுக்கு முன் பரபரப்புடன் பானுவின் அருகில் வந்து நின்றான் துளசிராம். அடுத்த நிமிஷம் அவன் நந்துவின் கரத்தைப் பிடித்துப் பானுவின் கரத்துடன் சேர்த்து வைத்து, "நீ இவனை நேசிக்கிறாய்; இவனும் உன்னை நேசிக்கிறான். உன்மீது வைத்திருந்த அபிமானத்தின் காரணமாக நான் நந்துவை அன்று வெளியே தள்ளினேன். இன்று அதே கரத்தினால் உங்களை ஆசீர்வதிக்கிறேன். இனி உன்னுடைய இன்பம்தான் என்னுடைய லட்சியம்!" என்று கூறி முடித்தபோது, இருவருடைய முகத்திலும் ஆச்சரியத்தின் ரேகைகள் சிதறி ஓடின.

* * *

அன்றிரவு துளசிராமின் மனதில் ஒரு பெரிய போராட்டம் தொடங்கியது. ஏதோ ஒரு ஒப்பற்ற பொருளை இழந்து விட்டது போல் அவனுக்குத் தோன்றியது. மனச்சாட்சியின் முன் குப்புற விழுந்து அவன் கைகளைப் பரப்பிச் சிறிது நேரம் சிந்தித்த வண்ணம் இருந்தான். பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன் போல் எழுந்து ஆர்மோனியத்தை எடுத்துக் கழுத்தில் மாட்டிக் கொண்டு வெளியே வந்தான். நள்ளிரவில் நிழலை இந்தக் கோலத்தில் பார்த்ததும் தூக்கி வாரிப் போட்டது பானுவுக்கு. "அப்பா!" என்றாள் ஆச்சரியத்துடன். "பானு! உன்னைக் காப்பாற்ற நீ ஒருவனைத் தேடிக் கொண்டாய். இனி நான் உனக்கு என்னத்துக்கு? போய் வருகிறேன்; நீங்கள் சுகமாக வாழுங்கள்!" என்று கூறிவிட்டு அவன் அவ்விடத்தை விட்டு வேகமாக நடந்தான்.

"அப்பா! அப்பா! எங்கே போகிறீர்கள்?" என்று கத்திக் கொண்டே, எழுந்து ஓட முயன்றாள் பானு. சட்டென்று கால் இடறி அவள் கீழே விழுந்து விட்டாள்.

அச்சமயத்தில் சந்திரனை மேகக் கூட்டங்கள் மறைத்தன. அதைத் தொடர்ந்து தென்னந் தோப்பின் மத்தியில் சென்று கொண்டிருந்த துளசிராமும் பானுவின் பார்வையை விட்டு மறைந்தான்.

சிறிது நேரத்துக் கெல்லாம் அடுத்த ஊரிலிருந்த நேர் அகன்ற வீதி வழியே அவன் தன் கழுத்தை இறுக்கிக் கொண்டிருந்த ஆர்மோனியத்தை அமுத்திய வண்ணம்,

"கண்ணன் முகம் மறந்து போனால்—இந்தக்
கண்கள் இருந்து பயனுண்டோ!"

என்ற பாட்டைப் பாடிக் கொண்டே சென்றான்.

அந்தப் பாட்டில் இப்போது ஜீவனில்லை என்பது எத்தனை பேருக்குத் தெரிந்திருக்கப் போகிறது?

★ ★ ★ ★ ★ ★ நல்ல கற்பனை! ★ ★ ★ ★ ★ ★

"கற்பனா சக்தியுடைய ஒரு உதவியாசிரியர் தேவை" என்று பத்திரிகையில் விளம்பரம் செய்திருந்தது. காலையில் ஒரு இளைஞர் தலைமை ஆசிரியரைப் பார்ப்பதற்காக அவருக்கு எதிரே வந்து நின்றார்.

"தங்களுக்குப் பத்திரிகைத் தொழிலில் எத்தனை வருஷ அநுபவம்?" என்று கேட்டார் ஆசிரியர்.

"ஏழு வருஷம்!" என்றார் இளைஞர்.

"பேஷ்! தங்கள் பெயரென்ன?"

"சேஷகிரி."

"உங்களை எந்தப் பத்திரிகை ஆபீஸிலும் பார்த்ததாக எனக்கு ஞாபகம் இல்லையே இல்லையே!"

"இருந்தால்தானே பார்த்திருக்கப் போகிறீர்கள்?"

"என்ன ஐயா! ஏழு வருஷ அநுபவம் என்று சொன்னீர்கள், 'இருந்தால்தானே பார்த்திருக்கப் போகிறீர்கள்?' என்கிறீரே!" என்றார் ஆசிரியர்.

"அதுதான் என் கற்பனா சக்தி!" என்று ஒரு போடு போட்டார் இளைஞர்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★



★

டிக்கெட்டுகள் :

ரூ. 500, ரூ. 250, ரூ. 100

ரூ. 50, ரூ. 25, ரூ. 10

★

மைக் & ஒலிபெருக்கி
ஏற்பாடு : திருச்சி ரேடியோ
சேல்ஸ் & சர்வீஸ்

லால்குடி
பெண்கள் உயர்நிலைப்பள்ளி
உதவி நிதிக்காக

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

உதவும் சங்கீதக் கச்சேரி

★

சங்கீதரத்ன ஸ்ரீ சௌடய்யா - பிடில்
கல்பாத்தி ராமனுதன் - மிருதங்கம்
ஆலங்குடி ராமச்சந்திரன் - கடம்

6-6-48 ஞாயிற மாலை 6 மணிக்கு
லால்குடி போர்டு உயர்நிலைப் பள்ளியில்

சென்னை மாகாணத்து இலாகா மந்திரி
கனம் பக்தவத்ஸலம் அவர்கள்
தலைமையில் நடைபெறும்.

★

லால்குடி பெண்கள் கல்விக் கழகத்தார்
(Lalgudi Girls Education Society)

நீடித்த உழைப்பிற்கு இணையற்றவை

"போனிக்ஸ்"

மின்சார விசிறிகளே

இரண்டு வருஷங்கள் உத்தரவாத முள்ளவை

●

தென் சென்னைப் பிராந்தியங்களுக்கு (சென்னை நகரம், சமஸ்தானங்கள் உள்பட) பூரண விற்பனை உரிமையாளர்கள் :

ஆர்எம். எஸ். & கம்பெனி, லிமிடெட்

போன் : 4060 — தந்தி : "AREMESCO"

16, பிராட்வே : : மதராஸ்

●

சப் டிஸ்ட்ரிபூட்டர்கள் :

சேலம், கோயமுத்தூர் ஜில்லாக்களுக்கு :
எஸ். எம். டி. வேலு அன் கோ., சேலம்

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு :
இன்டர் நேஷனல் டிரேடிங் கம்பெனி, பாரத் மான்ஷன்ஸ், மதுரை

தஞ்சாவூர் ஜில்லாவுக்கு :
ராஜு எலக்ட்ரிக் ஸ்டோர்ஸ், தஞ்சாவூர்



கோர்ட்டில் நிசப்தம் நிலவியது. எல்லோரும் நீதிபதியையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஏதோ பதில் சொல்ல எழுந்த எதிர்க்கட்சி வக்கீல், தீவிரமாக யோசனையில் ஆழ்ந்திருக்கும் நீதிபதியின் முகத்தைப் பார்த்து விட்டுப் பேசாமல் உட்கார்ந்து விட்டார்.

கொலைக் குற்றம் சாட்டப்பட்ட முத்து கையில் விலங்குடன் சோகமே உருவாகக் கைதிக்கூண்டில் நின்று கொண்டிருந்தான். அவனுடைய பரிதாபகரமான முகத்தைப் பார்த்த யாரும் அவனை ஒரு கொலையாளி என்று சொல்லத் துணிய மாட்டார்கள். அவனுக்கு வயது இருபத்திரண்டு தான் இருக்கும். ஏழைக் குடும்பத்தில் பிறந்தவனாகக் காணப்பட்டாலும் கண்ணியமுள்ளவனாகவும் அறிவு நிரம்பியவனாகவும் தோன்றினான். கொலையைக் கூடத் துணிந்து செய்யக் கூடிய அவ்வளவு குரூரமானவன் என்பதற்கு எந்த அம்சமும் அவனிடம் காணப்படவில்லை.

அவனுடைய தாயும் தகப்பனும் இன்னும் இரண்டொருவரும் அந்த அறையில் ஒரு ஓரமாக நின்று கொண்டிருந்தார்கள். ஈசன் அவனை எந்த கதிக்கு உள்ளாக்கப் போகிறானோ என்ற பயந்தான் அவர்கள் முகத்தில் ததும்பியது.

நீதிபதி தம் யோசனையிலிருந்து மீண்டவர்போல் திரும்பி கூண்டில் நிற்கும் கைதியைப் பார்த்தார்.

"என்ன, நீ குற்றவாளி தானே?" என்று கேட்டார்.

முத்து சுயநினைவை இழந்தவன் போலத் தலையை ஆட்டினான். அது 'நான் குற்றவாளி இல்லை' என்பது போலவும், 'குற்றவாளி தான்' என்பது போலவுமிருந்தது.

"என்ன? தலையை யாட்டினால் போதுமா? நன்றாக வாயைத் திறந்து சொல்லு" என்றார் நீதிபதி கொஞ்சம் அழுத்தமான குரலில்.

"குற்றவாளி தான்" என்றான் மெதுவான குரலில் முத்து.

நீதிபதி மறுபடியும் சில நிமிஷங்கள் அவனையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு "நீ வேண்டுமென்று தானே அவனைக் கொன்றாய்?" என்று ஏதோ சந்தேகத்தைத் தெளிவாக்கிக் கொள்ளுகிறவர் போல் கேட்டார்.

முத்து சொன்னான்: "நான் அவனைக் கொல்லவேணும் என்று நினைக்க வில்லை. நான் வீட்டை விட்டு வரும்போது எனக்கும் அவனுக்கும் அவ்வளவு பெரிய சண்டை உண்டாகும் என்று நினைக்கவும் இல்லை. நான் எங்கள் வாழைத் தோட்டத்துக்குப் போய் இலை அறுத்துக் கொண்டு வரும் போது, அந்த இலையைத் தன் தோட்டத்திலே அறுத்தது என்று சொல்லி அவன் வைதான். நான் உண்மையைச் சொல்லி அவனைச் சமாதானப் படுத்தப் பார்த்தேன். அவன் கேட்கவில்லை. எனக்கு என்னமோ, அப்போது என்னை அறியாமலே கோபம் வந்து விட்டது. நானும் முன் பின் யோசிக்காமல் அவனைத் திட்டினேன். அவன் கடைசியாக கத்தியைக் காட்டி என்னைக் குத்தப் போவதாகப் பயமுறுத்தினான். நான் உடனே அவன்மேலே பாய்ந்து ......"— அதற்கு மேல் பேச அவனால் முடியவில்லை. அவனுடைய கண்ணில் கண்ணீர் பொங்கித் ததும்பியது.

"முன் கோபத்திலே செய்து விட்டேன்; என் மேலே தப்புத் தான்" என்று ஒருவிதமாகச் சொல்லி முடித்தான்.

நீதிபதி மறுநாள் தீர்ப்பளிக்கப் போவதாகச் சொல்லி விட்டார். போலீஸ்காரர்களிடையே, கையில் பூட்டிய விலங்குடன் சப் ஜெயிலுக்கு நடந்தான் முத்து. நீதிஸ்தலத்துக்கு வெளியே நின்று அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள் அவனுடைய தாயும் தந்தையும்.

அவனுடைய தாய் காகம்மாள் தன் கணவனைப் பார்த்து, நெஞ்சில் துக்கம் ததும்ப "அவனைப் பார்த்து இரண்டு வார்த்தை கூடச் சொல்லக் கூடாதா?" என்றான்.

அவளுடைய கணவன் சிங்காரத்தின் முகத்தில் அப்பொழுது உணர்ச்சி செத்து விட்டது என்று தான் சொல்ல வேண்டும். "அவனைப் பார்த்துப் பேச இப்போ என்ன இருக்கு? எல்லாம் விதிப்படி நடக்கும்" என்றான்.

"உங்கள் மனசு இப்படியும் கல்லாகுமா? தான் பெற்ற பிள்ளை என்ற பதட்டம் உங்களுக்கு இல்லாமல் போய் விட்டதே" என்றாள் நாகம்மாள் கண்களில் நீரைப் பெருக்கிய வண்ணம்.

"எனக்கா அபிமானம் இல்லை? பதட்டம் இல்லை? அது உனக்குத் தெரியுமா? நான் உன்னைப்போல அவனைத் தூக்கி வைத்துக் கொஞ்சவில்லை. ஆனால் அவனை எவ்வளவு ஜாக்கிரதையாகக் கண்காணித்துக் கொண்டு வந்தேன் தெரியுமா? நான் பயந்து கொண்டே வந்தேன், என்னிக்காவது இப்படி நடந்துவிடப் போகிறதே என்று. இப்போது அப்படியே நடந்துவிட்டது. இப்போது என்ன இருக்கு? விதியை நொந்துக்க வேண்டியதுதான்—"

அவன் சொல்லிய இத்தனை வார்த்தைகளிலும் உணர்ச்சியே இல்லை.

கடைசியில் "சரி, வாங்க வீட்டுக்குப் போவோம்" என்று சொல்லிவிட்டு அவன் வருத்தத்துடன் நடந்தான்.

* * *

சிங்காரம் சிறு குடிப் பண்ணைக்கு வேலைக்கு வந்து முப்பது வருடங்களுக்கு மேலாகி விட்டது. அவன் வடக்கே கொள்ளிடக் கரையில் உள்ள ஒரு ஊரிலிருந்து வந்தவனாயினும், இந்த முப்பது வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தில் சிறுகுடியே அவனுக்குச் சொந்த ஊராகி விட்டது. அவனுடைய நல்ல குணத்தாலும் உழைப்பாலும் சாமர்த்தியத்தாலும் சொர்தத்திலேயே கொஞ்சம் நிலமும் தோட்டமும் வாங்கிவிட்டான். அவனுடைய குணத்தையும் சாமர்த்தியத்தையும் கண்டு அவனுக்கு 'அந்த ஊரில் பெண் கொடுக்க எத்தனையோ பேர் தயாரா யிருந்தார்கள். கடைசியில் அவன் நாகம்மாளைத் தான் கல்யாணம் செய்து கொண்டான். கல்யாணமாகி இரண்டு மூன்று வருடத்திற்குள் ஒரு ஆண் குழந்தையும் பிறந்து குடும்பமும் சந்தோஷமாக நடந்து வந்தது. முத்துவுக்குப் பின் அவர்களுக்குக் குழந்தையே இல்லை. ஆகையால் அவர்கள் முத்துவைக் கொஞ்சம் செல்வமாகவே வளர்த்தார்கள். சிங்காரத்தை விட நாகம்மாள்தான் முத்துவை மிகவும் அன்பாக வளர்த்தாள். சிங்காரத்துக்குத் தன் மகன்மீது அளவற்ற அன்பு உண்டு. ஆனால், அவன் அதை வெளிப் படையாகக் காட்டிக் கொள்வதில்லை. முத்து தத்தித் தத்தி நடை பயிலும் காலத்திலிருந்து சிங்காரத்தின் மனதில் ஏதோ ஒரு பீதி சூழ்ந்து வந்தது. அவன் தன் மகனுக்கு ஏற்படப் போகும் ஏதோ ஒரு பெரிய கண்டத்தை, பயத்தோடு 'எப்பொழுது?' என்று எதிர்பார்ப்பவன் போல



இருந்தான். நாகம்மாளுக்குக்கூட சிங்காரம் இப்படி இருப்பது பிடிக்கவில்லை.

மூத்து நல்லபையன், கெட்டிக்காரன். அவனிடம் எத்தனையோ நல்ல குணங்களெல்லாம் இருந்தன. ஆனால் அவனுடைய நல்ல குணத்தை யெல்லாம் விழுங்கி வந்தது அவனுக்கிருந்த முன் கோபம். சிறு குழந்தையிலிருந்து ஒவ்வொரு சிறு காரியத்திலும் பிரதிபலித்து வந்தது இந்த முன் கோபம். எத்தனையோ தடவை தோசைத் தட்டை எடுத்துத் தன் தாயின் முகத்தை நோக்கி வீசி எறிந்திருக்கிறான். தண்ணீர் குடிக்கும் குவளையைத் தரையில் அடித்து நசுக்கி யிருக்கிறான். இதைப் போல எவ்வளவோ காரியங்களை அவனுடைய முன் கோபம் செய்திருக்கிறது. ஆனால் இதையெல்லாம் சந்தோஷத்தோடு சமாளித்துக் கொண்டு போக நாகம்மாளால் முடிந்ததே தவிர, சிங்காரத்தால் முடியவில்லை. தினம் யாராவது ஒரு பையன் மூத்து 'அடித்தான்' 'குத்தினான்' என்று அழுது கொண்டு வருவதும், நாகம்மாள் அவனைச் சமாதானம் செய்து அனுப்புவதும் தீராதவேலை. ஆனால் சிங்காரத்துக்கு இவைகளெல்லாம் சகஜமாகவே படாது. அவன் அப்படியே மனக்குன்றிப் போய் உட்கார்ந்து விடுவான். இதை எண்ணும் போது ஒவ்வொரு சமயம் அவனுக்குச் சாப்பாடு, தூக்கம் கூடப் பிடிக்காது.



சிங்காரம் எந்த பயங்கரமான சம்பவத்தை எதிர்பார்த்தானோ அந்தச் சம்பவமும் சொல்லி வைத்தாற் போல் நடந்து விட்டது. சிறு சிறு விஷயங்களுக்கெல்லாம் பயந்து நடுங்கிய அவனுக்கு, வாழைக் கொல்லைப் படுகையில் பெரியசாமியின் மகன் கண்ணுவை, தன் மகன் கத்தியால் குத்திக் கொன்று விட்டான் என்ற செய்தி எப்படிப் பட்டதாயிருக்கும்?

வழக்கம்போலப் போலீஸார் வந்து மூத்துவைக் கைது செய்து கொண்டு போனார்கள். தஞ்சை ஜில்லா மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஒரு மாத காலமாக விசாரணை நடந்து முடிந்து விட்டது. நாளைய தினம் தீர்ப்பு.

தீர்ப்பு என்னவாக இருக்கும்? கொலைக்கு மரண தண்டனைதானே சரியான தீர்ப்பு? ஆனால் மாஜிஸ்டிரேட்டுக்குக் கொஞ்சம் கருணை மனமிருந்தால் தண்டனையைக் குறைக்கலாம் அல்லவா? நாகம்மாளுக்கு இப்படி ஒரு அபிப்ராயம். ஆனால் சிங்காரத்துக்குத் துளிக் கூட நம்பிக்கையில்லை. அவனும் நிலபுலனையெல்லாம் அடமானம் வைத்துத் தன் மகனுக்காக வழக்காடிப் பார்த்தான். மாஜிஸ்டிரேட்டின் பேச்சும் முகமும் மிகவும் கண்டிப்பாகவும் கடுமையாகவுமே இருந்தது. ஆரம்பத்திலிருந்தே அவனுக்கு நம்பிக்கை கொடுப்பதாயில்லை. மூத்துவுக்காக ஆஜரான வக்கீலுக்கும் முழு நம்பிக்கை கிடையாது. நாகம்மாள் அன்று முழுதும் அழுத வண்ணமாகவே இருந்தாள். சிங்காரம் எமனை எதிர் பார்ப்பதுபோல் முகத்தில் பிரேதக் களை சொட்ட ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருந்தான்.

• • •

மறு நாள் தீர்ப்பை எதிர்பார்த்துக் கோர்ட்டில் சிறுகுடி கிராமவாசிகள் அவ்வளவு பேரும் காத்திருந்தனர். ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகப் பேசிக் கொண்டனர். கைதிக் கூண்டில் நின்று கொண்டிருந்தான் மூத்து. நாகம்மாள் அழுத கண்ணைப் புடவைத் தலைப்பால் ஓயாது துடைத்த வண்ணமாக இருந்தாள். சிங்காரம் ஏதோ பித்துப் பிடித்தவன்போல் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தான். ஜூரர்கள் கூடி அபிப்பிராயம் தெரிவித்தபின் மாஜிஸ்டிரேட் தன் தீர்ப்பை மிகவும் சுருக்கமாகவே எழுதிப் படிக்கலானார். அவர் முகம் எப்பொழுதும்போல் கடுமையாகவே இருந்தது. அவர் சொன்னார்: "மூத்து கண்ணுவைக் கத்தியால் குத்திக் கொலை செய்தது நிரூபிக்கப்பட்டாலும், அவன் வேண்டுமென்று செய்ததாகத் தெரியவில்லை. ஆகவே எதிரிக்கு நான் ஆறுமாதக் கடுங் காவல் தண்டனை விதிப்பதுடன் ஆறு

வருஷங்களுக்கு சன்னடத்தை ஜாமீனும் வாங்க விரும்புகிறேன்."

இதைக் கேட்டதும் எல்லோருக்கும் பிரமிப்பாகவே யிருந்தது. சாகம்மாளுக்கு மாஜிஸ்டிரேட்டின் ஸ்தானத்தில் தன் குல தெய்வமே வந்து உட்கார்ந்து சொல்வது போல இருந்தது.

*   *   *

தூக்குத் தண்டனையிலிருந்து தப்பிய முத்துவுக்கு ஆறுமாத தண்டனை அவ்வளவு கடுமையானதாகத் தோன்றவில்லை. எப்படியோ ஆறு மாதம் ஓடி விட்டது. அந்த ஆறு மாத காலத்தில் அவன் தன் உருவிலும் குணத்திலும் எவ்வளவோ மாறிவிட்டான். அவன் வீட்டுக்கு வந்தபோது, அவன் வாழ்க்கையிலேயே என்றுமில்லாதபடி அவனுடைய தகப்பன் அவனை அன்பாக அணைத்துத் தனிமையான ஒரு இடத்துக்கு அழைத்துப் போய் தன் எதிரில் உட்கார வைத்து "முத்து, நல்ல மாட்டுக்கு ஒரு சூடு போதும் என்று சொல்லுவார்கள். அது மாட்டுக்கு மாத்திரம் அல்ல; மனுஷாளுக்கும் பொருந்தும். தெரிஞ்சுக்கோ!" என்றான்.

"நான் இனிமேல் இப்படிச் செய்ய மாட்டேன் அப்பா!" என்றான் கெஞ்சுவது போல் முத்து தலை குனிந்த வண்ணம்.

"எனக்குத் தெரியும். இனிமேல் நீ அப்படிச் செய்ய மாட்டாய். என் மகன் தானே நீ; இந்த ரத்தந்தானே உன் உடம்பிலேயும் ஓடுகிறது—ஆமாம்! இந்த ரத்தந்தான் உன்னையும் இப்படிச் செய்ய வைத்தது. வெகு நாளாக நினைத்துக் கொண்டேயிருந்தேன்; கணத்துக்குக் கணம் எனக்கு பயந்தான், ஒரு நாள் இப்படி நேரும் என்று. இந்த அப்பனுக்கு மகன் தானே நீ" என்று சொல்லி விட்டு முத்துவின் முகத்தைப் பார்த்தான். அவன் ஒன்றும் பதில் பேசாமல் தகப்பனுடைய முகத்தையே ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

சிங்காரம் மறுபடியும் பேச ஆரம்பித்தான்:

"இந்தக் கதை உனக்குத் தெரியாது. இந்த ஊரில் ஒருவருக்கும் தெரியாது. ஏன், கல்யாணமாகி முப்பது வருஷத்துக்கு மேலே ஆகுதே, உன் தாயாருக்குக்கூட இந்த ரகசியம் தெரியாது. இதோ பார்: இனியும் இது அவளுக்குத் தெரியக் கூடாது. உன் மனசிலேயே வைத்துக் கொள். இந்த ஊரிலே நான் நல்லவன் என்று பேரெடுத்து விட்டேன். ஆனால் நானும் உன்னைப்போல சிறு வயதிலே ஒருவனைக் கொன்றவன்தான்......"

இதைக் கேட்டதும் முத்து துள்ளிக் குதித்தான்.

"இதைக் கேட்க உனக்கு ஆச்சரியமாகத்தானிருக்கும். ஆனால், நல்ல மாட்டுக்கு ஒரு சூடு போதும். தெரியுதா? நீ எப்படி முன்கோபக் காரனாக இருந்தாயோ அப்படித்தான் நானும் ஒரு காலத்திலே இருந்தேன். நீ என்னைப் போல முன்கோபக்காரனாயிருப்பதைக் கண்டுதான் 'அப்பனுக்குப் பிள்ளை தானே'ன்னு உன்னைச் சொன்னேன். நீ குழந்தையாய் இருந்த போதிருந்தே இதை எண்ணித்தான் நான் பயந்து கொண்டிருந்தேன். நான் உன்னை அடக்கி வைக்க நினைத்தது உன் தாயாருக்குக் கூடப் பிடிக்கவில்லை. ஆனால் அவளிடம் உண்மையைச் சொல்லவில்லை.

"இது என்னுடைய ஊரில் நடந்த கதை. வருஷம் நாற்பதுக்கு மேலே ஓடிப் போய் விட்டது. அப்போது எனக்கு வயது பதினெட்டுத்தான் இருக்கும். நிலத்துக்குத் தண்ணி பாய்ச்சுகிற

அதிலுமா அஹிம்சை!

லூயி பிஷர் என்ற பிரபல அமெரிக்க நிருபர் காந்திஜியுடன் சேவா கிராமத்தில் ஒரு வாரம் தங்கியிருந்தபோது, காந்திஜி அவருக்கு வேகவைத்த பல காய்கறிகளையும் கீரைகளையும் உணவாகக் கொடுத்து வந்தார். இது பிஷருக்குப் பிடிக்கவில்லை.

"இரண்டு நாளைக்குள் காய்கறி அவியலையும் பாலைக் கீரையையும் நான்கு தடவை சாப்பிட்டு விட்டேன். இனி அதைச் சாப்பிட முடியாது" என்றார் அவர் காந்திஜியிடம்.

"உங்களுக்குக் காய் கறிகள் பிடிக்காதா?" என்று கேட்டார் காந்திஜி.

"பிடிக்கும்; ஆனால், அதன் ருசி தான் பிடிக்கவில்லை" என்றார் பிஷர்.

"அப்படியா! நீங்கள் உப்பும் எலுமிச்சம்பழமும் சேர்த்துக் கொள்ள வேண்டும்" என்றார் காந்திஜி.

"ஏன், இருக்கும் ருசியையும் கொல்லவா?" என்று கேட்டார் பிஷர்.

"இல்லை, ருசியை அதிகப்படுத்து வதற்காகத்தான்"

"ஓஹோ, நீங்கள் அஹிம்சாவாதி. ருசியைக்கூட கொல்லமாட்டீர்களோ!" என்றார் பிஷர் சிரித்துக் கொண்டே.

போது சண்டை வந்து விட்டது. எனக்கும் அண்டை வயல்காரனுக்கும் வார்த்தைகள் முற்றி விடவே, கையிலிருந்த மண்வெட்டியால் துளிக் கூட யோசிக்காமல் அவனை அடித்து விட்டேன். அந்தப் பாவி நின்ற இடத்திலேயே விழுந்து செத்துப் போய் விட்டான். விசாரணை நடந்தது. எனக்கு ஒரு வருஷக் கடுங்காவல் தண்டனை கிடைத்தது. அன்றிருந்து நான் ரொம்ப ஜாக்கிரதையாக இருந்து வருகிறேன். மற்றவர்களோடு பேசும்போது அளந்து நிதானித்துத்தான் பேசுகிறேன். பிரந்தியார் வழுச்சண்டைக்கு இழுத்தாலும் கையெடுத்துக் கும்பிட்டு விட்டு வந்துவிடுவேன். யாராவது அடித்தாலும் நான் பட்டுக் கொள்வேன். திருப்பிக் கை ஓங்கமாட்டேன். இதோ பார்! நாம் நல்லவனாப் போனா நம்ம கிட்டே யாராவது வருவானா? நீ கோபப் படுகிற போதும் பிடிவாதம் செய்கிற போதும் நான் என் கதையை நினைத்துப் பார்த்துக் கொள்வேன். முன் கோபம் ரொம்பக் கெடுதியைப் பண்ணும். இனிமேல் நீ அப்படி இருக்க மாட்டாய் என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால் நீ என் மகன் அல்லவா? நான் மறு பிறப்பு எடுத்ததுபோல, நீயும் இப்போதிருந்து மறு பிறப்பு எடுத்திருப்பாய். இனிமேல் ஜாக்கிரதையாக நடந்து கொள். ஆமாம், தெரிகிறதா?" என்றான் தன் மகனிடம் அன்பு தொனிக்க.



முத்து தன் தகப்பனைப் பார்த்த பார்வையிலிருந்தே அவன் முற்றிலும் மாறி விட்டான் என்பது தெளிவாகியது.

தெரியாத விஷயம்

ஒரு பிரிட்டிஷ் பார்லிமெண்ட் மெம்பர் நாள்தோறும் பார்லிமெண்டுக்குப் போகும் போதும் வரும் போதும், அங்கே வாசலில் ஒரு கான்ஸ்டபிள் நின்று கொண்டிருப்பதைக் கண்டார். பகலோ இரவோ, வெய்யிலோ, குளிரோ - அவன் அங்கேயே நின்று கொண்டிருப்பான். அவன் எதற்காக அங்கே நிற்க வேண்டும் என்பதை அறிய அவருக்கு ஆவல் உண்டாயிற்று.

ஒருநாள் அவர் அந்தக் கான்ஸ்டபிளைப் பார்த்து, "நீ எதற்காக அப்பா இங்கே நிற்கிறாய்?" என்று கேட்டார். கான்ஸ்டபிள் திடுக்கிட்டு விழித்தான். சற்று நேரம் யோசனை செய்துவிட்டு, "எனக்குத் தெரியாதே!" என்றான்.

மெம்பர் வியப்படைந்து, "என்ன, உனக்குத் தெரியாமலா நீ நிற்கிறாய்?" என்று கேட்டார்.

"ஆம், மேலிடத்து உத்தரவு; நிற்கிறேன்" என்றான் அவன்.

மெம்பர் சபைக்குள்ளே போய், அன்று கேள்வி நேரம் வந்தபோது, எழுந்து "நமது சபையின் வாசலிலே ஒரு கான்ஸ்டபிள் நிற்கிறானே;—அவன் எதற்காக நிற்கிறான்?" என்று கேட்டார்.

சர்க்கார் கட்சித் தலைவர் பிரதம மந்திரியைப் பார்த்தார்; பிரதம மந்திரி மற்ற மந்திரிகளைப் பார்த்தார். மந்திரிகள் மெம்பர்களைப் பார்த்தார்கள். யாருக்கும் தெரியவில்லை.
கடைசியில் பழைய தஸ்தாவேஜுகளைப் புரட்டிப் பார்க்கும்போது விவரம் தெரிந்தது.

பல வருஷங்களுக்கு முன்பு பார்லிமெண்ட் கட்டிடத்துக்கு வர்ணம் பூசப்பட்டதாம். அப்போது சபைக்கு வரும் அங்கத்தினர்களை, வர்ணத்தின் ஈரம் காயவில்லை என்று எச்சரிக்கை செய்வதற்காக வாசலில் ஒரு கான்ஸ்டபிள் நிறுத்தப்பட்டானாம். அது ஒரு சம்பிரதாய மாகிவிடவே, ஈரம் உலர்ந்த பிறகுகூட, "என்னத்திற்காக நிற்கிறோம்?" என்பதே தெரியாமல் கான்ஸ்டபிள் அங்கே நிற்பது வழக்கமாகி விட்டதாம்!



கம்பர் தரும் காட்சி

211. ஒளிக்கவாவது உயிரை!

டி. கே. சி.

ராமனுடைய இதயப் பண்புகளை எல்லாம் நேருக்கு நேர் பக்கத்திலிருந்து பார்த்த போதே அபாரமாய் அனுபவிப்பாள் சீதை.

சிறையில் இருக்கும் போதோ நூறு மடங்கு அனுபவிக்கிறாள்.

∴

பரதனுடைய அழகைப் பார்த்து அனுபவிப்பவன் ராமன். அவன் தலையைக் கூட்டி முடித்திருப்பதையும் அதில் வளமான மாலையைக் கட்டியிருப்பதையும் பார்த்து அனுபவித்து அதைப் பற்றிப் பேசவும் செய்வான்.

மேலும்;

பரதன் கிரீடம் சூடவில்லை தான். ஆனாலும் கிரீடத்தைச் சூடியிருப்பான் என்று எண்ணி மனக் கண்ணால் அந்த அழகைக் கண்டு சீதையிடம் அதைப் பற்றியும் பேசியிருக்கிறான்.

பிறகு என்ன நேர்ந்தது?

தன்னைக் காண பரதன் சித்திர கூடத்துக்கு நடந்து வந்தான். வந்தவனுடைய சிரசு சடை விழுந்து தூசி படிந்து கிடந்தது. அதையும் ராமனது கண்கள் பார்த்தன.

உரங்கொள் தேமலர்ச்
  சென்னி, உரிமைசால்
வரங்கொள் பொன்முடி
  தம்பி வனைந்திலன்,
இரங்கு செஞ்சடைக்
  கட்டிய செய்வினைக்(கு)
இரங்கி ஏங்குவ(து)
  எண்ணி இரங்குவான்.

[உரங்கொள் தேமலர்ச் சென்னி: வளமான வாசனை கொண்ட மலர் மாலை சூடிய தலையில்; உரிமைசால் வரங்கொள் பொன் முடி: எல்லாவிதத்திலும் பொருத்தமான நன்மைக் கெல்லாம் ஆதாரமான அழகிய கிரீடத்தை; தம்பி வனைந்திலன்: பரதன் தரித்துக் கொள்ளாமல்; இரங்கு செஞ்சடைக் கட்டிய செய்வினைக்கு: இளைத்து விட்ட சடையைத் தலையில் திரும்படி இறம்படக் கட்டிய செய்கைக்கு; இரங்கி ஏங்குவது: ராமன் இரக்கங்கொண்டு வாய் பேச முடியாமல் ஏங்கி நின்றதை.]

∴

இப்படியெல்லாம் மனசில் தோன்றிய நிகழ்ச்சிகளை எண்ணி எண்ணி நைகிறாள் சீதை. அந்தத் தருணத்தில் என்ன நேருகிறது பார்க்கலாம்;

இவ்விடை அண்ணல் அவ்
  இராமன் ஏவிய
வெவ்விடை அனையபோர்
  வீரத் தூதனும்
அவ்விடை எய்தினன்
  அரிநின் நோக்குவான்
நொவ்விடை மடந்தைதன்
  இருக்கை நோக்கினான்.

[அவ்விடை: இந்த மாதிரி எண்ணிக் கொண்டிருக்கும் தருணத்தில்; அண்ணல் அவ் இராமன் ஏவிய: வீரனை அந்த ராமன் விடுத்த; வெவ்விடை அனைய: பயத்தைத் தரத் தக்க காளை போன்ற; போர் வீரத் தூதனும்: போர் வீரனான அனுமனும்; அவ்விடை எய்தினன்: அசோக வனத்தில் அந்த இடத்துக்கு வந்து சேர்ந்து; அரிநின் நோக்குவான்: கூர்ந்து கூர்ந்து நாலா பக்கமும் பார்த்தான்; நொவ்வு இடை மடந்தைதன்: துன்பத்திடைக் கிடந்த சீதையினுடைய; இருக்கை: உறைவிடம்-கண்ணுக்குப் புலப்பட்டது.]

∴

அந்த இடத்தில் கண்ணுக்கு என்ன தென்பட்டது?



வேலைக்காரி (ஜவுளி வியாபாரியிடம்) — ஐயா, அம்மாவுக்கு நீங்கள் கொடுத்த சேலை கிழிய ரொம்ப நாளாகுமோ?

வியாபாரி:— ஏன், என்ன சமாசாரம்?

வேலைக்காரி:— சீக்கிரமாகக் கிழிந்தால் நான் உடுத்திக்கொள்ள சீக்கிரமாகக் கிடைக்கும்!

கண்ணங்கரேல் என்று அரக்கியர் கூட்டமாக இருப்பது தென்பட்டது. அவர்களுக்கிடையில் அபூர்வமான அழகு படைத்த ஒரு பெண் இருக்கவுங் கண்டான்.

விரிமழைக் குலங்கிழிந்(து)
  ஒளிரும் மின்னெனக்,
கருநிறத்(து) அரக்கியர்
  குழுவிற் கண்டனன்,—
ஒருநிறத்(து) ஒருதனிக்
  கொண்டல் அரியான்
இருநிறந்(து) உற்றிடற்(கு)
  இயைந்த காந்தத்தை.

[விரி மழைக் குலம் கிழிந்து: விரிந்து கிடக்கும் மேகக் கூட்டங்களைக் கிழித்துக் கொண்டு; ஒளிரும் மின்னென: பிரகாசிக்கும் மின்னல் கொடிபோல; கருநிறத்து அரக்கியர் குழுவிற் கண்டனன்: கரு நிறமான அரக்கியர் கூட்டத்திடையே கண்டான்; ஒரு நிறத்து ஒரு தனிக் கொண்டல்: அழகிய நீல நிறத்தோடு கூடிய ஒரு அபூர்வமான மேகம் போன்ற; அரியான் இரு நிறத்து உற்றிடற்கு: இருவரின் அழகான ராமனது மார்பைச் சேரும்படிக்கான; காந்தத்தை: சீதையை காந்தமும் காந்தமும் எப்படி பொருந்துவதற்கு முயன்று கொண்டிருக்கின்றனவோ அது மாதிரி ராமனது மார்பும் சீதையும் பொருந்துவதற்கு முனை

ன்றன என்பது குறிப்பு. சீதையைப் பார்த்ததும் அப்படிப் பொருத்தம் தோன்றியது அனுமனுக்கு.]

* *

சீதையின் ஜோதியான உருவம் முதலில் கண்ணுக்குத் தென்பட்டது. பிறகு கூர்ந்து நோக்குகிறான் அனுமன். ராமன் சொன்ன லக்ஷணங்கள் அப்படி அப்படியே இருக்கின்றன.

'ராமனுடைய உள்ளத்தில் எப்படி உயிர்க்குயிராய் பதிந்திருக்கிறாள் சீதை!' என்று வியக்கிறான்.

என்னரும் உருவின்நல்
  இலக்க ணங்களும்,
வன்னல்தன் உரையொடு
  மாறு கொண்டில ;—
கள்ளவாள் அரக்கன்அக்
  கமலக் கண்ணனார்
உள்ளுறை உயிரினை
  ஒளித்து வைத்தவா!

[என்னரு உருவின்: ஒரு விதப் பழுது மில்லாத உருவத்தின்; நல் இலக்கணங்களும்: அபூர்வமான அழகுகளும்; வள்ளல் தன் உரையொடு மாறு கொண்டில: ராமன் சொன்னது போலவே இருக்கின்றன; கள்ள வாள் அரக்கன்: இந்த இராவணன்; அக் கமலக் கண்ணனார் உள் உறை உயிரினை: நம்முடைய ராமனது உள்ளத்தோடு ஒட்டிப் பிரியாதிருக்கும் உயிர்த் தத்து வத்தை; (இந்தப் பிராட்டியை) ஒளித்து வைத்தவா: என்ன பைத்தியக்காரத்தனம்! ஒருவனது உயிரை ஒளித்து வைக்கிறது என்பது உண்டா?]

அனுமனிடம் ராமன் சீதையைப் பற்றிச் சொன்னபோது உள்ளத்தில் ஸ்தூலமாக இருந்து கொண்டிருக்கிற சீதையைப் பார்த்துப் பார்த்துச் சொன்ன மாதிரி இருந்தது. சீதை ராமனை விட்டு அகலவில்லை என்கிற சொல்ல வேண்டும். இந்த உணர்ச்சி அனுமனுக்கு வந்ததும் ராவணன் செய்த காரியம் அதாவது சீதையை ஒளித்து வைத்த காரியம் பிரயோஜன மற்ற காரியம் என்றே சொல்லத் தோன்றுகிறது. இந்த அபூர்வமான உணர்ச்சியை அபூர்வமான பாவத்தோடு எடுத்துக் காட்டுகிறது மேற்கண்ட செய்யுள்.

காப்பி வாழ்க!

என்.என்

"நானும் கடந்த ஒரு வருஷமாகப் பிரயத்தனப்பட்டுப் பார்க்கிறேன், ஸார்! இந்தக் காப்பியை நிறுத்தவே முடியவில்லை!"

"ஹூம், இதென்ன பிரமாதம், ஸார்! நான் இதுவரை எழுபத்தெட்டுத் தடவைகள் காப்பி சாப்பிடுவதை நிறுத்தியிருக்கிறேன்!"

மேற்கண்ட ஹாஸ்யத் துணுக்கை நீங்களும் ஏதாவதொரு பத்திரிகையில் படித்திருப்பீர்கள். ஆஹா, அந்தத் துணுக்கில் ஆழ்ந்து பதிந்துள்ள உண்மையைக் கவனித்தீர்களா? காப்பி சாப்பிடும் பழக்கம் உள்ள யாராலும் அந்தப் பழக்கத்தை அடியோடு ஒழித்து விடுவது என்பது முடியாத காரியம். வேறு எந்தப் பழக்கத்தை வேண்டுமானாலும் நிறுத்தி விடலாம். என்னுடைய நண்பர்கள் பலர் பொடி போடுவதை நிறுத்தி யிருக்கிறார்கள்; புகையிலை உபயோகிப்பதை நிறுத்தி யிருக்கிறார்கள்; சிகரெட் பிடிப்பதை நிறுத்தி யிருக்கிறார்கள். ஆனால் ஒருவராவது காப்பி குடிப்பதை நிறுத்தவில்லை. அவர்கள் காப்பியை நிறுத்தாததற்குக் காரணம், அவர்களால் அதை நிறுத்த முடியாததுதான்!

ஒரு நண்பன் தன்னால் காப்பியை நிறுத்திவிட முடியும் என்று எங்களுடன் வீராப்புப் பேசிக் கொண்டிருந்தான். சுமார் இரண்டு மணி நேரம் சென்ற பிறகு, ஒருவருக்கும் தெரியாமல் காப்பி ஹோட்டலுக்குள் அவன் நுழைந்ததை இன்னொருவன் பார்த்து விட்டான். பிறகு அவன் தன் தோல்வியை ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியுமா?

தற்காலத்தில் கிழவி முதல் குழந்தை வரை எல்லோரும் காப்பி பக்தர்களாக இருக்கிறார்கள். நூறு வயதுக் கிழவி காலையில் நான்கு மணிக்கே எழுந்திருந்து சூடாகக் காப்பி குடித்தாக வேண்டும் என்கிறான். காப்பி குடிக்கவில்லை என்றால், மேலே வேறு ஒரு காரியத்திலும் புத்தி செல்வதில்லையாம்! எழுந்து பல் துலக்கி விட்டுச் சாப்பிடச் சோம்பலுள்ளவர்கள், படுக்கையில் படுத்தபடியே, 'பெட் காப்பி' சாப்பிடுகிறார்கள்! காப்பியைக் குடித்து விட்டு மறுபடியும் தூங்கும் ஆசாமிகளும் உண்டு. சிலருக்குக் காப்பி சாப்பிட்டால்தான் தூக்கம் வரும்.

காப்பியைப் போல் உற்ற நண்பன் வேறு எதுவுமே கிடையாது என்று சொல்லலாம். ஒரு கப் காப்பி செய்யும் உபகாரத்தை ஒரு மனிதனால் கூடச் செய்ய முடியாது.


சற்றுப் பழக்கமுள்ள ஒருவரை ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று, "வாருங்கள் ஸார், காப்பி சாப்பிடலாம்!" என்று கூப்பிடுகிறோம். காப்பியைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுதே இருவரும் நெருங்கிய நண்பர்களாகி விடுகிறோம். ஹோட்டலிலிருந்து வெளியே வந்தவுடன் இருவரும் தோள் மீது கை போட்டுக் கொண்டு பேசுகிறோம். என்னே அந்தக் காப்பியின் மகிமை!

யாராவது ஒருவர் நமக்குப் போதிய உபசாரம் செய்யவில்லை என்றால், "அந்தப் பயல் வீட்டுக்குப் போயிருந்தேன் ஸார், அவன் ரொம்ப மரியாதைக் குறைவாக நடந்து கொண்டான்! ஹூம்... 'காப்பி சாப்பிட்டுப் போ' என்றுகூட ஒரு வார்த்தை சொல்லவில்லை என்றால், பார்த்துக் கொள்ளுங்கள்!" என்கிறோம். அவர் நமக்கு ஒரு கப் காப்பி கொடுத்திருந்தால், நம்மை ரொம்பவும் மரியாதையுடன் உபசரித்ததாக எண்ணிக் கொண்டு விடுகிறோம்! ஒரு கப் காப்பிக்குத்தான் எவ்வளவு மகிமை!

கல்யாண வீடுகளில், வந்த விருந்தினர்களுக்கும், சம்பந்திகளுக்கும் கொடுக்கப்படும் காப்பியின் தன்மை சாயத்தைப் போல் மாறிக் கொண்டே வரும். நேரம் ஆக ஆக, காப்பியும் வெந்நீரும் அடிக்கடி சந்தித்துக் கொண்டு சங்கமம் ஆகும். நேரம் செல்லச் செல்ல, கூட்டம் அதிகரிக்கத் தொடங்கினால், காப்பியே மறைந்து போய் முழு வெந்நீர் கொடுக்கப்படுவதும் உண்டு!

சமையலறையிலிருந்து 'கம்'மென்று வாசனை வருகிறது. மீனு காப்பி தயாரித்துக் கொண்டிருக்கிறாள் என்பது தெரிகிறது. சமையலறைக்குப் போய், சூடாக ஒரு கப் 'அடிக்க' வேண்டும். அந்த இன்பத்தை விடப் பெரிய இன்பம் கூட இருக்கிறதா, என்ன?





அவன் சென்ற உலகம்

என். கிருஷ்ணம்மாள்

"அம்மா! அம்மா!"

"ஏண்டா, கண்ணே! உடம்பை என்ன செய்கிறது?"

"உடம்பு ஒன்றும் இல்லை அம்மா, அதோ பார், வானத்திலே சந்திர மாமாவை! அதை எனக்குப் பிடித்துக் கொடு, அம்மா! ரொம்ப ஆசையா யிருக்கு."

"அதைப் பிடிக்க முடியாதுடா, கண்ணு! வானம் ரொம்ப உயரம் அல்லவா? என் சமத்து, நீ சீக்கிரமாய்த் தூங்கு. உடம்பை அலட்டிக் கொள்ளாதே! அப்புறம் டாக்டர் நிறையக் கசப்பு மருந்து கொடுப்பார்."

"ஐயோ, வேண்டாம்மா! எனக்குக் கசப்பு மருந்து வேண்டாம். சந்திரமாமா தான் வேணும், போ!"

"பிடிவாதம் செய்யாதே, என் செல்வமே! நான் சொன்னா கேட்க மாட்டாயா?"

"ஊஹூம், முடியாது. நீயும் கூட வா! நாம் இரண்டு பேருமே போய்ச் சந்திரனை எடுத்துக் கொண்டு வரலாம், வாம்மா!"

"வானத்திலே நாம் எப்படி ஏற முடியும் கண்ணே?"

"நம்ம வீட்டு மாடிமேலே ஒரு ஏணியை வச்சு, அது மேலே ஏறினாப் பிடிக்க முடியாதா?"

"முடியாதுடா, கண்ணு! பேசாமல் தூங்கு. என் கண் அல்லவா? உனக்கு ஒரு கதை சொல்கிறேன், கேள்"

"கதை வேண்டாம்மா! சந்திர மாமா தான் வேணும், அம்மா!"

"கண்ணே! அதிகமாய்ப் பேசாதே. தலையை வலிக்கும். ஜுரம் ஜாஸ்தியாகும். நீ இப்போ தூங்கினால் நான் உனக்கு ஒரு மோட்டார் வாங்கித் தருவேன்."

"மோட்டாரா? நிஜமாவா, அம்மா?"

"ஆமாம், நீ பேசாமல் தூங்கணும்! அப்போதான் வாங்கித் தருவேன்."

"சரி, அம்மா!"

தன் சின்னஞ்சிறு கைகளினால் அம்மாவை இறுக அணைத்துக் கொண்டு, தான் விளையாடப் போகும் மோட்டாரைப் பற்றி நினைத்துச் சந்தோஷப் பட்டுக் கொண்டே கண்ணயர்ந்தான் பார்வதியின் அருமை மகன் கண்ணன்.

பாவம், பார்வதி! அவள் எப்படி மோட்டார் வாங்கிக் கொடுப்பாள்? குழந்தை தூங்குவதற்காக ஒரு பொய் சொல்லி விட்டாள். அதை நிறைவேற்ற அவளுக்குச் சக்தி ஏது? இன்று அவள் இருக்கும் நிலைமையில் அது முடியுமா? கண்ணனுடைய அப்பா மட்டும் உயிரோடிருந்தால், அவர் சந்திரனையும் கொண்டு வந்து கொடுத்திருப்பார்: இந்திரனையும் கொண்டு வந்து கொடுத்திருப்பார். அவ்வளவு சாமர்த்தியசாலி அவர். ஆனால், பார்வதியினுடைய துரதிர்ஷ்டம் அவரை விழுங்கி ஏப்பம் விட்டு விட்டதே! திக்கற்ற அவளுக்கு யார் கதி?

"அம்மா!" "அம்மா!" என்றான் கண்ணன் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டு. பதறிப்போய் எழுந்த பார்வதி, "கண்ணு, ஏண்டா, என்ன வேணும்? இன்னும் கொஞ்சம் கஞ்சி தரட்டுமா?" என்று கேட்டாள்.

"வேண்டாம்மா! பக்கத்து வீட்டு கோபு எப்பொழுதும் என்னைப் பார்த்து கேலி பண்றானம்மா! அவனுடைய அப்பா அவனுக்கு எல்லாம் வாங்கித் தருவாராம். எனக்கு மட்டும் அப்பாவே இல்லையாம்! ஏம்மா, நிசமா எனக்கு அப்பாவே இல்லையா? ஏம்மா, நீ அழறாய்? பேசமாட்டியா?"

"ஒன்றும் இல்லையடா ராஜா! உங்க அப்பா வானத்திலே சுவாமி கிட்ட போய் விட்டார். இனி இங்கே வரமாட்டார்."

"அப்படியானால், பாட்டி, தாத்தா எல்லாரும்?"

"எல்லாரும் சுவாமி கிட்டே போய் விட்டார்கள்"

"பின்னே ஏனம்மா நீ கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே வானத்துக்கே போக முடியாதுன்னு சொன்னே! பாட்டி, தாத்தா, அப்பா எல்லோரும் தான் போயிருக்கிறார்களே; அவர்களைப்போல நானும் அங்கு போனால் ஜோரா சந்திர மாமா கிட்டே விளையாடலாம் இல்லையா?"

"அப்படி யெல்லாம் சொல்லாதேடா ராஜா! அவாளெல்லாரும் செத்துப் போய் விட்டார்கள். அதனாலே தான் வானத்துக்குப் போக முடிந்தது. நீ இப்படியெல்லாம் பேசினால் எனக்கு ரொம்ப வருத்தமாயிருக்கும். அப்புறம் நான் அழுவேன்."

"வேண்டாம்மா! நீ அழாதே! இனிமேல் இப்படி யெல்லாம் சொல்ல மாட்டேன்."

"சரி; சமத்தாயிரு. நான் உனக்குக் கொஞ்சம் கஞ்சி கொண்டு வரேன்!" என்று உள்ளே போனாள் பார்வதி. சற்று நேரம் கழிந்து ஜுரம் அதிகரிக்க ஆரம்பித்தது. ஜுர வேகத்தில் வாயில் வந்ததை எல்லாம் புலம்ப ஆரம்பித்தான் கண்ணன். பார்வதிக்கு இவ்வுலகத்தில் உள்ள ஒரே சிறு ஆதரவும் சாய்ந்து விடுமோ என்னவோ?

* * *

ஏராளமான நில புலன்கள், வீடு, வாசல், ரொக்கம் முதலிய சகல ஐசுவரியங்களும் நிறைந்த லட்சாதிபதி கங்காதர முதலியாருடைய மகன் சுந்தரம், ஓர் ஏழை மளிகைக்கடைக்காரர் பெண்ணைக் காதலித்தான் என்றால் அது நம்பக்கூடிய விஷயமா? ஆனால், பார்வதியின் சௌந்தரிய லக்ஷ்மியின் முன்பு அவனுடைய தனலக்ஷ்மி அவனுக்கு அவ்வளவு பிரமாதமாகத் தோன்றவில்லை. முடிவில் யாருடைய சம்மதமுமின்றி எல்லோருடைய விரோதத்தையும் சம்பாதித்துக் கொண்டு சுந்தரம் பார்வதியைக் கல்யாணம் செய்து கொண்டான். அவன் விருப்பம் நிறைவேறியது. ஆனால் விதி அவனுக்கு விரோதமாக எத்தகைய சதி செய்து கொண்டிருக்கிறதென்பதை அவன் உணரவில்லை. வளர்பிறைச் சந்திரனுடைய வெண்ணிலவின் குளிர்ச்சியான ஸ்பரிசம் போன்று அவர்கள் வாழ்க்கை ஆறு மாத காலம் இன்பமாய் நடந்தது. கால தேவன் அவர்களுடைய வாழ்க்கையைக் கண்டு பொறாமை கொண்டான். சுந்தரத்தைப் பார்வதியிடமிருந்து பிரித்து விட அவனுக்கு என்ன கல் மனமோ?

திடீரென்று ஒரு நாள் சுந்தரம் 'ஜுரம்' என்று படுத்தான். அப்புறம் அவன் எழுந்திருக்கவே இல்லை. கல்யாணமான ஏழாவது மாதமே பார்வதி விதவையானாள். பிள்ளையைப் பறி கொடுத்த கங்காதர முதலியார் பார்வதியை மனதார வாயாரச் சபித்தார். ஆனால் என்ன பிரயோஜனம்?

எட்டு மாதம் கழித்து அழகிய ஸ்வர்ண பிம்பம் போலக் கண்ணனைப் பெற்றெடுத்தாள் பார்வதி.

குழந்தையைக் கண்டு அவள் தன்னுடைய துக்கத்தை எல்லாம் மறந்தாள். கரை காணாத ஆனந்தம் கொண்டாள். சகிக்க முடியாத வறுமையின் கொடுமையாலும் சொந்த அண்ணனுடைய நிர்ப்பந்தத்தாலும் ஜீவனாம்சம் கேட்டாள் பார்வதி. ஆனால் ராட்சஸ குணம் படைத்த கங்காதர முதலியாரா கொடுப்பவர்? அவர் ஜீவனாம்சம் கொடுக்க மறுத்ததுமன்றி, பார்வதியின் மேல் வீண் பழியையும் சுமத்தினர். கண்ணன் சுந்தரத்தின் குழந்தையே அல்லவென்று

* * * * * * * * * * *

கருமி நெ. 1.

கருமித்தனத்திலே புகழ்பெற்ற ஹைதராபாத் நைஜாம் ஒரு மாதத்துக்கு அறுபது ரூபாய்க்கு மேல் செலவழிக்க மாட்டாராம். உடைகள் நைந்து கிழிந்து போகும் வரை அதைக் கீழே போட மாட்டாராம்.

நைஜாமின் கருமித்தனத்தை விளக்க ஒரு கதை உண்டு.

நைஜாம் ரொம்பக் காலமாக ஒரு கைத்தடியை உபயோகித்து வந்தார். ஒரு முறை அது கீழே விழுந்தோ, அல்லது வேறு எப்படியோ ஒரு பக்கம் உடைந்துவிட்டது.

அப்போது லார்ட் லின்லித்கோ இந்திய வைஸிராயாக இருந்தார். அவர் நைஜாமைப் பார்க்க ஹைதராபாத்துக்கு வந்தார். நைஜாம் அவரை எதிர்கொண்டு அழைப்பதற்காக ஸ்டேஷனுக்குப் போயிருந்தார்.

லார்ட் லின்லித்கோ ரயிலை விட்டுக் கீழே இறங்கி வந்தார். அப்போது, நைஜாம் தம்முடைய உடைந்துபோன தடியை முன்னால் ஊன்றி அதன்மீது இலேசாகச் சாய்ந்து கொண்டிருந்தார். தடி மிகவும் வளைந்து ஒடிந்து விடும்போல இருந்தது.

லின்லித்கோ இதைப் பார்த்தார். "நவாப் சாஹப். இது ரொம்ப ஆபத்து. இந்தத் தடியை வீசி எறிந்துவிட்டு வேறொரு தடியை வாங்கிக் கொள்ளுங்கள்" என்றார்.

நைஜாம் சிரித்துக் கொண்டே, "புதுத்தடி எதற்கு? உடைந்த பகுதியைச் சுற்றி ஒரு பூண் போட்டுக் கொண்டால் சரியாய்ப் போகும்" என்றார்.

* * * * * * * * * * *

அவர் சாதித்து விட்டார். வழக்கில் கங்காதர முதலியாரே ஜயமடைந்தார்.

மனிதர்கள் சோதித்துக் கைவிட்ட பார்வதியை இப்போது கடவுளும் சோதிக்க எண்ணங் கொண்டார்போலும்!



இரவு நான்கு மணி இருக்கும். புலம்பத்தை நிறுத்தி விட்டு சுய நினைவு பெற்ற கண்ணன் ஆனந்தமாக அம்மாவை அழைத்தான். பழைய நினைவுகளை நினைத்து மனம் குழம்பியிருந்த பார்வதி ராஜுவின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தாள்.

"அம்மா, அம்மா, நான் ஒரு கனவு கண்டேன் அம்மா! அதை நினைக்கப் பார்த்தால் ரொம்ப சந்தோஷமாயிருக்கு, ஆனால் பயமாகவும் இருக்கு அம்மா!"

"அது என்ன கனவுடா, கண்ணு?"

"நீ வாங்கித் தரேன்னு சொன்னே பார், மோட்டார்-அதுமாதிரி ஒரு மோட்டாரை வைத்துக் கொண்டு நான் தெருவிலே விளையாடிக் கொண்டிருந்தேன். அப்போ நல்ல சிவப்பா, ஜோரா, ஒரு மாமா வந்து 'கண்ணு, நான்தான் உங்க அப்பா! நீ என் கூட வா. அங்கே, சந்திரனுடனும், நட்சத்திரத்துடனும் விளையாடலாம்' என்று சொன்னார். நானும் 'சரி' என்றேன். உடனே அந்த மாமா என்னை அப்படியே இறுகப் பிடிச்சு உசரே பறந்து போயிட்டார். உசரப் போன உடனே எனக்கு ரொம்பப் பயமாயிருந்தது. ஏம்மா, நிஜமா அப்பா வருவாராம்மா?—ஐயையோ, ஏனம்மா நீ அழுகிறாய்? உனக்குப் பய்மாயிருக்கா? அழாதேம்மா! இனிமேல் மாமா வந்தா 'நான் உங்க கூட வல்லே'ன்னு சொல்லி விடுகிறேன், அம்மா! அதுக்காகவா நீ அழறே?"

பாவம், அவன் என்ன பதில் சொல்ல முடியும்? கனவின் தாத்பரியம் அவன் எண்ணுவது போலவே விபரீதமாகவே முடிந்து விட்டால்?


• • •

அன்று எதிர்வழக்காடி தன் வஞ்சத்தைத் தீர்த்துக்கொண்ட கங்காதர முதலியாருடைய கல் மனமும் காலப்போக்கில் கொஞ்சம் கொஞ்சமாக இளக ஆரம்பித்தது. அவருடைய மனச் சாட்சியே அவரைச் சித்ரவதை செய்தது. போனது போக, தன் அந்திய காலத்திலாவது பேரனைப் பக்கத்தில் வைத்துப் பார்க்க வேண்டும் என்று அவருக்கு ஆசை உண்டாயிற்று. என்ன பொய் சொன்னாலும் சுந்தரத்தின் பிள்ளைதான் கண்ணன் என்பது அவர் அறியாத விஷயமா? பேரப் பிள்ளையின் மழலையையும், ரோஜாப்பூ போன்ற ஸ்பரிசத்தையும், கண் குளிரும் அழகையும் அனுபவிக்க விரும்பிய அவர், கடைக்குச் சென்று அவனுக்கு விதம் விதமான உடுப்புகள், விளையாடுவதற்கு ஏராளமான விளையாட்டுச் சாமான்கள், ஏறிக் கொண்டு விட ஒரு அழகிய சிறிய மோட்டார் வண்டி, நிறையத் தின்பண்டங்கள் எல்லாம் வாங்கிக் கொண்டு மோட்டாரில் புறப்பட்டார்.

அப்போது அவர் மனதிலிருந்த ஒரு பெரிய பாரம் இறங்கியது போல் இருந்தது.

• • •

காரிலிருந்து இறங்கி வெகு ஆசையுடன் வாசற்படியில் காலை வைத்தவுடன், "அடே, என் செல்வமே, என்னை விட்டு விட்டு நீ எந்த உலகத்துக்குப் போய் விட்டாய்!" என்று அடிவயிற்றிலிருந்து பீறிக்கொண்டு வரும் கன்றையிழந்த தாயின் குரல், அவர் காதில் பழுக்கக் காய்ச்சிய சட்டியைச் செருகுவதுபோல் இருந்தது. கங்காதர முதலியார் ஸ்தம்பித்துப் போய் சிலைபோல அசைவற்று அப்படியே வாசலில் நின்றார்



அவளுடைய பொக்கிஷம்
பண்டிட் டி. கோபாலாசார்லுவின்
அருணா
கர்ப்பாசயரோக நிவாரணி
ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.



ஸாரிடோன்
Saridon
வலியை வெகு சீக்கிரமாக போக்குகிறது



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119. Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



ALKI மே 23, 1948 4 அண

REGD. NO. M. 4392



பம்பாய் ஆபீஸ்: 142, ஓல்டு மோடி ஸ்ட்ரீட், போர்ட்
மதுரை பிராஞ்சு: 20-A, மேலக்கோபுர வீதி, மதுரை